2023

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை-2023

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**2023 ஆண்டிற்கான செலவுத்தலைப்புடன் தொடர்புபட்ட நிதி செயலாற்றுகை அறிக்கை பக்கம் 29-36 இல் அடங்கும்**

| | பொது நிர்வாகப்பிரிவு | உள்நாட்டலுவல்கள் பிரிவு | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப்பிரிவு |
|---|---|---|---|
| | சுதந்திர சதுர்க்கம்,<br>கொழும்பு 07,<br>இலங்கை | "நில மெதுர"<br>எல்விடிகல மாவத்தை,<br>நாரஹேன்பிட்ட<br>கொழும்பு 05<br>இலங்கை | இல. 330,<br>டாக்டர். கொல்வின் ஆர்.டி.<br>சில்வா மாவத்தை (யூனியன் பிளேஸ்),<br>கொழும்பு - 02,<br>இலங்கை |
| | 011-2696211/13,<br>011- 2166000 | 011 - 2050450 | 011 – 2 305326 / 327,<br>2303280 |
| | 011–2695279 | 011 - 2551071 | 011 - 2 699 720 |
| | information@pubad.gov.lk | info@moha.gov.lk | info@pclg.gov.lk |
| | www.pubad.gov.lk | www.moha.gov.lk | www.mpclg.gov.lk |

## கௌரவ பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் வாழ்த்து



பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்பது பாரிய பரப்பளவில் பரந்து விரிந்துள்ள அமைச்சு ஆகும். பொது மக்களுக்கான பணியின் வசதிக்காக நிரல் அமைச்சின் கீழ் அரச உள்நாட்டலுவல்கள் அமைச்சு, அரச மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆகிய இரண்டு அரச அமைச்சுக்கள் அதனுள் உந்து சக்திகளாக செயலாற்றுகின்றன. அரசகரும மொழிகள் திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், இலங்கை உள்ளூராட்சி நிறுவனம், அரச கரும மொழிகள் ஆணைக்குழு, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், மனித வள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை, தொலைக் கல்வி நிலையம் மற்றும் அரச சேவை பரஸ்பர சேமலாப நிதிய சங்கம் ஆகிய நிறுவனங்கள் கடந்த ஆண்டு முழுவதும் தமது சேவைப் பொறுப்புகளை உயர் மட்டத்தில் நிறைவேற்றுவதில் ஆற்றிய பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

கிராமிய மறுமலர்ச்சி மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான இணைந்த பல்துறை திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்து இந்த சவாலான தருணத்தில் அமைச்சின் சொந்த பொறுப்புச் சட்டகத்துக்கு அப்பால் சென்று பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. கிராமியத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல்களில், கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஏற்கனவே பரீட்சைகள் மூலமான ஆரம்பகட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

பல்நோக்கு செயலாற்றுகை செயலணியை நிரந்தர ஊழியர்களாக நியமிப்பதற்கும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் முன்னேற்றத்தை உயர்த்தி 55,091 ஓய்வூதியதாரர்களுக்கு பணிக்கொடையாக 65 பில்லியன் ரூபாய் செலுத்துவதற்கும் 39,539 புதிய ஓய்வூதியதாரர்களை தொழிற்படுத்தவும் இயலுமை கிட்டியது.

எத்தகைய சவால்கள் இருப்பினும் தொடர்ச்சியான மற்றும் தரமான அரச சேவையொன்றை பேணுவதற்கான பதவி உயர்வுச் செயன்முறை கடந்த 2023 ஆம் ஆண்டில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திறன் விருத்தித் திட்டங்களிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காண்பித்தது. அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குச் செல்லும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தல் சிறப்பானதாகும். மேலும் பிரதேச நிர்வாகத்தை பலப்படுத்துவதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் உள்ளூராட்சித் துறையை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட ஆண்டாக கடந்த ஆண்டைக் குறிப்பிடலாம்.

பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள i வேளையில், படிப்படியாக மக்களின் வாழ்வை மீட்டெடுக்க மேற்கொள்ளப்பட்ட அடிப்படை முயற்சிகள் வெற்றியடைந்த ஆண்டாக 2023ஆம் ஆண்டை அறிமுகப்படுத்த முடியும். அரசாங்கம் என்ற ரீதியில் மிகவும் தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அந்தத் தீர்மானங்களின் நல்ல பலன்களை ஒரு நாடாக நாம் இன்று அனுபவித்து வருகின்றோம்.

இந்தப் பணியில் தங்களை அர்ப்பணித்துள்ள அரச அமைச்சர்கள், செயலாளர்கள், பிரதம உத்தியோகத்தர்கள் மற்றும் ஒட்டுமொத்த நிறுவன ஊழியர்களையும் பாராட்டுகிறேன்.

தினேஷ் குணவர்தன (பா,உ.),
பிரதமர்,
பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

## உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அவர்களின் செய்தி



2021.02.16 முதல், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சானது தனி அமைச்சகமாக செயல்பட்டு வந்தது. இந்த அமைச்சகமானது மே 27, 2022 முதல், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சகத்தின் கீழ், உள்நாட்டலுவல்கள் பிரிவாக செயல்பட்டுவருகின்றது.

புதிய அரசியலமைப்பு திருத்தங்கள், மாவட்ட மற்றும் பிதேச நிர்வாகத்தை செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் நடைமுறைப்படுத்துவற்கான திட்டங்களை உருவாக்குவற்கான பிரதான பொறுப்பும் இந்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தேசிய மட்டம் தொடக்கம் கிராமிய மட்டம் வரையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலுடன், மனித வள திறனை அதிகரிப்பதுடன் தொழிநுட்ப வசதிகளையும் பெற்றுக்கொடுத்து மனிதவள முகமைத்துவ மற்றும் வினைதிறனான மக்கள் சேவையை பெற்று கொடுத்து 2023 ஆம் ஆண்டில் அடைந்து கொண்ட முன்னேற்றங்கள் தொடர்பில் இவ் அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

எமது அரசாங்கம் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னரே, வெளிப்படையான மற்றும் செயலூக்கமான பொது நிர்வாக கட்டமைப்பைக் கொண்ட அரசு வேண்டும் என்பது மக்களின் கோரிக்கைகளும் அபிலாஷைகளும் ஆகும். அதற்கு 'அரச ஊழியரின்' பொறுப்பு மிகவும் முக்கியமானது. அதற்கமைய, பொறுப்புள்ள நாட்டை உருவாக்குவதற்காக இந்த அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அரச ஊழியர்களின் பொறிமுறையில் செயலாற்றுகை ,பொறுப்பும் பொறுப்புக்கூறலும் கொண்ட செயலூக்கமான நிர்வாகத்தை கொண்ட நாட்டை உருவாக்குவதற்கு மிகவும் முக்கியமானது. சர்வதேச ரீதியாக காணப்படுகின்ற பொருளாதார சிக்கல்களுக்கு முகங்கொடுத்து அப்போது ஒதுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நிதியின் மூலம் பொருளாதார நிலைத்திருப்புடன் அபிவிருத்தி முன்னேற்றங்கள் அடைந்த கொண்டுள்ளமை மகிழ்ச்சிகரமாக விடயமாகும்.

இந்த முன்னேற்ற அறிக்கையானது தேசிய மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த ஒட்டுமொத்த முயற்சியின் விளைவாகவும்,செயற்திறனை பகுப்பாய்வு ரீதியாக நோக்கும் போது, அன்றைய அமைச்சினால் ஏற்பட்ட முன்னேற்றம் மக்களுக்கு கிடைத்த வெற்றி என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன். கடந்த காலத்தை போன்று எதிர்காலத்திலும் தமது வாழ்வாதாரங்களை சரி செய்வதில் இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை நீக்கி வளமான நாட்டை கட்டியெழுப்ப உதவுவதற்கு இந்த அமைச்சு இந்த ஆண்டிலும், வரவிருக்கும் ஆண்டுகளிலும் தொடர்ந்து பெரும் முன்னேற்றங்களை மேற்கொள்ளும் என்பதை அனைவருக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.

**அசோக பிரியந்த (பா.அ)**
**உள்நாட்டலுவல்கள் இராஜங்க அமைச்சர்**

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் இந்த வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்க முடிந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினராகவும் விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சராகவும் சில தலையீடுகளைச் செய்யக் கிடைத்ததையிட்டு ஒரு முன்னாள் மாகாணசபை உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்த காரணத்தினால் அதனை நான் ஒரு சிறப்பான வாய்ப்பாகவே கருதுகின்றேன்.

அதற்கிணங்க, கௌரவ பிரதம அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில், மாகாண சபைகளின் ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளர்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளைக்கண்டு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இங்கு மாகாண சபையின் பிரதிநிதியாக நான் பெற்ற அனுபவம் மிகவும் உதவியாக இருந்தது என்றே கூற வேண்டும்.

கடந்த ஆண்டில் புதிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போன போதிலும் அதிமேதகு ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பின் காரணமாக அனைத்து நிலுவைத் தொகைகளையும் செலுத்த முடிந்திருப்பதும் ஒரு வகையில் வெற்றியாகவே கருதுகின்றேன். ஏனெனில் இந்த ஆண்டு இறுதிக்குள் 55 மில்லியன் ரூபா சிறிய தொகையைக் கொண்டு பல உள்ளூராட்சிப் பகுதிகளில் இடைநிறுத்தப்பட்டுள்ள நூலகக் கட்டிடங்கள் மற்றும் சன சமூக நிலையங்களின் எஞ்சியுள்ள பணிகளை தற்போதுள்ள நிலுவைப் பட்டியல்களை செலுத்தினால் மாத்திரமே நிறைவு செய்ய முடியும்.

பல உள்ளூராட்சி மன்றங்களின் மயானங்கள் மற்றும் பொது கழிப்பறை தொகுதிகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்க முடிந்துள்ளது. அவ்வாறே, ‘‘கிராமிய பாலம் திட்டத்தை” புது உத்வேகத்துடன் செயற்படுத்த கிடைத்தது ஊக்கம் அளிக்கின்றது. சரியான நிபுணத்துவ ஆலோசனைகள், பயனுள்ள பொறியியல் நடைமுறைகள் மற்றும் பொருத்தமான நிர்வாக நிலைமைகளின் அடிப்படையில் 160 புதிய இரும்புப் பாலங்கள் அமைக்க வெளிநாட்டு உதவி பெறப்பட்டு, 47 பாலங்களில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதில், 26 பாலங்களின் இருபுறமும் தடுப்பணை கட்டும் பணி நிறைவடைந்துள்ளது. ‘‘இரும்புப் பாலம்’’ பொருத்துவதற்கு அனைத்து பணிகளும் தயாராக உள்ள நிலையில் தற்போது பெய்து வரும் கனமழை அதற்கு இடையூறாக உள்ளது. எனினும் கனமழை ஓய்ந்தவுடன் அந்த நடவடிக்கைகளும் நிறைவடையும்.

எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பல காரணங்களால் வீழ்ச்சியடைந்த இந்த நாட்டின் பொருளாதார நிலை முன்னேற்றமடைந்து வரும் இவ்வேளையில், இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து எமது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று 2024 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் கணிசமான அளவு பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

தற்போது மக்கள் பிரதிநிதிகள் இன்றி உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கி வந்த போதிலும் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட அன்றாடப் பணிகள் முறையாக நிறைவேற்றப்படுவதை நாம் பாராட்டுதல் வேண்டும். தற்போது இந்த நிறுவனங்கள் நிருவகிக்கப்படும் அதிகாரிகள் குழுவிற்கு உள்ளூராட்சி நிர்வாகம் குறித்த முறையான கல்வியை இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தினால் வழங்க முடிந்துள்ளதும் மகிழ்ச்சியளிக்கும் மற்றொரு விடயமாகும்.

உள்ளூராட்சி மன்றங்களை மேலும் வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கான சில தொழில்நுட்ப படிமுறைகளுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதோடு, அதற்கமைய மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக உள்ளோம்.

**ஜானக்க வக்கும்புர**

***மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்***

# பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது செய்தி



நாட்டுக்கு சிறந்த பொதுச் சேவையை வழங்குவதற்காக, மனித வளத்தின் முறையான நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சீர்திருத்தத்தின மூலம் சிறந்த ஒரு அரச ஊழியரை உருவாக்குவதே இந்த அமைச்சின் முக்கிய பணியாகும். மக்கள் நலன் சார்பான மற்றும் திருப்திகரமான ஒரு பொதுச் சேவைக்காக வினைத்திறனுடன் நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் விதிமுறைகளைத் தயாரித்தல், வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் பொதுத்துறையின் நிதி முகாமைத்துவத்துக்காக, அமைச்சு தொடர்ந்து அர்ப்பணிப்புடன் சகல அரச சேவைகளிலும் முழுமையான திறனை விருத்தி செய்து மக்களுக்குக்கான உயர் மட்ட சேவையொன்றை உறுதி செய்கிறது. உலகப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் முன்னெப்போதும் இல்லாத பல சவால்களை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டில் அந்த சவால்கள் அனைத்துக்கும் வெற்றிகரமாக முகங்கொடுத்து நிலையான பொருளாதாரத்தை நோக்கிய பயணத்தில் அரச கொள்கைகளுக்கு இணங்க அரச நிதி ஸ்திரத்தன்மையை மறுசீரமைப்பதற்கான பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் செலவின முகாமைத்துவச் செயன்முறையில் இந்த அமைச்சு பாரியதொரு பணியை மேற்கொள்கிறது.

அதன்படி, பொது முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களின் கீழ், உள்ளூராட்சி நிறுவனங்களின் அபிவிருத்தித் திட்டங்கள், கிராமப்புற பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல், சிரேஷ்ட பிரஜைகளுக்கு தொடர்ந்து ஓய்வூதியம் வழங்குதல், அவர்களது பொருளாதாரம் மற்றும் நலனை மேம்படுத்துதல், பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் ஆற்ற வேண்டிய பணிகளை மேற்கொள்ளல், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் ஊடாக மக்கள் நலன் தொடர்பான பணிகளை தொடர்ந்தும் பேணுதல், உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மேற்கொள்ளப்பட்ட முதன்மைப் பணிகளில் ஒரு பகுதியாக இதைக் குறிப்பிடலாம். மேலும், 2023 ஆம் ஆண்டுக்காக திறைசேரியால் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் நிதிகள் விளைதிறனுடனும் வினைத்திறனுடனும் இவ்வாண்டின் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு திறம்படவும் திறமையாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த அமைச்சின் மேற்படி பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கிய கௌரவ பிரதமர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் திரு.தினேஷ் குணவர்தன அவர்களுக்கும் மற்றும் இரண்டு இராஜாங்க அமைச்சர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் வழங்கப்பட்டுள்ள பணிகளை வெற்றிகரமாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய மேலதிக செயலாளர்கள், பணிப்பாளர் நாயகங்கள், சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள், பணிப்பாளர்கள், பிரதம நிதி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த பணிக்குழாத்துக்கும் இந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பணிக்குழாத்துக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாகக் கொண்டு நடாத்துவதற்கு உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பை மேலும் எதிர்பார்த்து 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்கு அறிக்கைக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# பொது நிர்வாகப்பிரிவு

## அத்தியாயம்


**1. நிறுவன சுயவிவரம்/ நிர்வாக சுருக்கம் ........................................................................ 1**

1.1. அறிமுகம் ........................................................................................................................ 1

1.2. நிறுவனத்தின் இலக்கு,நோக்கு,குறிக்கோள்கள் ..................................................................... 2

1.3. பிரதான செயற்பாடுகள் ................................................................................................... 4

1.4 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் / நிறுவனங்கள். ........................................................ 4

1.5. நிறுவன விளக்கப்படம் ......................................................................................................

**2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு, விசேட வெற்றிகள் ............................................... 5**

2.1. முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு ................................................................ 5

2.1.1. அனைத்து நில சேவைகள் மற்றும் ஒருங்கிணைந்த சேவைகளின் தேவைஇலங்கை நிர்வாக சேவை ........................................................................................................ 5

2.1.2. 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று இணைந்த சேவையின் உத்தியோகத்தர்கள் ........................................................................................................................ 6

2.2. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் .................................................................................. 7

2.3. திருத்தப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள ............................................................ 12

2.4. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதங்கள் .................................................................... 15

2.5. 2023 ஆம் ஆண்டில் பொது நிருவாகப் பிரிவின் பல்வேறு பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட விஷேட பணிகள் ................................................................................ 17

**3. வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை ...................................................... 29**

3.1. நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்றுகள் ....................................................................... 29

3.2. கட்டு நிதி சீராக்கக் கணக்கு ............................................................................................. 30

3.3. நிதி நிலைமை தொடர்பான அறிக்கை................................................................................ 31

3.4. காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று.................................................................................. 32

3.5. நிதி அறிக்கை குறிப்புகள் ................................................................................................ 33

3.6. வருமானச் சேகரிப்பு தொடர்பான செயலாற்றுகை ............................................................... 34

3.7. ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை ................................. 35

3.8. நிதி அல்லாத சொத்து அறிக்கையிடலின் செயலாற்றுகை .................................................. 36

**4. செயலாற்றுகை சுட்டிகள ................................................................................................ 37**

**5. நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்ளும் செயலாற்றுகை .......... 38**

**6. மனித வளங்கள் சுயவிபரங்கள் ....................................................................................... 41**

6.1. மனிதவள அபிவிருத்தி ..................................................................................................... 41

6.2. ஆளனி முகாமைத்துவம் ................................................................................................... 51

**7. இணக்க அறிக்கை ............................................................................................................ 61**

## 01 நிறுவனஞ்சார் விபரத் திரட்டு

### 1.1அறிமுகம்

2022 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் திகதி முதல் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என பெயரிடப்பட்டாலும், ஆரம்பம் முதல் தற்சமயம் வரை அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அரச ஊழியர்களின் முன்னேற்றத்திற்காக மிகுந்த அர்ப்பணிப்புடனும் பொறுப்புடனும் செயற்பட்டு வருகின்ற இந்த அமைச்சுக்கு அதன் வரலாறு 84 ஆண்டு காலம் வரை நீண்டுள்ளது. 1931 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிதியமைச்சின் கீழ் திணைக்களமாக இருந்த இந்த அமைச்சு 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசாங்கத்தின் சீர்திருத்தங்களின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களின் கீழ் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி தற்போது அரச நிர்வாகத்தின் சிறந்த பணியில் ஈடுபட்டு வருகின்றது.

2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆந் திகதியிலிருந்து பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்ற பெயரில் கௌரவ பிரதமரும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சருமான தினேஷ் குணவர்தன அவர்களின் தலைமையின் கீழ் புதியதொரு அமைச்சாக கட்டியெழுப்பப்பட்டது.

'அரச ஊழியர்களின் மககெதர' ஆக விளங்கும் இந்த அமைச்சு, அனைத்து அரச ஊழியர்களினதும் தேவைகளை வழிநடத்துவதோடு, அரச சேவைக்கு தேவையான கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்கி, "சுபீட்சத்தின் தொலைநோக்கு" என்ற கொள்கைப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை அடைவதற்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதோடு, அதற்காக அவசியப்படும் பணியாட்தொகுதியினருக்கு தலைமைத்துவத்தை வழங்கும் பொறுப்பினை அமைச்சின் செயலாளராக விளங்கும் நீல் பண்டார ஹபுகின்ன அவர்கள் குறையின்றி மேற்கொண்டு வந்துள்ளார்.

பொதுமக்களுக்கு திருப்திகரமான அரச சேவையை வழங்குவதனை சான்றுப்படுத்தும் வகையில் நியாயத் தன்மை, ஒருமைப்பாடு மற்றும் வினைத்திறனின்பால் விஷேட கவனம் செலுத்தி நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் சட்ட விதிகளை தயாரித்தல் இவ்வமைச்சின் மீதுள்ள அடிப்படைப் பொறுப்பாகும். அதற்கிணங்க தாபன விதிக்கோவை மற்றும் அதனுடன் தொடர்புடைய பொது நிர்வாக சுற்றறிக்கைகளை தயாரித்தல், திருத்தியமைத்தல், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அதனுடைன் தொடர்புடைய அவதானங்களை பெற்றுக் கொடுக்கும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றது. அரசாங்க நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் கொள்கைகளை தயாரித்தல், பொருள்கோடல் மற்றும் அதனுடன் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல் என்பன இவ்வமைச்சின் மூலம் நிறைவேற்றப்படும் மற்றுமொரு அதிவிஷேட பணியாகும். அதனூடாக மிகவும் உற்பத்திதிறன் வாய்ந்த சேவையொன்றினை பெற்றுக் கொடுக்க முடியுமான வகையில் ஒட்டுமொத்த அரச சேவையினதும் செயற்பாடுகளை கட்டியெழுப்பும் நடவடிக்கை இந்த நிர்வாகத்தினூடாக இடம்பெறுகின்றது.

தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நாடளாவிய ரீதியான சேவைகளின் தொழிற்பாடுகள் ஒட்டுமொத்த இணைந்த சேவைகளின் நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றி அரச சேவையினுள் மனித வளத்தை உயர் உற்பத்தித்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்வதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் கீழ் தயாரிக்கப்பட்ட பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2022 ஆண்டு செயல்திறன் அறிக்கை மற்றும் கணக்குகள் இதன்மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

## 1.2 விடயப் பரப்பெல்லை, நோக்கம், மூலோபாயங்கள்

**தொலைநோக்கு**

தேசத்திற்கான சிறந்ததோர் அரச சேவை

**பணிநோக்கு**

சிறந்த நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றுக்கூடாக ஆற்றல் கொண்ட

### விடயப் பரப்பெல்லை

சகல அரச சேவையிலும் முழுமையான இயலளவு விருத்திகளை மேற்கொண்டு நவீன தகவல் தொழில்நுட்ப மூலோபாயங்கள் ஊடாக செயற்பாடுகளின் இரட்டிப்புத் தன்மையைத் தடுத்து சேவைப் பெறுநர்களுக்கு அதிசிறந்த சேவைகளை வழங்குதல் மற்றும் மாகாண மற்றும் பிரதேச மட்டத்தில் நிலவுகின்ற வேறுபாடுகளைக் குறைத்து மக்களுக்கு உயர் சேவையை உறுதிப்படுத்தல்.

### நோக்கம்

அரச சேவையின் மனித வள முகாமைத்துவக் கொள்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்தல், ஊதியம் மற்றும் ஏனைய சேவை நிபந்தனைகளுடன் தொடர்புடைய பயனுள்ள அரச கொள்கைகளைத் தயாரித்தல்.

பொது மக்களின் தேவைகளுக்காக மறுமொழி வழங்கும் போது தற்போது அரசாங்க சேவையில் கடமையாற்றும் அலுவலர்களின் அபிலாசைகளுக்கு புதிய பாதையினை நோக்கி வழிநடாத்துகின்றது.

அரசாங்க சேவையின் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்காக புதிய முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.

பிரதான அமைப்பொன்றினை நிறுவி பரிமாறிக் கொள்ளல் ( முடிவினை இலக்காகக் கொண்ட மனப்பாங்கு, பொறுப்புக்கூறல், வளங்களை சிறந்த முறையில் கையாளுதல், சார்புத் தன்மையற்ற, தூர நோக்கு போன்றன)

அரச துறையில் வேண்டி நிற்கும் பயிற்சித் தேவைகளை இனங்காணல் மற்றும் பயிற்சி திட்டங்களுக்கு வசதிகளை வழங்குதல்.

ஓய்வுதியத்துக்கு உரியதான சிக்கல்களை தீர்த்து வைப்பதற்காக ஓய்வூதிய நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.

அரசின் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் முன்னுரிமைகளை பூர்த்தி செய்யும் இயலுமையுடன் கூடிய அரசாங்கப் பிரிவின் நிறுவாக விருத்திக்கான கட்டமைப்பினை தயாரித்துக் கொள்ளல்.

சேவை வழங்களின் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை கட்டியெழுப்புவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தினை கையாள்வதை மேம்படுத்தல்..

அரச சேவையின் பணியாட் தொகுதியினரின் செயற்திறன்களை விருத்தி செய்தல்.

மாற்றமுறும் நிலைமைகளுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வேண்டி முறைமைகளை எளிதாக்குதல் மற்றும் செயலாக்கத்தினை மீண்டும் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை மேம்படுத்தல், விருத்தி செய்தல் மற்றும் செயலுருப்படுத்துதல்.

### மூலோபாயங்கள்

அரச சேவையின் வினைத்திறனினை சிறந்த வகையில் வள முகாமைத்துவத்துக்கான பகுத்தறிவுடன் கூடிய கொள்கை மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு

அரச சேவையினை வழங்கும் போது உற்பத்தித்திறனினை மேம்படுத்துவதன் பொருட்டு செயலாக்கத்தினை மீண்டும் தோற்றுவித்தல் மற்றும் அமைப்பு ரீதியான விருத்திக்கான நிர்வாக சீர்திருத்தம்.

அரச சேவைக்கான போட்டித் தன்மை ரீதியான ஆட்சேர்ப்புக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கும் செயல்முறைகள்.

கோரிக்கை சார்புடைய இயலுமை விருத்தி மற்றும் திறன்களை ஒப்பிடல்

சேவை வழங்கலினை பொது மக்களுக்கு அண்மிக்கச் செய்தல் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனம் சார் வலையமைப்பு.

அரசாங்க சேவையின் தரத்தினை உயர்த்துதல் மற்றும் சேவை வழங்கலின் வெளிப்படைத் தன்மைக்காக தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல்.

பொதுமக்களை மையப்படுத்திய அரசாங்க சேவையின் பால் சார்ந்த சேவை வழங்கலினை தரமிக்கதாக மாற்றுவதற்காக குடிமகன் / சேவைப் பெறுநர் பட்டயம்



## 1.3 பிரதான செயற்பாடுகள்

1. அரசினூடாக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் தேசிய கொள்கைகளின் மீது அமைந்துள்ள "நாட்டிற்கான வேலைக் கலாசாரம்" இனை ஏற்படுத்தும் வகையில் குறித்த இராஜாங்க அமைச்சுக்களுக்கான கொள்கை ரீதியான வழிகாட்டல்களை மேற்கொள்ளல் மற்றும் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்துக்கு உரித்தான கொள்கைகளை வகுத்தல், தேசிய வரவுசெலவுத் திட்டம், அரச முதலீட்டு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழமைந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அமைச்சுக்குரிய திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் விடயங்கள் மற்றும் பணிகளுடன் அவற்றுடன் தொடர்பான கொள்கைகளைத் தொகுத்தல், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை, இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவை மற்றும் இணைந்த சேவைகளின் தாபன, நிர்வாக மற்றும் ஆளணி முகாமைத்துவம்

3. பாராளுமன்றத்துடன் தொடர்பான மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரசினால் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகள்

## 1.4 அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்

| திணைக்களம் | நிறுவனங்கள் |
|---|---|
| **ஓய்வூதியத் திணைக்களம்** | **இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்** |
| **அரசகரும மொழிகள் திணைக்களம்** | **தொலைக்கல்வி நிலையம்** |
| | **தேசிய மொழிக் கற்கை மற்றும் பயிற்சி நிறுவனம்** |
| | **தேசிய மொழிப் பிரிவு** |
| | **இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை** |

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### நிறுவனக் கட்டமைப்பு



## 02 முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு

**2.1.1 அனைத்து நில சேவைகள் மற்றும் ஒருங்கிணைந்த சேவைகளின் தேவைஇலங்கை நிர்வாக சேவை**

**அனைத்து நில சேவைகள் & ஒருங்கிணைந்த சேவைகள் காலியிடங்களுக்கு 1745 அதிகாரிகள் தேவை 2023.**

**அழைக்கப்படுதல்**

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் | **மேலதிகமானவர்கள்** |
|---|---|---|---|---|
| விசேட | **406** | **388** | **18** | - |
| I | **1010** | **621** | **389** | - |
| II/III | **1902** | **1565** | **337** | - |
| மொத்தம் | **3318** | **2574** | **744** | - |

**இலங்கை கணக்காளர் சேவை**

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் | **மேலதிகமானவர்கள்** |
|---|---|---|---|---|
| விசேட | **87** | **52** | **35** | - |
| I | **478** | **638** | - | **160** |
| II/III | **1492** | **901** | **591** | - |
| மொத்தம் | **2057** | **1591** | **626** | **160** |

**இலங்கை பொறியியலாளர் சேவை**

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் | **மேலதிகமானவர்கள்** |
|---|---|---|---|---|
| விசேட | **46** | **38** | **08** | - |
| I | **232** | **325** | - | **93** |
| II | **114** | **312** | - | **198** |
| III | **1150** | **508** | **351** | - |
| மொத்தம் | **1542** | **1183** | **359** | **291** |

**இலங்கை திட்டமிடல் சேவை**

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் | **மேலதிகமானவர்கள்** |
|---|---|---|---|---|
| விசேட | **73** | **70** | **03** | - |
| I | **191** | **87** | **104** | - |
| II/III | **800** | **650** | **150** | - |
| | **234** | **245** | - | **11** |
| மொத்தம் | **1297** | **1052** | **257** | **11** |

**இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை**

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் | **மேலதிகமானவர்கள்** |
|---|---|---|---|---|
| விசேட | **01** | **01** | - | - |
| I | **06** | **06** | - | - |
| II/III | **62** | **43** | **19** | - |
| மொத்தம் | **69** | **50** | **19** | - |

**இலங்கை விஞ்ஞான சேவை**

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | உண்மையான பதவியணி | வெற்றிடங்கள் | **மேலதிகமானவர்கள்** |
|---|---|---|---|---|
| விசேட | **20** | **14** | **06** | - |
| I | **55** | **26** | **29** | - |
| II | **17** | **06** | **11** | - |
| III | **557** | **339** | **218** | - |
| மொத்தம் | **649** | **385** | **264** | - |

**2.1.2 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று இணைந்த சேவையின் உத்தியோகத்தர்கள்.**

| **சேவை** | அங்கீகரிக்கப்பட்ட | **சேவையில் உள்ளவர்கள்** | வெற்றிடங்கள் | |
|---|---|---|---|---|
| அரச முகாமைத்துவ சேவை | **29785** | **24629** | **5156** | |
| மொழிபெயர்ப்பாளர் சேவை | **636** | **243** | **393** | |
| நூலகர் சேவை | **625** | **121** | **504** | |
| அலுவலக உதவியாளர் சேவை | **17218** | **17208** | **10** | |
| சாரதிச் சேவை | **7002** | **8296** | **-** | **1294** |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை | **3431** | **1748** | **1683** | |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | **-** | **80815** | **-** | |
| மொத்தம் | **144139** | **133963** | **13764** | **1294** |

**2.2 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள்**

| | சுற்றறிக் கை இலக்கம் | வெளியிடப் பட்ட திகதி | காரணம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 01 | 01/2023 | 2023.01.12 | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளைத் திருத்தி வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் - 2022 | - |
| 02 | 02/2023 | 2023.01.12 | 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் விவரப்பட்டியல் | - |
| 03 | 03/2023 | 2023.03.23 | இலங்கை நிர்வாக சேவை விசேட தர உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை - 2023 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் I ஆவது தொகுதியில் XVIII ஆம் அத்தியாயத்தின் 251 ஆம் விதியின் ஏற்பாடுகள் |
| 04 | 04/2023 | 2023.03.02 | 2023 ரமழான் (ராமசான்) காலத்தில் விசேட விடுமுறை | - |
| | சுற்றறிக் கை இலக்கம் | வெளியிடப் பட்ட திகதி | காரணம் | குறிப்பு |
| 05 | 06/2023 | 2023.04.06 | 2023 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களை கையளித்துள்ள அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குதல் | இலக்கம் அமப/23/0621/605/029 மற்றும் 2023.04.03 ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்ட அறிக்கை தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் துணைப்பிரிவின் ஏற்பாடுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | 07/2023 | 2023.05.08 | 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பு மனுக்களை கையளித்துள்ள அரசியல் உரிமையுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு சலுகை வழங்குதல் | இலக்கம் அமப/23/0814/605/029-I மற்றும் 2023.05.02 ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்ட அறிக்கை தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் துணைப்பிரிவின் ஏற்பாடுகள் |
| 07 | 08/2023 | 2023.05.14 | தேசிய எரிசக்தி ஆற்றல்கள், மூலோபாயங்கள் மற்றும் பாதை வரைபடங்கள் குறித்த அமைச்சரவை துணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் | இலக்கம் அமப/22/2048/602/019 மற்றும் 2023.01.09 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம்<br><br>2022.03.08 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 04/2022 |
| 08 | 09/2023 | 2023.06.05 | அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை 20.02.01.01 தொடர்பான வருமான மதிப்பீடு - 2024 | 2015.07.20 ஆம் திகதிய அரசாங்க நிதிக்கொள்கைகள் திணைக்கள சுற்றறிக்கை 01/2015 மற்றும் அதன் திருத்தங்கள்<br><br>நிதி ஒழுங்குவிதிகள் இலக்கம் 85(1), (2) |
| 09 | 10/2023 | 2023.06.05 | அரசாங்க கட்டிடங்களின் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை "20.02.01.01" தொடர்பான வருமான நிலுவை அறிக்கை சமர்ப்பித்தல் – 2023.06.30 | 2015.07.20 ஆம் திகதிய அரசாங்க நிதிக்கொள்கைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை 01/2015 மற்றும் அதன் திருத்தங்கள்<br><br>நிதி ஒழுங்குவிதிகள் இலக்கம் 128(2), (இ) |

| | சுற்றறிக்கை இலக்கம் | வெளியிடப்பட்ட திகதி | காரணம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 10 | 11/2023 | 2023.06.30 | இலங்கை நிர்வாக சேவை விசேட தர உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை - 2024 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடை முறை ஒழுங்குவிதிகள் 1 ஆம் தொகுதியில் XVIII ஆம் அத்தியாயத்தின் 251 ஆம் விதியின் ஏற்பாடுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 12/2023 | 2023.06.30 | இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை - 2024 ( I, II மற்றும் III ஆந் தரங்கள்) | இலக்கம் அமப11/1090/523/087 மற்றும் 2011/05/11 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம்<br><br>இலக்கம் அமப/14/0286/523/007/ மற்றும் 2014.04.23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் |
| 12 | 13/2023 | 2023.06.30 | இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை - 2024 | - |
| 13 | 14/2023 | 2023.07.13 | இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை - 2024 (I, II மற்றும் III ஆந் தரங்கள்) | 2023.06.30 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2023 இலக்கம் அமப/11/1090/523/087 மற்றும் 2011.05.11 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம்<br><br>இலக்கம் அமப/14/0286/523/007 மற்றும் 2014.04.23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் |
| 14 | 15/2023 | 2023.07.31 | ஓய்வூதிய பிராமணக் கோவையின் 2:12 மற்றும் 2:15 பிரிவின் கீழ் ஓய்வு பெறச் செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் / நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவது தொடர்பில் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு முன்வைக்க வேண்டிய ஆவணங்கள் | தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24:8 ஆம் பிரிவு<br><br>தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 33:6 பிரிவு<br><br>தாபன விதிக்கோவையின் XLVIII அத்தியாயத்தின் 33:3 ஆம் பிரிவு<br><br>2011.06.28 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2011<br><br>ஓய்வூதியப்பிரமாணக்குறிப்பின் 2:12 மற்றும் 2:15 ஆம் பிரிவுகள் |
| | சுற்றறிக்கை இலக்கம் | வெளியிடப்பட்ட திகதி | காரணம் | குறிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | 16/2023 | 2023.09.06 | தத்தெடுக்கப்பட்ட குழந்தையை பராமரிப்பதற்காக அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு விடுமுறை வழங்குதல் | தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 18 ஆம் பிரிவு<br><br>அமப/23/1135/605/040 2023.06.26 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்ட அறிக்கை |
| 16 | 17/2023 | 2023.10.17 | நிறுவனப் பணிப்பாளர் நாயகத்திடம் சம்பளம் தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்தலின்போது பின்பற்றப்பட வேண்டிய புதிய நடைமுறைகள் | 2015.07.20 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம் 03/2015<br><br>2014.05.06 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 02/2014 |
| 17 | 18/2023 | 2023.09.04 | இலங்கை கணக்களார் சேவை அலுவலர்களின் வருடாந்த இடமாற்றம் - 2024 (I, II மற்றும் III ஆந் தரங்கள்) | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் 217 ஆம் பிரிவு<br><br>2002 இலக்கம் 04 கொண்ட நிர்வாக மேன்முறையீட்டு தீர்ப்பாய அதிகாரச் சட்டம் |
| 18 | 19/2023 | 2023.09.06 | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சிறப்பு வகுப்பிலுள்ள அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றம் – 2024 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் XVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் |
| 19 | 20/2023 | 2023.09.20 | பொது நிர்வாக விடயப்பொறுப்பு அமைச்சின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் நில பியச வீடமைப்புத் தொகுதிக்கு தகுதிபெற்ற உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டுதல்கள் | 2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 |
| 20 | 21/2023 | 2023.10.19 | நிகழ்நிலை முறைமை மூலம் கூட்டங்களை நடத்துதல் | - |

| | சுற்றறிக் கை இலக்கம் | வெளியிடப் பட்ட திகதி | காரணம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 21 | 22/2023 | 2023.12.07 | அரசாங்க அலுவலர்களுக்கான விஷேட முற்பணம் – 2024 ஆம் ஆண்டு | 2015.12.29 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 26/2015 |
| 22 | 23/2023 | 2023.12.21 | வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள் மற்றும் வீதிகள் தடைப்பட்டமை காரணமாக சேவைக்கு வருகை தராத அரசாங்க அலுவலர்களுக்கான விசேட விடுமுறை 2023 செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் | - |
| 23 | 24/2023 | 2023.12.18 | அரசாங்க கட்டிடங்களின் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை “20.02.01.01” தொடர்பான வருமான நிலுவை அறிக்கை சமர்ப்பித்தல் – 2023.12.31 | அரசாங்க நிதிக்கொள்கைகள் திணைக்களத்தின் 2015.07.20 ஆம் திகதிய சுற்றறிக்கை 01/2015 |
| 24 | 25/2023 | 2023.12.15 | 2024 ஆம் ஆண்டு - கடமைச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் | - |
| 25 | 26/2023 | 2023.12.22 | உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தோற்றிய அரசியல் உரிமைகள் கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குதல் | 2023.04.06 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 06/2023 மற்றும் 2023.05.08 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2023 |
| 26 | 27/2023 | 2023.12.29 | திறந்த மற்றும் பொறுப்புக் கூறவேண்டிய அரசொன்றுக்கான அரச உத்தியோகத்தர்களது பொறுப்பு | தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயம்<br><br>தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயம்<br><br>2010.09.01 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற் றிக்கை 03/2010 |

**2.3 திருத்தப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள**

| | சுற்றறிக்கை இலக்கம் | வெளியிடப்பட்ட திகதி | காரணம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 01 | 23/2022 (I) | 2023.01.26 | 1620/22 இலக்கத்துடைய 2009.09.24 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணத்தின்படி நூலகர் சேவையின் விசேட வகுப்புக்கு தரமுயர்த்தல் | 2022.12.28 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 23/2022 |
| 02 | 31/2022 (I) | 2023.03.03 | அரசாங்க அலுவலர்களுக்கான விஷேட முற்பணம் – 2023 | 2022.12.30 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 31/2022 |
| 03 | 02/2021 (VIII) | 2023.05.12 | அரசாங்க சேவையை வழமைபோன்று கொண்டு நடாத்துதல் | 2021.12.30 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 02/2021(VI)<br><br>2021.10.01 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 02/2021(V)<br><br>2009.04.16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 09/2009<br><br>2009.06.17 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 09/2009(I) |
| 04 | 08/2023 (I) | 2023.05.17 | தேசிய எரிசக்தி ஆற்றல்கள், மூலோபாயங்கள் மற்றும் சாலை வரைபடம் பற்றிய அமைச்சரவை துணைக் குழு பரிந்துரையை செயல்படுத்தல் | 2023.05.14 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 08/2023<br><br>2022.03.08 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 04/2022 |
| 05 | 10/2015(V) | 2023.05.29 | இலங்கை நிர்வாக சேவைப்பிரமாணக் குறிப்பை நடைமுறைப்படுத்துதல் | 2015.04.23 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2015 |

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | 12/2012 (I) | 2023.06.11 | தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் அவற்றினை முன்வைக்க வேண்டிய விதம் | 2012.09.17 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2012<br><br>தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு |
| | சுற்றறிக்கை இலக்கம் | வெளியிடப்பட்ட திகதி | காரணம் | குறிப்பு |
| 07 | 19/2017 (II) | 2023.06.26 | டெங்கு நோயைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக "நிறுவன ரீதியான டெங்கு ஒழிப்பு தினத்தினைப்" பிரகடனப்படுத்துதல் | 2023.04.20 ஆம் திகதி ஜனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள இலக்கம்: PS/EAD/Circular/06/2023 சுற்றறிக்கை |
| 08 | 14/2022(III) | 2023.07.13 | சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பில்லாத வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு சம்பளமற்ற லீவு வழங்குதல் | 2022.06.22 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 14/2022<br><br>2022.09.06 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 14/2022(I)<br><br>2022.09.06 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 14/2022(II) |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | 02/2018 (I) | 2023.11.30 | பொதுத் துறையினுள் மனித வளத்தினை அபிவிருத்தி செய்தல் | 2018.01.24 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 02/2018<br><br>இலக்கம் 2289/43 மற்றும் 2022.07.22 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகை<br><br>1998.03.13 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/98<br><br>1998.04.30 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 08/98(i)<br><br>1998.12.11 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 08/98 (ii) |

| | சுற்றறிக்கை இலக்கம் | வெளியிடப்பட்ட திகதி | காரணம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 10 | 03/2020(I) | 2023.12.28 | விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புப் பணம் அறவிடுதல்தொடர்பான விபரங்களை தனிப்பட்ட கோவையில்சேர்த்தல் | 2020.12.31 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2020<br><br>இலக்கம் அமப/23/2097/605/067 மற்றும் 2023.11.20 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் |
| 11 | 20/2022(I) | 2023.12.30 | பொது நிருவாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் பொதுச்சேவை உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்குப்பொருத்தமான பதவி நிலை உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்கள் | 2022.09.15 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 20/2022 |

**2.5 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதங்கள்**

| | சுற்றறிக்கைக் கடிதங்களின் இலக்கம் | வெளியிடப் பட்ட திகதி | காரணம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 01 | 01/2023 | 2023.02.09 | தொழிற் சங்கங்களுக்கு/சம்மேளனங் களுக்கு அரசாங்க ஊழியர்களை முழு நேர அடிப்படையில் விடுவித்தல் | தாபன விதிக்கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 4 மற்றும் 6 ஆம் பிரிவுகள்<br><br>1997.09.29 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 15/97 |
| 02 | 02/2023 | 2023.12.21 | சொத்துக் கடன் பெறல் தொடர்பான தகவல்களை தனிப்பட்ட கோப்பில் உட்சேர்த்தல் | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயம் 11 ஆம் பிரிவு<br><br>2016.05.20 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்ற்றிக்கை |

| | சுற்றறிக்கைக் கடிதங்களின் இலக்கம் | வெளியிடப் பட்ட திகதி | காரணம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 03 | 03/2023 | 2023.06.30 | தாபன விதிக்கோவை 15 பின்னிணைப்பில் உள்ள முறிப் படிவத்தை திருத்தியமைத்தல் | தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவு<br><br>தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4:2 ஆம் துணைப்பிரிவு<br><br>தாபன விதிக்கோவையின் I ஆம்தொகுதியின் 9 ஆம் பின்னிணைப்பு மற்றும் 15 ஆம் பின்னிணைப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | 04/2023 | 2023.12.28 | தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24:3:9 ஆம் உட்பிரிவுடன்தொடர்புடைய தண்டனையொன்றை உள்ளடங்கிய ஒழுக்காற்றுக்கட்டளையொன்றின்போது சம்பள ஏற்றக் குறைப்பினை நடைமுறைப்படுத்த வேண்டிய விதம் | தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 23:9 ஆம் துணைப்பிரிவு |

## 2.6 2023 ஆம் ஆண்டில் பொது நிருவாகப் பிரிவின் பல்வேறு பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட விஷேட பணிகள்

### இலங்கை விஞ்ஞான சேவை

இலங்கை விஞ்ஞான சேவை உத்தியோகத்தர்களுக்கு ஆய்வுக் கலாசாரமொன்றை உருவாக்கும் நோக்கில் ஆய்வு முறைகள் தொடர்பான பயிற்சி நெறிகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வளப்பங்களிப்பில் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படுவதோடு அது இந்நாட்டின் விஞ்ஞான ஆய்வுகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2023 ஆம் ஆண்டில் எமது பிரிவின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித் தொடராகும். அச்செயலமர்வின் தொடக்க தினத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.





### இலங்கை கட்டிட நிர்மாண சேவை

கட்டிடங்கள் திணைக்களத்தின் இலங்கை கட்டிட நிர்மாண சேவை தரம் I இன் சிரேஷ்ட கட்டிடக் கலைஞர் பதவி மற்றும் மேல் மாகாண சபையின் கொழும்பு மாநகர சபையின் இலங்கை கட்டிட நிர்மாண சேவை தரம் I இன் பிரதம கட்டிடக் கலைஞர் பதவிக்கு இலங்கை கட்டிட நிர்மாண சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சை 2023.10.07 ஆம் திகதி இடம்பெற்று தகைமைகொண்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### இலங்கை தொழில்நுட்ப சேவை

இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரிவினால் அச் சேவையின் சீரான வடிவத்தைப் பேணும் நோக்கில், தொழில்நுட்ப சேவைப்பிரமாணம் மற்றும் அச்சேவையின் கொள்கை சார் தீர்மானங்கள் தொடர்பான நடவடிக்கைகளும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை நடத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இற்கு பதவி உயர்த்துவதற்கான ஏற்பாடுகளை மீண்டும் அமுல்படுத்துவது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பின் 4வது திருத்த வரைவுக்கு இந்த அமைச்சின் செயலாளரது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**2023 ஆம் ஆண்டுக்கேற்புடைய இலங்கை தொழில்நுட்ப சேவை வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடத்துதல் பற்றிய தகவல்கள்**

| இ.தொ.சே வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி | விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த திகதி | பரீட்சை இடம்பெற்ற திகதி | பரீட்சைத் திணைக்களத்தினால் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| இ.தொ.சே தரம் III - 2018 (II) | 2022.10.21 | 2022.11.21 | 2023.07.15 | பரீட்சைத் திணைக்களத்தினால் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன |
| இ.தொ.சே தரம் II - 2018 (II) | | | | பரீட்சைத் திணைக்களத்தினால் பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளன |
| இ.தொ.சே தரம் I இன் உத்தியோகத்தர்களை விஷேட தரத்திக்கு தரமுயர்த்துவதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2020 | 2022.05.06 | 2022.06.03 | 2023.07.15 | பரீட்சைத் திணைக்களத்தினால் பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளன |

**இலங்கை கணக்காளர் சேவை**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1670/33 மற்றும் 2010 செப்டம்பர் 10 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இலங்கை கணக்காளர் சேவையானது நாடளாவிய சேவைகளில் ஒன்றாக விளங்குவதோடு பொதுச்சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகாரங்களை வழங்குவதற்கு ஏற்புடையவாறு, அச் சேவையில் உத்தியோகத்தர்களது நிர்வாகப் பணிகள் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கணக்காளர் சேவைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதி நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மையை இயன்றளவு பேணி பொறுப்புக்களையும் பொறுப்புணர்வையும் பாதுகாப்பதற்கு உள்ளார்ந்த உந்துதலுடன் செயலாற்றும் முழுமையான தொழில் நிபுணரை உருவாக்குவதற்கு இலங்கையின் கணக்காளர் சேவைக்கேற்புடையவாறு அமைச்சரவை மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் மூலம் விதிக்கப்படும் அனைத்துக் கொள்கைகளும் நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் கணக்காளர் சேவைப்பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**இலங்கை கணக்காளர் சேவைப்பிரிவின் 2023 ஆம் ஆண்டுக்கான விஷேடசெயலாற்றுகைகள்**

நாடளாவிய சேவைகளுக்கான ஆட்சேர்ப்புப் பொதுப் போட்டிப் பரீட்சை 2021 இன் கீழ், இலங்கைக் கணக்காளர் சேவைக்கு வரையறுக்கப்பட்ட மற்றும் திறந்த அடிப்படையில் கீழ்க்கண்டவாறு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பணிகள் திட்டமிடப்பட்டுள்ளதோடு தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 03/2022 இன் மூலம் மேற்கொள்ளப்பட்ட வரையறைகளுக்குட்பட்டு இந்த பொதுப் போட்டிப் பரீட்சையின் முதல் பகுதி 2023.07.29 ஆம் திகதி நடத்தப்பட்டது.

திறந்த அடிப்படையில் - 14

வரையறுக்கப்பட்ட அடிப்படையில் - 101

2023.12.31 ஆம் திகதியாகும்போது தகைமைகளைப் பூர்த்தி செய்த தரம் III உத்தியோகத்தர்கள் 55 பேரின் சேவை நிரந்தரமாக்கப்பட்டது.

இலங்கை கணக்காளர் சேவையின் தகைமைகளைப் பூர்த்தி செய்த தரம் III இன் உத்தியோகத்தர்கள் 121 பேர் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

இலங்கை கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 6 ஆவது திருத்தத்தின் கீழ், தகைமைகளைப் பூர்த்தி செய்த தரம் II இன் உத்தியோகத்தர்கள் 20 பேர் தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்களை விசேட தரத்துக்கு பதவியுர்த்துவதற்கான நடவடிக்கைகளுக்கு ஏற்புடையவாறு பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்வரும் அறிவிப்புகள் தொடர்பிலான அனைத்து நடவடிக்கைகளையும் 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய முடிந்தது.

2021.09.30 ஆம் திகதிக்கு 93 வெற்றிடங்களுக்காக நியமித்தல்.

2015.01.01 முதல் 2021.09.29 வரை நிலவிய வெற்றிடங்களுக்காக நியமித்தல்.

இலங்கைக் கணக்காளர் சேவையின் விசேட தரத்தில் 2021.10.01 ஆம் திகதி முதல் 2023.03.15 ஆம் திகதி வரை நிலவிய 25 வெற்றிடங்களுக்கு பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் அதற்காக தரம் I உத்தியோகத்தர்கள் 44 பேர் மற்றும் தரம் III உத்தியோகத்தர்கள் 200 பேர் என்ற ரீதியில் ஆண்டினுள் 244 உத்தியோகத்தர்களை பங்கேற்கச்செய்துள்ளனர். இந்த ஆண்டினுள் ஓய்வுபெறவுள்ள 34 உத்தியோகத்தர்களுக்கான அனைத்து தாபனப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. வருடாந்த இடமாற்றத்தின் கீழ் 95 உத்தியோகத்தர்களும் வருடாந்தமல்லாத இடமாற்றத்தின் கீழ் 110 உத்தியோகத்தர்களும் இந்த வருடத்தில் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இச்சேவையில் 16 உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு ஆண்டினுள் 09 உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்றுக் நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அதிக எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் கணக்காளர் சேவை உள்ளிட்ட நாடளாவிய சேவைகளுக்கு அங்கீகாரம் பெற்றுள்ள விருப்பத்துக்குரிய சேவை நிலையங்களை மீண்டும் மீளாய்வு செய்தல் 2023 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

**இலங்கை பொறியியல் சேவைப் பிரிவு**

**விஷேட தரத்துக்கு தரமுயர்த்துதல்**

இலங்கை பொறியியல் சேவையின் தரம் I இன் தகைமை பெற்ற உத்தியோகத்தர்களை அச்சேவையின் விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான முறையான நேர்முகப் பரீட்சை 2023.04.30 ஆம் திகதி நடாத்தப்பட்டதோடு நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி உத்தியோகத்தர்கள் 02 பேரும் 2022.07.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் விதமாக உத்தியோகத்தர்கள் 16 பேரும் 2023.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் விதமாக இலங்கை பொறியியல் சேவையின் விஷேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டனர்.

இதற்கு மேலதிகமாக, பதவி உயர்வு தரித்து வைக்கப்பட்டிருந்த ஒரு உத்தியோகத்தருக்கு 2021.06.30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் விதமாக விஷேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.





**உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பொது நிருவாகப் பிரிவுக்குரிய உள்ளக கணக்காய்வுப் பிரிவு, நி.ஒ 133 இன்படி அமைச்சின் செயலாளருக்கு நேரடியாகப் பொறுப்பு பிணைக்கப்பட்டுள்ள தலைமை உள்ளக கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் இயங்குகிறது. இது கிளைத்தலைவர் உள்ளிட்ட உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் 08 பேர், அலுவலக உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதிகளைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாத்தினரைக் கொண்டது.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின், பொது நிருவாகப் பிரிவு மற்றும் அதன் கீழ் உள்ள பின்வரும் திணைக்களங்கள் மற்றும் தபானங்களுடன் தொடர்புடைய, அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின் படி கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, தேவைக்கேற்ப விஷேட கணக்காய்வுச் சோதனைகள் மற்றும் விசாரணைகளை நடத்துவதும் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் விடயப்பரப்புடன் தொடர்புடையது.

| திணைக்களங்கள் மற்றும் பிரிவுகள் | தாபனங்கள் |
|---|---|
| 01. ஓய்வூதியத் திணைக்களம் | 01. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்(SLIDA) |
| 02.பல்நோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகைச் செயலணித் திணைக்களம் | 02 தொலைக் கல்வி நிலையம் (DLC) |
| 03. அரசகரும மொழிகள் திணைக்களம் | 03.அரச கரும மொழிகள் ஆணைக்குழு (OLC) |
| 04. பாராளுமன்ற அலுவல்கள் பிரிவு | 04. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை (NHRDC) |
| 05. தேசிய மொழிகள் பிரிவு | 05. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (NILET), |

**2023 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல்.

முதல் காலாண்டு - 2023.04.10

இரண்டாம் காலாண்டு - 2023.07.26 மற்றும்

2023.08.16

மூன்றாம் காலாண்டு - 2023.10.06

நான்காம் காலாண்டு - 2023.12.14

**அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு தொடர்பான ( COPE ) பணிகள்.**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (NILET) தொடர்பான 2023.08.24 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்திற்குத் (COPE) தேவையான விடயங்கள் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல்.

**2023.08.31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட களச்சோதனைகள் பற்றிய விவரங்கள்**



கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தினை நடாத்துதல்

பொலன்னறுவை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மஹியங்கனை, மொனராகலை மற்றும் கதிர்காமம் ஆகிய 13 விடுமுறை இல்லங்களின் கோப்புச் சோதனை மற்றும் பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், மாதாந்தம் கிட்டத்தட்ட ஆறு இலட்சத்து எண்பத்து எட்டாயிரம்

ஓய்வூதியதாரர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவுத் தரவுக் கட்டமைப்புக் கணக்காய்வின் மூலம் கண்டறியப்பட்ட பிழைகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு பொது நிர்வாக அமைச்சுக்கு உரித்தான நுவரெலியா, தியத்தலாவ, பண்டாரவளை, மிஹிந்தலை, மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு கணக்காய்வு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

**தேசிய மொழிகள் பிரிவு**

**தேசிய மொழிகள் பிரிவின் நோக்கங்கள்**

1. அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கேற்புடைய கொள்கைகளின் உருவாக்கம், திட்டங்களைத் தயாரித்தல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.
2. அரச நிறுவனங்களில் இருமொழிச் சூழலை உருவாக்குவதற்கு ஏற்ற சுற்றாடலைக் கட்டியெழுப்புதல்
3. அரசகரும மொழிக் கொள்கை பற்றி பொதுமக்களை வலியுறுத்தல்
4. மொழியைப் பரப்புதல் மற்றும் முன்னேற்றுதல் தொடர்பாக இலங்கை மக்களிடையே நேர்மறையான மனநிலையைத் தோற்றுவித்தல்.

**தேசிய மொழிகள் பிரிவின் செயற்பாடுகள்**

- அரச நிறுவனங்களில் இருமொழிச் சூழலை பலப்படுத்துதல்.
- இருமொழிச் சேவைகளை வழங்குவதற்கு அரச உத்தியோகத்தர்களை வலுவூட்டல்
- மக்களிடையே அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதை ஊக்குவித்தல்
- அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான வரவேற்பொன்றினைத் தோற்றுவித்தல்
- அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறை

**2023.01.01 முதல் 2023.12.31 வரை தேசிய மொழிகள் பிரிவினால் எட்டப்பட்ட இலக்குகள்**

| தொடர் இலக்கம் | முக்கிய செயற்பாடுகள் | ஒதுக்கீடுகள் (ரூ.மில்) | உண்மைச் செலவு (2023.12.31 இற்கு முன்னேற்றம்) |
|---|---|---|---|
| **01** | தேசிய மொழிகள் அபிவிருத்தித் திட்டம் (2509) | 10,000,000.00 | 9,996,597.50 |
| **02** | அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் (1703) | 940,000.00 | 938,615.00 |
| | மொத்த தொகை | **10,940,000.00** | **2,634,000.00** |

**அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் (1703)**

| தொடர் இலக்கம் | செயற்பாடுகள் | ஒதுக்கீட்டு தொகை | உண்மைச் செலவு |
|---|---|---|---|
| 1 | இலங்கைக்குரிய மொழிக் கொள்கையை உருவாக்குதல் | 15,155.00 | 15,155.00 |
| 2 | மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு 05 திறந்த உரையாடல்களை நடத்துதல் | 210,845.00 | 210,750.00 |
| 3 | மும்மொழி இயலுமை கொண்ட அரச உத்தியோகத்தர்களை மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பயிற்றுவித்தல் | 222,00.00 | 220,710.00 |
| 4 | தாபன விதிக்கோவையினை தமிழில் மொழிபெயர்த்தல் | 492,000.00 | 492,000.00 |
| | | **940,000.00** | **938,615.00** |

**தேசிய மொழிகள் அபிவிருத்தித் திட்டம் (2509)**

| தொடர் இலக்கம் | செயற்பாடுகள் | ஒதுக்கீட்டு தொகை | உண்மைச் செலவு |
|---|---|---|---|
| 1 | மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு 06 ஊடகக் கருத்தரங்குகளை நடாத்துதல் | 205,000.00 | 204,447.50 |
| 2 | மொழித் திட்டங்களைத் தயாரித்தல | 1,255,943.96 | 1,255,943.96 |
| 3 | 25 மாவட்டங்களில் உள்ள நூலகங்களுக்கு மும்மொழிப் புத்தகங்கள் வழங்குதல் | 3,672,000.00 | 3,672,000.00 |
| 4 | ஓரங்க தொலைக்காட்சி நாடகப் போட்டி நடாத்துதல் | 84,000.00 | 81,170.00 |
| 5 | ஆங்கில குறுந்திரைப்படப் போட்டி நடத்துதல் | 65,000.00 | 65,000.00 |
| 6 | மொழிக்கலாசார பரிமாற்ற நிகழ்ச்சிகளை நடத்துதல் | 924,419.00 | 924,419.00 |
| 7 | அரசகரும மொழிகள் தினம் | 1,209,000.00 | 1,209,000.00 |
| 8 | அரசகரும மொழிகள் வாரக்கொண்டாட்டம் | 545,600.00 | 545,600.00 |
| 9 | சிறுகதை நூல்கள் 02 இனை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல் | 390,000.00 | 389,980.00 |

| | | | |
|---|---|---|---|
| 10 | தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சி | 1,254,037.04 | 1,254,037.04 |
| 11 | ஒரு ஆவணப்படம் தயாரித்தல் | 395,000.00 | 395,000.00 |
| | | **10,000,000.00** | **9,996,597.50** |

**மனிதவள அபிவிருத்திப் பிரிவு**

இலங்கையின் நிர்வாகத் துறையில் பொறுப்புக் கூறவேண்டிய பணியை நிறைவேற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மனித வள அபிவிருத்திப் பிரிவின் பணி, அமைச்சினுள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சுக்கு வெளியே, அரச உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சி வாய்ப்புகளை எந்தவொரு பாகுபாடும் இன்றி தொடர்ந்து வழங்குதல், உலகளாவிய ரீதியில் போட்டித் தன்மையுடனும் பல்திறன்களைக் கொண்ட விளைதிறன்மிக்க கௌரவத்துடனான மற்றும் திருப்திகரமான சேவைப் படையணியொன்றை உருவாக்குதல் மற்றும் பொதுமக்களின் தேவைகளை திருப்திகரமாக நிறைவேற்றுவதற்காக உத்தியோகத்தர்களிடம் காணப்பட வேண்டிய திறன்களின் விருத்தியை உறுதிப்படுத்துதல் ஆகும்.

அதன்படி, அரசின் நிதியைப் பயன்படுத்தி வினைத்திறன்மிக்க மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்கு மனிதவள அபிவிருத்திப் பிரிவு செயல்படுகிறது. மக்கள் நலன்கொண்ட சேவையொன்றை வழங்குவதனை நோக்கிய முகாமைத்துவக் கட்டமைப்பில் புதிய மறுசீரமைப்புக்களை உருவாக்குதல்.

சேவைப் பயனாளர்களுக்கு வழங்கப்படும் சேவையை மிகவும் வினைத்திறன் மிக்க மற்றும் தரமான சேவையாக மாற்றுவதற்கு தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொடர்பாடல் கருவிகள் மற்றும் நவீன மூலோபாயங்களைப் பயன்படுத்துதல்.

**2023 ஆம் ஆண்டில் மனித வள அபிவிருத்திப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்ட தனித்துவமான பணிகள்**

இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட சேவை அறிமுகப் பயிற்சி

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை அரச நூலகர் சேவையின் III ஆம் தரத்திற்கான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சையின் மூன்று நிலைகளின் கீழ் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையின் முதல் நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் உட்பட மொத்தம் 51 உத்தியோகத்தர்களுக்கு நூலக விடயப்பரப்புடன் தொடர்புடைய மற்றும் நூலக விடயப்பரப்புக்கு வெளிவாரியான பயிற்சித் தொகுதிகளை உள்ளடக்கி தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் ஆதரவுடன் பிரயோக மற்றும் நிகழ்நிலை முறையின் மூலம், 2023.08.23 ஆம் திகதி முதல் 2023.08.31 ஆம் திகதி வரை 10 பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டன.

**பதவிநிலை உத்தியோகத்தர் பயிற்சித் திட்டங்கள்**

அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான மூலோபாய முறைகள் பற்றிய அறிவு, அறிக்கை எழுதுதல், கொள்முதல் செயல்முறை மற்றும் ஒழுக்கநெறிக்கோவை பற்றிய பிரயோக அறிவு முதலிய பல்வேறு அம்சங்களில் பயிற்சிச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இது தவிர, ஒவ்வொரு

பதவிநிலை உத்தியோகத்தரிடமும் இருக்க வேண்டிய குணாதிசயங்கள்,

அதாவது, ஒரு நல்ல தலைவரிடம் காணப்பட வேண்டிய குணாதிசயங்கள் குறித்த கோட்பாட்டு விடயங்கள் மற்றும் நடைமுறைப் பயன்பாடுகள் அடங்கிய பயிற்சி நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சிச் செயலமர்வுகளில் 119 பதவிநிலை உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர்.

**அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பயிற்சித் திட்டங்கள்**



இந்த அமைச்சில் பணிபுரியும் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை விருத்தி செய்யும் நோக்கில் வருடம் முழுவதும் பயிற்சிச் செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்குவிதிகள், தகவல் தொழில்நுட்பம், தரவு மற்றும் தகவல்களை திறம்பட முன்வைத்தல் உள்ளிட்ட 20 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், அப்பயிற்சித் திட்டங்களில் 1038 உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர்.

அமைச்சில் பணிபுரியும் அலுவலக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதிகள் உள்ளிட்ட ஆரம்ப தர உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன் விருத்திக்காக ஆண்டு முழுவதும் பல்வேறு தலைப்புகளில் பயிற்சி நிகழ்ச்சிகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டன.

மேலும், அரச ஊழியர் ஒருவரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒழுக்கம் மற்றும் நடத்தை குறித்த அடிப்படை அறிவை வழங்குதல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள், பாதுகாப்புக் கோட்பாடுகள், போக்குவரத்துச் சட்டங்கள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும், குழுச்செயற்பாடுகள் மற்றும் நல்ல குழு உறுப்பினராக இருத்தல், சேவைப்பயனாளர் பராமரிப்பு, நெறிமுறைகள் மற்றும் சிறந்த தொடர்பாடல் போன்ற நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சித் திட்டங்களில் 322 உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர்

**விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா பங்களா பணிக்குழாத்துக்கான பயிற்சித் திட்டம்**

எமது அமைச்சின் கீழ் உள்ள பொது நிர்வாக விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா பங்களாக்களில் பணிபுரியும் பணிக்குழாத்தின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பஙாங்குகளை விருத்தி செய்யும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட வதிவிடப் பயிற்சிச் செயலமர்வு 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 03 மற்றும் 04 ஆம் திகதிகளில் 29 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் மிஹிந்தலை பொது நிருவாகத்தில் விடுமுறை இல்லத்தில் நடத்தப்பட்டது. இப்பயிற்சித் திட்டம் விடயம்சார் விரிவுரைகள், பிரயோகச் செயற்பாடுகள், விடுமுறை இல்லச் சிக்கல்கள், கலந்துரையாடல் அமர்வுகள் மற்றும் பணியாளர் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைக் கொண்டிருந்தது.

**அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பொதுவாக நடைபெற்ற பயிற்சித் திட்டங்கள்**

உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட குழுக்களுக்கு மேலதிகமாக, பொதுவாக அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அவற்றுள் கணினி பற்றிய அடிப்படை அறிவை விருத்தி செய்யும் நோக்கில் e-mail, internet, Google forms , MS office பற்றிய பயிற்சிகள் தகவல் அறியும் சட்டம் குறித்த பயிற்சி மற்றும் தொற்றாத நோய்களை தடுப்பதற்கான நல்ல சுகாதார பழக்கவழக்கங்கள் குறித்த செயலமர்வு ஆகியவை நடத்தப்பட்டன.

மேலும், அமைச்சின் சகல உத்தியோகத்தர்களினதும் மனப்பாங்குகளை விருத்திசெய்யும் நோக்கில் பயிற்சித்திட்டம் மற்றும் அரச கரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பயிற்சி நடத்தப்பட்டன. இதன்படி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட பொதுச் செயலமர்வுகளில் 316 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I இன் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் கற்கைநெறிகள்**

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I இன் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டலுக்குப் பதிலாக நடத்தப்படும் 10 நாள் பயிற்சி நெறியை மாவட்ட மட்டத்தில் நடத்துவது தொடர்பாக ஒதுக்கீடுகளை வெளியிடுதல் மற்றும் கற்கைநெறிகளை ஒருங்கிணைத்தல் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, 2023 ஆம் ஆண்டில் 07 மாவட்டங்களில் உள்ள 669 உத்தியோகத்தர்களுக்கு இந்த அமைச்சின் ஒதுக்கீடுகளில் குறித்த பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டது.

**நீண்ட கால உள்நாட்டுப் பயிற்சிநெறிகள்**

பொது நிர்வாக அமைச்சின் ஐந்து பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு பட்டப்பின் பட்டம் மற்றும் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

**குறுகிய கால உள்நாட்டுப் பயிற்சிநெறிகள்**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் தொழில்சார் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறிக்கு 09 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**மொழிப் பயிற்சி திட்டங்கள்**

தமிழ் மொழிப் பயிற்சி திட்டங்கள்
அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இன் படி, அரச உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய அரச கருமமொழிப் புலமையை வழங்குவதற்கு அமைச்சில் பணிபுரியும் இரண்டாம் நிலை உத்தியோகத்தர்களுக்கான தமிழ் மொழிப் பயிற்சித் திட்டம் (150 மணித்தியாலங்கள்) அரச கருமமொழிகள் வளப் பங்களிப்பாளரொருவரின் கீழ் இரண்டு குழுக்களாக 208 உத்தியோகத்தர்களுக்கு நிகழ்நிலை முறையில் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

**ஆங்கில மொழிப் பயிற்சித் திட்டங்கள்**

அமைச்சில் பணிபுரியும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்யும் பொருட்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மொழிப் பிரிவின் சிரேஷ்ட ஆலோசகர் ஒருவரின் வளப்பங்களிப்பின்

கீழ் ஆங்கில மொழிப் பயிற்சி நெறி நடாத்தப்பட்டது

**வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள்**
**நீண்ட காலப் பயிற்சித் திட்டங்கள்**

2023 ஆம் ஆண்டில், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் மூலம் 20 பட்டப்பின் படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததோடு இந்த அமைச்சிலிருந்து விண்ணப்பித்த எந்தவொரு உத்தியோகத்தரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

**குறுகிய காலப் பயிற்சி திட்டங்கள்**

இத்திட்டத்தின் கீழ், அமைச்சின் பணிக்குழாத்துக்குரிய 13 பதவிநிலை உத்தியோகத்தர்கள் பாகிஸ்தான், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் 07 பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டுள்ளனர். மேலும், கனடாவில் நடைபெற்ற (NLEAP) திட்டத்தில் அமைச்சின் 07 உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர்

**அமைச்சுக்குப் புறம்பான உத்தியோகத்தர்களது தகைமை விருத்தித் திட்டங்கள்**

அரச சேவையில் மனித வளத்தின் அறிவை விருத்தி செய்யும் நோக்கில், நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களிலும் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்களை இலக்காகக் கொண்டு

நிகழ்நிலை முறையில் மாவட்ட மட்டத்தில் பயிற்சி நெறிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதன் கீழ் 07 கட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் சிங்கள மொழியிலும் ஒரு பயிற்சி நிகழ்ச்சி தமிழ் மொழியிலும் இடம்பெற்றன. இதன் கீழ் 2510 இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் பயிற்சித் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

**வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகளை நடத்துதல்**

பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத - பிரிவு 2 சேவை வகுதியின் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை 2023 ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்டது. இது தவிர, இந்த அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத - பல்நோக்கு பிரிவு 01 சேவைப் வகுதியின் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை 2023 டிசம்பர் மாதத்தில் நடத்தப்பட்டது

**விஷேட திட்டங்கள்**
**கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகாமை நிறுவனத்தின் (KOICA) கீழ் இயங்கும் திட்டங்கள்**.

இதன் கீழ், இலங்கையின் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் கொவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக-பொருளாதார மீள்திறனை வலுப்படுத்தும் செயற்திட்டத்தினை, நடைமுறைக்குக் கொண்டுவரும் செயற்திட்டத்தின் கீழ் 2023.07.10 மற்றும் 2023.12.19 செயற்குழுக் கூட்டங்கள் இடம்பெற்றதோடு அச்செயற்றிட்டத்தின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டது. 2023 ஆம் ஆண்டு ஒட்டுமொத்த பௌதிக முன்னேற்றம் 30% ஆக இருப்பதோடு நிதி முன்னேற்றம் 21% என்று முன்னேற்ற அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவுடன் இணைந்து நடத்திய திட்டங்கள்**

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் ஐந்தாண்டு தேசிய செயற்திட்டத்தின் கீழமைந்த உத்திகளை அரச நிறுவனங்களில்

நடைமுறைப்படுத்துவதற்கு அரச உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக ஊழல் எதிர்ப்பு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான பயிற்சித் திட்டங்களுக்கு ஒருங்கிணைப்பு ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் தலைமைச் செயலகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 6 மாகாணங்கள் அடங்கும் வகையில் 2 ஊழல் எதிர்ப்பு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக மூன்று நாள் வதிவிட பயிற்சிச் செயலமர்வுத் தொடர்கள் 06 மற்றும் திறமை வாய்ந்த உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான ஒரு நாள் பயிற்சிச் செயலமர்வுத் தொடர்கள் 06 நடத்தப்பட்டுள்ளதோடு அதற்கான ஒருங்கிணைப்பு ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

**பொதுவான திட்டங்கள்**

அமைச்சின் பதவிநிலை மற்றும் பதவிநிலை சாராத ஊழியர்களிடையே பரஸ்பர நட்புறவை விருத்தி செய்தல், உத்தியோகத்தர்களின் உளவியல் சமநிலையைப் பாதுகாத்தல், குழு உணர்வை வளர்த்தல் மற்றும் உத்தியோகத்தர்களை ஊக்குவிகத்தல் முதலிய உன்னத நோக்கங்களை முன்னிருத்தி கடமைக்கு அப்பாற்பட்ட உத்தியோகத்தர்களின் விஷேட திறமைகள் மற்றும் அழகியல் மற்றும் ஆக்கப்பூர்வமான கலைத் திறன்களை மேம்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரசோகயா 2023 பொழுதுபோக்கிற்கான நிகழ்ச்சி அமைச்சின் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் சங்ஹிந்த கேட்போர் கூடத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
மேலும், ரசோகயா நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பாராட்டுக் கடிதங்கள் வழங்கப்பட

**பிரதீப் யசரத்ன**
**செயலாளர்**
**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

## 03 வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்றுகள்

ஏசீஏ- எப்

**2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023 ரூபா | | குறிப்பு | உண்மை நிலை 2023 ரூபா | உண்மை நிலை 2022 ரூபா | |
|---|---|---|---|---|---|
| | **வருமானப் பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| 1,745,000,000 | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 1,790,807,383 | 1,650,494,125 | ஏசீஏ-1 |
| **1,745,000,000** | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | **1,790,807,383** | **1,650,494,125** | |
| | **வருமானமற்ற பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 369,923,199,465 | 86,765,544,160 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 195,705,368 | 125,683,366 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 681,798,712 | 725,454,832 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **370,800,703,545** | **87,616,682,358** | |
| **1,745,000,000** | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **372,591,510,929** | **89,267,176,483** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | | | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **372,591,510,929** | **89,267,176,483** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| 13,727,561,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 12,667,148,342 | 38,727,738,262 | ஏசீஏ-2(ை) |
| 1,345,993,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 1,077,028,132 | 693,069,036 | ஏசீஏ-2(ை) |
| 1,545,185,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 1,433,956,887 | 470,603,513 | ஏசீஏ-2(ை) |
| | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | | | ஏசீஏ-2(ை) |
| 1,722,000 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 1,320,605 | 562,609 | ஏசீஏ-2(ை) |
| **16,620,461,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **15,179,453,968** | **39,891,973,420** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 179,939,000 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 115,728,190 | 53,524,629 | ஏசீஏ-2(ை) |
| 1,459,500,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 126,340,821 | 109,465,773 | ஏசீஏ-2(ை) |
| 2,592,728,808 | மூலதன மாற்றல்கள் | 12 | 712,776,481 | 1,957,853,900 | ஏசீஏ-2(ை) |
| | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | | | ஏசீஏ-2(ை) |
| 123,100,000 | திறன் விருத்தி | 14 | 36,523,798 | 33,440,891 | ஏசீஏ-2(ை) |
| 30,309,271,192 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 23,276,504,083 | 14,103,340,240 | ஏசீஏ-2(ை) |
| **34,664,539,000** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **24,267,873,373** | **16,257,625,433** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | | | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 302,513,575 | 179,682,741 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | 951,932,941 | 2,419,364,574 | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | - | - | |
| | | | **1,254,446,516** | **2,599,047,315** | |
| 51,285,000,000 | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | **40,701,773,857** | **58,748,646,168** | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **331,889,737,072** | **30,518,530,315** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | (331,889,737,072) | (30,518,530,315) | ஏஇஏ-7 |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | ஏஇஏ-3 |
| | | | **331,889,737,072** | **30,518,530,315** | |

3.2 கட்டு நிதி சீராக்கக் கணக்கு

ஏசீஏ -பீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 14,373,881,123 | 14,441,006,946 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 2,089,992,065 | 1,819,857,837 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | 16,463,873,188 | 16,260,864,783 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 1,870,710,873 | 1,493,768,438 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 14,373,881,123 | 14,441,006,946 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | 17,885,153 | 17,885,154 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 201,396,039 | 308,204,245 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 16,463,873,188 | 16,260,864,783 |

பக்க இலக்கம் ....... முதல் ..... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் ....... முதல் ....... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.......................
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: பிரதீப் யசரத்ன
பதவி : செயலாளர்
திகதி : 2024.02. 26

Geetha Hemanthi Rubasinghe
Chief Financial Officer
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils and Local Government

.......................
பிரதான நிதி உத்தியோகத்தர்
பெயர்:
திகதி: 2024.02. 27

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils and Local Government,
Independence Square, Colombo 07.

2

## 3.3 நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

| | | ஏசீஏ- சீ |
|---|---|---|
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று** | | |
| | **உண்மை** | |
| | **2023** | **2022** |
| | **ரூபா** | **ரூபா** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | 26,136,215 | 19,791,393 |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 84,735,550 | 136,336,742 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 369,923,199,465 | 86,765,544,160 |
| முற்பணங்களை அறவிடல் | 78,607,108 | 47,104,446 |
| வைப்புக்களின் பெறுகை | 195,705,369 | 98,695,025 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **370,308,383,707** | **87,067,471,766** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 2,197,377,667 | 6,125,551,531 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 1,110,841,453 | 173,620,936 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 362,889,263,910 | 78,314,474,067 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | | |
| முற்பணக் கொடுப்பனவு | 92,927,717 | 57,234,654 |
| வைப்புக் கொடுப்பனவு | 302,513,576 | 149,489,859 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **366,592,924,323** | **84,820,371,047** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **3,715,459,384** | **2,247,100,719** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **லீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 3,715,459,384 | 2,247,100,719 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **3,715,459,384** | **2,247,100,719** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(3,715,459,384)** | **(2,247,100,719)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **(0.00)** | **(0.00)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **(0.00)** | **(0.00)** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **(0.00)** | **(0.00)** |

3.4 காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று

**அறிக்கையிடலின் அடிப்படை**

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2023 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

3.5 நிதி அறிக்கை குறிப்புகள்

| | | | |
|---|---|---|---|
| | | | **ஏசிஏ-7** |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல; அறிக்கை** | | |
| | **அறிக்கையிடல் நிறுவனத்தின்** சார்பாக **பிற நிறுவனங்களால்** சேகரிக்கப்படும் வருவாய் | 1,764,671,168 | |
| | மற்ற **நிறுவனங்களின்** சார்பாக **அறிக்கையிடும் நிறுவனத்தால்** ஏற்படும் செலவு | 362,889,263,910 | |
| | **பிற நிறுவனங்களின்** அட்வான்ஸ் "பி" கணக்கில் அறிக்கையிடல் நிறுவனத்தி செய்யப்பட்ட வரவு | 156,985 | |
| | **பிற நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின்**அட்வான்ஸ் "பி" கணக்கிற்கு செய்யப்பட்ட செலவு | 626,049,086 | |
| | | | 365,280,141,150 |
| குறைவாக: | மற்ற **நிறுவனங்களின்** சார்பாக **அறிக்கையிடல் நிறுவனத்தால்** சேகரிக்கப்படும் வருவாய் | 84,735,550 | |
| | **அறிக்கையிடல் நிறுவனத்தின்** சார்பாக **மற்ற நிறுவனங்களால்** செய்யப்படும் செலவு | 32,423,648,837 | |
| | **பிற நிறுவனங்களின்** அட்வான்ஸ் "பி" கணக்கில் அறிக்கையிடல் நிறுவனத்தி செய்யப்பட்ட செலவு | 22,857,482 | |
| | **பிற நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின்**அட்வான்ஸ் "பி" கணக்கிற்கு செய்யப்பட்ட வரவு | 859,162,209 | |
| | | | 33,390,404,078 |
| | **2023 டிசம்பர் 31 இல் உள்ள பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | | 331,889,737,072 |

3.6 வருமானச் சேகரிப்பு தொடர்பான செயலாற்றுகை

ரூ. ,000

| வருவாய் குறியீடு | வருவாய் குறியீட்டின் விளக்கம் | வருவாய் மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருவாய் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் | திருத்தப்பட்ட | தொகை (ரூ.) | ஒரு முன்கூட்டியே திருத்தப்பட்ட வருவாய் மதிப்பீடு |
| 20.02.01.01 | அரசு கட்டிடம் மற்றும் வீட்டுவசதி வாடகை | 1,400,000,000 | 1,600,000,0000 | 1,634,693,929.36 | 102.16% |

3.7 ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை

| ஒதுக்கீடு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவு | திருத்தப்பட்ட ஒதுக்கீட்டின் சதவீதமாக ஒதுக்கீடு பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் | திருத்தப்பட்ட | | |
| **தொடர்ச்சியான** | 16,014,000,000.00 | 16,420,461,000.00 | 15,179,453,968.00 | 91.33 % |
| **மூலதனம்** | 32,855,000,000.00 | 34,664,539,000.00 | 24,267,873,374.00 | 70 % |

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடலின் செயலாற்றுகை

ரூபா. ,000

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விபரம் | 2021.12.31 ஆந் திகதிக்கு நில அளவையியலாளர் அறிக்கைக்கு ஏற்ப நிலுவை | 2021.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கைக்கு ஏற்ப நிலுவை | இன்னும் கணக்கிடப்பட வேண்டிய | முன்னேற்றம் % இல் அறிhjiக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் வடிவமைப்புக்கள் | | 7,840,635 | - | 100% |
| 9152 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | | 1,814,646 | - | 100% |
| 9153 | காணி | | 3,888,530 | - | 100% |
| 9154 | புலனாகாத சொத்துக்கள் | | 39,354 | - | 100% |
| 9155 | உயிர்ச் சொத்துக்கள் | | - | - | - |
| 9160 | வேலை இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற | | 695,714 | - | 100% |
| 9180 | வரிச் சொத்துக்கள் | | 95,000 | - | 100% |

## 04 செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

| | முக்கிய குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்படும் வெளியீடுகளின் விகிதாசாரம் (%) ஆக உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | | %90 - %100 | %89-%75 | - %50 %74 |
| 1 | அரசினூடாக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் தேசிய கொள்கைகளின் மீது அமைந்துள்ள “நாட்டிற்கான வேலைக் கலாசாரம்” இனை ஏற்படுத்தும் வகையில் குறித்த இராஜாங்க அமைச்சுக்களுக்கான கொள்கை ரீதியான வழிகாட்டல்களை மேற்கொள்ளல் மற்றும் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்துக்கு உரித்தான கொள்கைகளை வகுத்தல், தேசிய வரவுசெலவுத் திட்டம், அரச முதலீட்டு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழமைந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அமைச்சுக்குரிய திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் விடயங்கள் மற்றும் பணிகளுடன் அவற்றுடன் தொடர்பான கொள்கைகளைத் தொகுத்தல், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் | | ✓ | |
| 2 | இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை, இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவை மற்றும் இணைந்த சேவைகளின் தாபன, நிர்வாக மற்றும் ஆளணி முகாமைத்துவம் | | ✓ | |
| 3 | பாராளுமன்றத்துடன் தொடர்பான மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரசினால் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகள் | ✓ | | |

## 5. நலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதற்கான முன்னேற்றம் 2023.12.31 ஆம் திகதிக்கு

| தொடர் இலக்கம் | நோக்கம் | இலக்குகள் | வெற்றிக் குறிகாட்டிகள் | அடைந்துள்ள முன்னேற்றம் | | | உரிய பிரிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-49% | 50%-74% | 75%-100% | |
| 1 | 8. அனைவருக்கும் ஊட்டமிகு, பரிபூரணமான மற்றும் நிலையான பொருளாதார விருத்தி, முழு உற்பத்தித்திறன் மற்றும் நல்ல வேலைவாய்ப்புக்களை ஊக்குவித்தல் | 8.2. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விளைதிறன்மிக்க பொதுச் சேவையொன்றை உருவாக்குதல் | அமைச்சின் மனித வளங்களின் விளைதிறனை அதிகரிக்க நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை | | 73% | | மனித வள அபிவிருத் திகள் |
| | | | சர்வதேச அறிவு நிறைந்த உத்தியோகத்தர் குழுவை உருவாக்குவதற்கு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய கால/நீண்ட கால பயிற்சிகளின் எண்ணிக்கை. | | | 100% | |
| 2 | 9. வலுவான உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டயெழுப்புதல் முழுமையான மற்றும் நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்து புதுமைகளை | 9.1 அமைச்சிடமுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை உயர் தரத்துடனும், நம்பகமாகவும், நிலையானதாகவும் பேரழவுகளை எதிர்க்கும் வகையிலும் விருத்தி செய்தல் | ஆண்டினுள் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்படி பழுதுபார்க்கப்பட வேண்டிய சுற்றுலா பங்களாக்களில் பழுதுபார்க்கப்பட்ட சுற்றுலாப் பங்களாக்களின் எண்ணிக்கை. | | | 100% | வீடமைப் பு மற்றும் அபிவிருத் தி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஊக்குவித்தல் | | | | | | |
| 3 | 12. நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல் | 12.7 தேசிய முன்னுரிமைகளுக்கு ஏற்ப நிலையான பொதுக் கொள்முதல் பயன்பாடுகளை ஊக்குவிப்பதற்காக அமைச்சிடமுள்ள வளங்களை முழுத் திறனுடன் பராமரித்தல் | வருடத்தில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின்படி பழுதுபார்க்கப்பட வேண்டிய வாகனங்களில் பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | | | 100% | உள்ளக நிர்வாகம் |
| | | | கொள்முதல் நடவடிக்கைகளுக்கான வரவுசெலவுத் திட்ட நிதிப் பயன்பாட்டின் சதவீதம் | | 65.32% | | கணக்குகள் |
| 4 | 16. நிலையான அபிவிருத்திக்கான அமைதியான மற்றும் உள்ளீர்க்கப்பட்ட சமூகங்களின் முன்னேற்றம் ஊக்குவித்தல் மற்றும் அனைவருக்கும் நீதிக்கான அணுகலை வழங்குதல் மற்றும் பொறுப்பு மற்றும் உள்ளீர்க்கப்பட்ட நிறுவனங்களை உருவாக்குதல் | 16.6 அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படையான நிறுவனங்களை விருத்தி செய்தல் | குறித்த காலத்தில் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை திரைசேரியில் சமர்ப்பித்தல் | | | 100% | |
| | | | பிப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிதிக்கூற்றை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பித்தல் | | | 100% | கணக்குகள் |
| | | | பிப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முற்பணங்கள் பி கணக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பித்தல் | | | 100% | கணக்குகள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின்படி குறித்த திகதிக்கு கணக்கெடுப்புப் பணிகளை பூர்த்தி செய்தல் | | | 100% | |
| | | 16.7அனைத்து மட்டங்களிலும் பதிலளிக்கக்கூடிய, அனைவரும் உள்ளடங்கிய, பங்கேற்புடன் கூடிய மற்றும் பிரதிநிதித்துவத்துடன் தீர்மானமெடுக்கும் செயன்முறையை உறுதி செய்தல | பொது நிறுவனங்களில் பாலினம் மற்றும் வயது மட்டத்தின்படி நிறைவேற்றுப் பதவிகள் பிரிந்து சென்றுள்ள அளவு | | 49.91% | | அனைத்து நாடளாவிய சேவைகள் பிரிவு |
| | | | பொது நிறுவனங்களில் பாலினம் மற்றும் வயது மட்டத்தின்படி நிறைவேற்று அல்லாத பதவிகள் பிரிந்து சென்றுள்ள அளவு | | 50.14% | | இணைந்த சேவைகள் பிரிவு |
| | | 16.10 தேசிய சட்ட அமைப்புக்கு ஏற்ப பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குள்ள உரிமையை உறுதி செய்தல் மற்றும் வினைத்திறன் வாய்ந்ததும் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் கூடியதுமான பொதுச் சேவையொன்றைப் பேணுதல் | தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளுள் தகவல்கள் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | | | 100% | உள்ளக நிர்வாகம் |
| | | | பெறப்பட்ட பொதுமக்கள் முறையீடுகளுள், தீர்வுக்காக அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | | | 100% | |

## 6. மனித வளங்கள் சுயவிபரங்கள்

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித்திட்டங்கள் | பயிற்றுவிக்கப்பட்ட பணிக்குழாம் உறுப்பினர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் கால எல்லை | மொத்த முதலீடு ( ரூ.மில்லியன்) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை உள்நாட்டு/ வெளிநாட்டு) | வெளியீடுகள்/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| 1 | அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் கற்கைநெறி | 1 | 1 வருடம் | 0.26 | | உள்நாட்டு | மிகச்சிறந்தசேவை வழங்களுக்கு அரச நிர்வாக, முகாமைத்துவ,சர்வதேச உறவுகள்,சமூக விஞ்ஞானம் மற்றும் தொழில்சார் மொழித்திறன்கள் முதலிய விஷேட துறைகளுக்குரிய அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்தல் |
| 2 | அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் கற்கைநெறி | 1 | 1 வருடம் | 0.18 | | உள்நாட்டு | |
| 3 | பொருளியல் விஞ்ஞான பட்டப்பின் கற்கைநெறி | 1 | 1 வருடம் | 0.10 | | உள்நாட்டு | |
| 4 | சர்வதேச உறவுகள் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி | 1 | 1 வருடம் | 0.05 | | உள்நாட்டு | |
| 5 | தொழில்சார் ஆங்கில கற்கைநெறி | 9 | 1 வருடம் | 0.83 | | உள்நாட்டு | |
| 6 | தமிழ்மொழிப் பயிற்சித் திட்டம் | 207 | 150 மணித்தியாலங்கள் | 0.00 | | உள்நாட்டு | மிகச்சிறந்தசேவை வழங்களுக்கு மொழித்திறன்களை |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | ஆங்கிலமொழிப்பயிற்சித் திட்டம் | 35 | 12 நாட்கள் | 0.00 | | உள்நாட்டு | விருத்தி செய்தல் |
| 8 | தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறைவிதிகள் | 95 | 3 மணித்தியால ங்கள் | 0.02 | | உள்நாட்டு | மிகச்சிறந்தசேவை வழங்களுக்கு குறித்த உத்தியோகத்தர்களது அடிப்படை மற்றும் தொழிநுட்பத் திறன்களை விருத்தி செய்தல் |
| 9 | நிதி ஒழுங்குவிதிகள் பற்றிய அடிப்படை அறிவு | 51 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 10 | அலுவலக நடைமுறைகள் பற்றிய அடிப்படை அறிவு | 65 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 11 | தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி அறிவு | 40 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 12 | பற்றிய அடிப்படை அறிவு | 38 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 13 | ஒய்வூதியங்களைத் தயாரித்தல் | 80 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 14 | ஒரு அரச உத்தியோகத்தரிடம் எதிர்பார்க்கப்படும் ஒழுக்க நடத்தை பற்றிய அடிப்படை அறிவு (ஆரம்ப தரம்) | 75 | 3 மணித்தியால ங்கள் | 0.03 | | உள்நாட்டு | |
| 15 | Uses of E-mail, Internet, Google Form, MS Office கணிணி - E mail, Internet, Google Form, MS Office பயன்பாடு | 38 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 16 | தகவல் அறியும் சட்டம் பற்றி விழிப்புணர்வூட்டல் | 65 | 3 மணித்தியால ங்கள் | 0.02 | | உள்நாட்டு | மிகச்சிறந்தசேவை வழங்களுக்கு குறித்த உத்தியோகத்தர்களது |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17 | சிங்கள மொழியில் கடிதம் எழுதுதல் | 48 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | அடிப்படை மற்றும் தொழிநுட்பத் திறன்களை விருத்தி செய்தல் |
| 18 | ஒரு அரச உத்தியோகத்தரிடம் எதிர்பார்க்கப்படும் ஒழுக்க நடத்தை பற்றிய அடிப்படை அறிவு | 28 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 19 | நேர முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவம் | 63 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 20 | களஞ்சியப்படுத்தல் , பொருட்களின் வருடாந்தக் கணக்கெடுப்பு மற்றும் சொத்துக்களை அகற்றுதல் | 54 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 21 | தனிப்பட்ட கோப்புகளைப் பராமரித்தல் | 43 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 22 | சம்பளங்கள் மற்றும் சம்பளவேற்றங்களைத் தயாரித்தல் | 47 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 23 | அஞ்சல் முகாமைத்துவம் | 35 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 24 | விடுமுறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் கடமைகள் | 64 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 25 | வினைத்திறன்மிக்க அரச சேவையில் உங்கள் வகிபாகம் | 35 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 26 | தலைமைத்துவம், குழுச்செயற்பாடு மற்றும் நல்ல குழு உறுப்பினராக இருத்தல் | 44 | 3 மணித்தியால | 0.01 | | உள்நாட்டு | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ங்கள் | | | | |
| 27 | அரச வாகனங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பற்றிய அறிவு | 28 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 28 | பாதுகாப்புக் கோட்பாடுகள், போக்குவரத்துச் சட்டங்கள் மற்றும் விபத்துக்களைத் தடுத்தல் | 27 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 29 | தொற்றாத நோய்களைத் தடுப்பதற்கான சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்கள் | 90 | 3 மணித்தியால ங்கள் | 0.02 | | உள்நாட்டு | |
| 30 | கணக்காய்வு | 34 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 31 | மூலோபாய முறைகள் பற்றிய அறிவு | 27 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 32 | அறிக்கை எழுதுதல் | 31 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | மிகச்சிறந்தசேவை வழங்களுக்கு குறித்த உத்தியோகத்தர்களது அடிப்படை மற்றும் தொழிநுட்பத் திறன்களை விருத்தி செய்தல் |
| 33 | ஒழுங்க நடைமுறைக்கோவை பற்றிய நடைமுறைப் புரிதல் | 19 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 34 | தகவல் தொழில்நுட்ப மற்றும் கணினி அறிவு | 64 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 35 | பற்றிய அடிப்படை அறிவு | 60 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 36 | தகவல் கட்டமைப்பு முகாமைத்துவம் | 38 | 3 மணித்தியால ங்கள் | 0.01 | | உள்நாட்டு | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 37 | தரவு மற்றும் தகவல்களை விளைதிறனுள்ள விதத்தில் முன்வைத்தல் | 45 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 38 | MS Access | 48 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 39 | பொருட்களின் கணக்கெடுப்பு | 35 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 40 | உற்பத்தித்திறன் எண்ணக்கரு | 45 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 41 | சேவைப்பயனாளர் பராமரிப்பு, நெறிமுறைகள் மற்றும் சிறந்த தொடர்பாடல் | 51 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 42 | தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் பற்றிய அடிப்படை அறிவு | 27 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 43 | கணினித் தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை அறிவு | 35 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 44 | அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் | 41 | 3 மணித்தியாலங்கள் | 0.02 | | உள்நாட்டு | |
| 45 | கொள்முதல் செயல்முறை | 20 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 46 | ஒரு நல்ல தலைவனிடமுள்ள குணாதிசயங்கள் | 22 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 47 | சமையல் தொடர்பான நவீன முறைகள், உணவு தொடர்பான சுகாதாரப் பாதுகாப்பு | 29 | 2 நாட்கள் | 0.20 | | உள்நாட்டு | மிகச்சிறந்தசேவை வழங்களுக்கு குறித்த உத்தியோகத்தர்களது அடிப்படை மற்றும் தொழிநுட்பத் திறன்களை விருத்தி செய்தல் |
| 48 | உணவு வகைப்பாடு, களஞ்சியப்படுத்தல் மற்றும் அறிக்கைகளை வைத்திருத்தல் | | | | | உள்நாட்டு | |
| 49 | சமையல் உபகரணங்களின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு | | | | | உள்நாட்டு | |
| 50 | இல்ல நிர்வாகம், உபகரணங்கள் பராமரிப்பு மற்றும் அலங்காரம் | | | | | உள்நாட்டு | |
| 51 | தோட்ட முகாமைத்துவம், உபகரணங்கள் பராமரிப்பு மற்றும் அழகுபடுத்துதல் | | | | | உள்நாட்டு | |
| 52 | இயந்திர மற்றும் தொழில்நுட்ப வேலைகள் பற்றிய அடிப்படை அறிவு | | | | | உள்நாட்டு | |
| 53 | நல்ல மனப்பாங்கு சார் எண்ணக்கருக்கள் | 57 | 3 மணித்தியாலங்கள் | 0.01 | | உள்நாட்டு | |
| 54 | ரசோகாயா - பொழுதுபோக்கு நிகழ்ச்சி | 400 | 4 மணித்தியாலங்கள் | 0.20 | | உள்நாட்டு | உத்தியேதாகத்தர்களுக்கான குழுக்களைக் கட்டியெழுப்புதல், ஆளிடைத் தொடர்புகள், ஊக்கம் மற்றும் அழகியல் மற்றும் ஆக்கபூர்வமான கலைசார் திறன்களை விருத்திசெய்து மிகச்சிறந்த |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | சேவையொன்றை வழங்குதல் |
| | சேவை அறிமுகப் பயிற்சித் திட்டங்கள் – முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 690 | 10 நாட்கள் | 0.02 | | உள்நாட்டு | மிகச்சிறந்தசேவை வழங்களுக்கு அரச துறைக்கு புதிதாக வருகை தருபவர்களது அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்தல் |
| 56 | திறன் விருத்தித் திட்டம் - நூலகர் சேவைக்கான சேவை அறிமுகப் பயிற்சித் திட்டம் | 59 | 10 நாட்கள் | 0.20 | | உள்நாட்டு | |
| 57 | மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் ஏனைய அமைச்சுக்களுக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான சேவைக்காலப் பயிற்சி - மேல் மாகாணம் | 420 | 10 நாட்கள் | 0.02 | | உள்நாட்டு | மிகச்சிறந்தசேவை வழங்களுக்கு அமைச்சில் பணிபுரியும் குறித்த உத்தியோகத்தர்களது அடிப்படை மற்றும் தொழிநுட்பத் திறன்களை விருத்தி செய்தல் |
| 58 | மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் ஏனைய அமைச்சுக்களுக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான சேவைக்காலப் பயிற்சி - வடமேல் மாகாணம் | 340 | 10 நாட்கள் | 0.02 | | உள்நாட்டு | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 59 | மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் ஏனைய அமைச்சுக்களுக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான சேவைக்காலப் பயிற்சி - தென் மாகாணம் | 300 | 10 நாட்கள் | 0.02 | | உள்நாட்டு | |
| 60 | மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் ஏனைய அமைச்சுக்களுக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான சேவைக்காலப் பயிற்சி - சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணம் | 750 | 10 நாட்கள் | 0.02 | | உள்நாட்டு | |
| 61 | மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் ஏனைய அமைச்சுக்களுக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான சேவைக்காலப் பயிற்சி - வட மத்திய மாகாணம் | 200 | 10 நாட்கள் | 0.02 | | உள்நாட்டு | |
| 62 | மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் ஏனைய அமைச்சுக்களுக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான சேவைக்காலப் பயிற்சி - மத்திய மாகாணம் | 450 | 10 நாட்கள் | 0.02 | | உள்நாட்டு | |
| 63 | மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் ஏனைய அமைச்சுக்களுக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை மற்றும் | 80 | 10 நாட்கள் | 0.02 | | உள்நாட்டு | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான சேவைக்காலப் பயிற்சி - வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் | | | | | | |
| 64 | மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் ஏனைய அமைச்சுக்களுக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான சேவைக்காலப் பயிற்சி - நாடளாவிய (தமிழ் மொழிமூலம்) | 500 | 10 நாட்கள் | 0.03 | | உள்நாட்டு | |
| 65 | Executive Training Programme for Senior Government Officials of Sri Lanka in Pakistan | 6 | 15 நாட்கள் | | 1.19 | வெளிநாட்டு | நிறைவேற்று உத்தியோகத்தர்களது சர்வதேச உறவுகளுடன் தொடர்புடைய திறமைகளை விருத்தி செய்தல் |
| 66 | Seminar on Development of Digital Culture and Creative Industry for Developing Countries | 1 | 14 நாட்கள் | | 0.12 | வெளிநாட்டு | |
| 67 | 2023 KOICA Invitational Fellowship Training Programe to Pensions Institutions In Sri Lanka Capacity Building for Old Age Income Security Scheme & National Pension Scheme Management | 1 | 9 நாட்கள் | | 0.08 | வெளிநாட்டு | |
| 68 | Seminar on Chinese Language & Culture for Diplomatic Officials from Developing Countries | 1 | 14 நாட்கள் | | 0.24 | வெளிநாட்டு | |
| 69 | Seminar on Human Resources for Developing Countries | 2 | 14 நாட்கள் | | 0.24 | வெளிநாட்டு | |
| 70 | ITEC: Training Slots under the Indian Technical and Economic Cooperation ( ITEC) Scholarship Scheme of the Ministry of External Affairs, Government of India for the Year 2023 in India ( Short term) | 1 | 19 நாட்கள் | | 0.13 | வெளிநாட்டு | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 71 | Seminar on Management Capacity Enhancement in Primary and Secondary Schools in Developing Countries | 2 | 14 நாட்கள் | | 0.25 | வெளிநாட்டு | |

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2023**

| ஊழியர்களின் எண்ணிக்கை - பொது நிர்வாக அமைச்சு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **பதவி** | **உரித்தாகும் சேவை** | **தரம்** | **சம்பள அளவுத் திட்டம்** | **2023 டிசம்பர் 31** | | |
| | | | | | **அங்கீகரிக்கப்பட்ட** | **இணைத்துக் கொள்ளப்பட்ட** | **வெற்றிடங்கள்** |
| **மொத்த பதவிகளின் எண்ணிக்கை** | | | | | **926** | **743** | **180** |
| **சிரேஷ்ட மட்டம்** | செயலாளர் | - | - | SL 4 | 1 | 1 | 0 |
| | மேலதிக செயலாளர் | இலங்கை நிர்வாக சேவை | விஷேட | SL 3 | 5 | 4 | 1 |
| | தாபனங்களின் பணிப்பாளர் நாயகம் | இலங்கை நிர்வாக சேவை | விஷேட | SL 3 | 1 | 1 | 0 |
| | இணைந்த பணிப்பாளர் நாயகம் | இலங்கை நிர்வாக சேவை | விஷேட | SL 3 | 1 | 1 | 0 |
| | பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) | இலங்கை திட்டமிடல் சேவை | விஷேட | SL 3 | 1 | 0 | 1 |
| | பிரதம நிதி உத்தியோகத்தர் | இலங்கை கணக்காளர் சேவை | விஷேட | SL 3 | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இலங்கை நிர்வாக சேவை | 1 | SL 1 | 6 | 5 | 1 |
| | பிரதம பொறியியலாளர் | இலங்கை பொறியியலாளர் சேவை | 1 | SL 1 | 1 | 0 | 1 |
| | பிரதம கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை | 1 | SL 1 | 1 | 1 | 0 |
| | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | இலங்கை கணக்காளர் சேவை | 1 | SL 1 | 1 | 0 | 1 |
| | பணிப்பாளர் (நிர்வாகம்) | இலங்கை நிர்வாக சேவை | 1 | SL 1 | 1 | 1 | 0 |

ஊழியர்களின் எண்ணிக்கை - பொது நிர்வாக அமைச்சு

| | **பதவி** | **உரித்தாகும் சேவை** | **தரம்** | **சம்பள அளவுத் திட்டம்** | **2023 டிசம்பர் 31** | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | **அங்கீகரிக்கப்பட்ட** | **இணைத்துக் கொள்ளப்பட்ட** | **வெற்றிடங்கள்** |
| | பணிப்பாளர் (விஞ்ஞான சேவைகள், கட்டட நிர்மாண மற்றும் தொழில்நுட்ப சேவைகள்) | இலங்கை நிர்வாக சேவை | 1 | SL1 | 1 | 0 | 1 |
| | பணிப்பாளர் (திட்டமிடல் சேவைகள்) | இலங்கை நிர்வாக சேவை | 1 | SL 1 | 1 | 1 | 0 |
| | பணிப்பாளர் (கணக்காளர் சேவைகள்) | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவைகள் | 1 | SL 1 | 1 | 1 | 0 |
### 1.3.8 திட்டமிடல் பிரிவு

- அமைச்சின் வருடாந்த செயல்திட்டத்தை தயாரித்தல் மற்றும் முன்னேற்றக் கட்டுப்பாடு.
- வருடாந்த செயல்திறன் அறிக்கையை தயாரித்து அதை கணக்காய்வாளர் நாயகம் மற்றும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- கணக்காய்வாளர் நாயகம் மற்றும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் மாவட்ட செயல்திறன் அறிக்கை தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
- மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் அமைச்சு அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து அறிக்கை செய்தல்.
- பாராளுமன்ற வரவு செலவுத் திட்டத்திற்கு அமைச்சின் வருடாந்த முன்னேற்றத்தை முன்வைத்தல்.
- தேசிய வள விபரத்தை டிஜிட்டல் மயமாக்குதல்.
- தேவைக்கேற்ப சிறப்பு மற்றும் அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கான கருத்திட்ட எண்ணக்கருப் பத்திரங்களை தயாரித்தல் மற்றும் வரவுசெலவுத்திட்ட தயாரிப்புக்காக நிதி அமைச்சுக்கு சமர்ப்பித்தல்.
- நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் ஒருங்கிணைப்பு.

### 1.3.9 பிரதேச நிர்வாக மறுசீரமைப்புப் பிரிவு

- இ - கிராம உத்தியோகத்தர் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், யாழ்ப்பாணப் பகுதியில் இன்கியுபேட்டர் / எக்சலேட்டர் இயந்திரங்களுக்கான வணிக நிலையத்தை நிறுவி இயக்குவதற்கான கருத்திட்டம் மற்றும் உள்நாட்டு நிர்வாக சீர்திருத்த ஒத்துழைப்பு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- அடிப்படை தகவல், செயல்முறைகள் மற்றும் வளங்களை திறம்பட ஒருங்கிணைப்பதற்கு முன்னுரிமை அளித்து பிரதேச மற்றும் மாவட்ட நிர்வாகம் தொடர்பான செயல்பாடுகளை மீளாய்வு செய்தல்.
- பொதுமக்கள் நட்பு முறையில் பணி படிமுறைகளை எளிமையாக்குதல் மற்றும் பிரஜைகள் பட்டயத்தை மீளாய்வு செய்தல்.
- மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டங்களில் திறன் மேம்பாடு மற்றும் மனோபாவத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளின் முன்னேற்றம் தொடர்பான மிகவும் உகந்த சேவை வழங்கல் மற்றும் உள்ளக வள முகாமைத்துவ செயல்பாடுகளில் ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் அரசு மற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற பங்குதாரர்களுடன் பயனுள்ள கூட்டாண்மைகளை உருவாக்குதல்.

## 1.4. நிறுவன விளக்கப்படம்



## 1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் / நிறுவனங்கள்

**உள்நாட்டலுவல்கள் திணைக்களம்**

- சகல மாவட்டச் செயலகங்கள்
- சகல பிரதேச செயலகங்கள்
- தலைமைப்பதிவாளர் திணைக்களம்

## 1.7. வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள்

I. **கருத்திட்டத்தின் பெயர்**: யாழ்ப்பாணத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இன்குபேட்டர்கள் / முடுக்கிகளுக்கான வியாபார மையத்தை அமைத்தல் மற்றும் செயற்படுத்துதல்.
II. **பங்களிப்பு செய்யும் முகவர் நிலையம்**: இந்திய அரசாங்கம்
III. **கருத்திட்டத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்ட செலவு**: ரூ. மி. 307
IV. **கருத்திட்டத்தின் கால எல்லை**: 2021- 2025

## 2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு, விசேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்.

### 2.1. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு, விசேட வெற்றிகள்,

#### 2.1.1. நிதிப் பிரிவு

- செயற்பாட்டுச் செலவுகளைக் குறைக்கவும் எதிர்கால வளர்ச்சியை அதிகரிக்கவும் திறமையான நிதி அறிக்கையிடல்.
- உள்நாட்டலுவல்கள் பிரிவின் முன்மொழியப்பட்ட நிதிக் கட்டுப்பாட்டின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுதல்.
- உள்நாட்டலுவல்கள் பிரிவில் முறையான கொள்முதல் செயல்முறையை முறையாகப் பராமரித்தல்.
- கிராமப்புற மற்றும் பிராந்திய நிர்வாகத்திற்கான ஏற்பாடுகளை வழங்குதல்.

#### 2.1.2. புலனாய்வுப் பிரிவு

- கடந்தகால விசாரணைகளின் தகவல்கள் மற்றும் தற்போதைய விசாரணைகளின் தகவல்களை உள்ளடக்கிய தரவு அமைப்பை உருவாக்கி பராமரித்தல்.
- பிரிவில் நலன்புரிச் சங்கத்தை நிறுவி உத்தியோகத்தர்களின் பிறந்தநாள், இறுதிச் சடங்குகள், சுற்றுலா போன்றவற்றின் செயற்பாடுகளை வலுப்படுத்துதல்.
- உற்பத்தித்திறன் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் பிரிவின் பணிகளை எளிதாக்குதல்.
- ஆவணக் கோப்புகள் தொடர்பான காப்பகத்தைப் பராமரித்தல்.
- உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் மன நலனை மேம்படுத்த நூலகத்தை பராமரித்தல்.
- பிரிவில் முதலுதவி பிரிவை பராமரித்தல்.

#### 2.1.3. உள்நாட்டலுவல்கள் பிரிவு

#### 2.1.3.1. மாவட்ட நிர்வாகப் பிரிவு

- 
- 75 ஆவது சுதந்திர தின விழாவுடன் இணைந்து சிறந்த மர நடுகை திட்டங்களாக மாவட்ட மட்டத்தில் 75 வேலைத்திட்டங்களையும் பிரதேச செயலக மட்டங்களில் 75 செயற்திட்டங்களையும் தெரிவுசெய்தல்.

#### 2.1.3.2 பிரதேச நிர்வாகப் பிரிவு

- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இன் பிரகாரம் மாகாணம் முழுவதிலும் வெற்றிடமாக உள்ள பிரதேச செயலாளர் பதவிகளுக்கு இ.நி.சே.தரம் I பதவிகளுக்கான அதிகாரிகளைத் தெரிவு செய்வது தொடர்பான நேர்முப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அதன் அடிப்படையில் நியமனங்கள் வழங்கும் பொருட்டு அந்த நேர்முகப் பரீட்சைகளின் முடிவுகள் 2023.06.06 ஆம் திகதி அ.சே.ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டன. நேர்முப் பரீட்சை முடிவுகளுக்கு 2023.07.31 ஆம் திகதி அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் பட்டியல் உத்தியோகப்பூர்வ இணையதளத்தில் 2023.07.28 ஆம் திகதி வெளியிடப்பட்டது. மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளின் பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகதத்தர்களின் பெயர் பட்டியல் 2024.01.03 ஆம் திகதி இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. அதற்கமைய பிரதேச செயலாளர்களை நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

#### 2.1.3.3 கிராம உத்தியோகத்தர் நிர்வாகப் பிரிவு

- மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறமை அடிப்படையில் நிர்வாக கிராம அலுவலர் பதவிக்கு 116 கிராம அலுவலர்களை ஆட்சேர்த்தல்.

#### 2.1.4. பொறியியல் பிரிவு

- இரத்தினபுரி மாவட்ட செயலகத்திற்கான பொதுக் கழிப்பறை அமைப்பு மற்றும் அவசரகால சூழ்நிலைகளில் சேவைகளை

வழங்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான கட்டடக்கலை திட்டங்களை தயாரித்தல்.

- கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபரின் வேண்டுகோளின் பேரில் பாதுக்க சமுர்த்தி வங்கிக்கான அலுவலக வளாகக் கட்டடக்கலைத் திட்டங்களைத் தயாரித்தல்.
- இலங்கை தொழிநுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வுகள் தாமதமான விடயம் தொடர்பாக திணைக்களப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.
- இலங்கை தொழிநுட்ப சேவையின் வடிவமைப்பாளர்களுக்கு 11 1/2 வருடங்களாக திணைக்களப் பரீட்சைகள் நடத்தப்படவில்லை. எனவே அந்த உத்தியோகத்தர்களுக்கு திணைக்களப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.
- இந்த ஆண்டு பல கட்டுமானக் கருத்திட்டங்களை நிறைவுசெய்ய நடவடிக்கை எடுத்தல்.
- கரைநகர் பிரதேச செயலகத்தின் நிர்மாணம் (இரண்டாம் கட்டம்) - யாழ்ப்பாண நிர்மாணத் திட்டத்தின் தீர்வுச் செயன்முறையை நிறைவு செய்தல்.
- கட்டுமானத் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு ஒரு புதிய தொழில்நுட்பத்தை பின்பற்றுதல்.
- “நில மெதுர” கட்டிடத்தின் செயல்பாடுகள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு தொடர்பான செயல்பாடுகளை நெறிப்படுத்த முடிவதன் மூலம், அனைத்து பிரிவுகளின் பராமரிப்பு பணிகளையும் ஒழுங்கான முறையில் மேற்கொள்ள முடியும்.

### 2.1.5 திட்டமிடல் பிரிவு

- மேலதிக செலவின்றி திணைக்களத்தின் உள்ளக மனிதவளம் மற்றும் பௌதீக வளங்களைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த அறிக்கைகளை பூர்த்தி செய்தல்.
  I. வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
  II. வருடாந்த முன்னேற்ற அறிக்கை

- அத்தியவசிய மற்றும் அவசர நிலமையின் போது அன்றி எழுதுபொருள்களை வினைத்திறனுடன் பயன்படுத்த, அனைத்து அலுவலர்களும் தங்களது ஆவணங்களை மென் நகல் மூலம் சரிபார்த்து, whatsapp குழு மூலம் கட்டாய அறிவிப்புகளை வெளியிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### 2.1.6. பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு

**இ- கிராம அலுவலர் (eGN) கருத்திட்டம்.**

- நிலையான குடிமக்கள் சேவை வழங்கல் அமைப்பிற்கான விரிவான, நம்பகமான மற்றும் ஒருங்கிணைந்த குடும்ப மற்றும் குடிமக்கள் தரவுத்தளத்தின் அவசியத்தை பொது நிறுவனங்களுக்கு உணர்த்துதல். e-Grama Nidhari (eGN) கருத்திட்டத்தின் மூலம் இந்தத் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் முன்னோடி கட்டம் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, களுத்துறை, கொழும்பு, மன்னார், ஹம்பாந்தோட்டை, காலி, புத்தளம் மற்றும் கம்பஹ ஆகிய 7 மாவட்டங்களில் மொத்தமுள்ள 14,022 கிராம நிர்வாகப் பிரிவுகளில் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- இதன் கீழ் ஒரு பரந்த வகிபாகத்துடன் மும்மொழி மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த மென்பொருளின் நகல் பதிப்பு பயிற்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் (ToT) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 89 கிராம அலுவலர்கள் மற்றும் 82 ஏனைய அலுவலர்களுக்கும் படிப்படியாக மற்ற கிராம அதிகாரிகளுக்கும் மென்பொருள் குறித்த பயிற்சி அளிக்க தேவையான அறிவும் திறன்களும் வழங்கப்பட்டுள்ளன. வீட்டு மற்றும் குடிமக்கள் தரவுகளை சேகரிப்பதற்கான புதுப்பிக்கப்பட்ட வடிவமைப்பின்படி, இந்த மென்பொருளின் அத்தியாவசிய மேம்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் பரிவர்த்தனைகள் சட்டத்தின் கீழ், இந்தத் தரவுகள் அனைத்தையும் உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தும் பொருட்டு தொழில்நுட்பத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் தரவு சேகரிப்பு படிவங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஏற்பாடுகள் உட்பட அனைத்து அதிகாரபூர்வ செயல்பாடுகளுக்கும் 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலத்திரனியல்

பரிவர்த்தனைகள் (இ-கிராம அலுவலர் தகவல் அமைப்பு) ஒழுங்கு விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

- இங்கு, குடும்ப மற்றும் குடிமக்கள் தரவு சேகரிப்பு தொடர்பான படிவங்கள், பிற அரச நிறுவனங்கள் உட்பட தரப்பினரின் தரவுத் தேவைகளைக் கருத்திற் கொண்டு மீண்டும் உருவாக்கப்பட்டன. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் மேற்படி 7 மாவட்டங்களின் சகல பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கியதாக வீட்டு மற்றும் குடிமக்கள் தரவு சேகரிப்பு உத்தியோகத்தர்கள் பயிற்சியை நிறைவு செய்துள்ளதுடன், தரவு சேகரிப்புக்குத் தேவையான ஏனைய உபகரணங்கள் மற்றும் பொருட்களும் அந்தந்த மாவட்டச் செயலகங்களால் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், கம்பஹா தவிர்ந்த 06 மாவட்டங்களில் தரவு சேகரிப்புக்குத் தேவையான படிவங்களின் விநியோகம் நிறைவடைந்துள்ளதுடன், அந்த மாவட்டங்களில் தரவு சேகரிப்பு பணிகள் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. களுத்துறை மாவட்டத்தில் 85% தரவு சேகரிப்பு பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், 5 பிரதேச செயலகங்களில் தரவு சேகரிப்பு தாள்களை ஸ்கேன் செய்து டிஜிட்டல் மயமாக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. கம்பஹா மாவட்டத்தில் தரவு சேகரிப்பு படிவங்களை அச்சிடும் பணி இறுதி கட்டத்தில் உள்ளது. அவற்றை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- அடிப்படைக் கணினி அறிவு தேவைப்படுடைய களுத்துறை மாவட்டத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களுக்குத் திட்டமிட்டபடி பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. மேலும் மேற்படி 07 மாவட்டங்களிலும் இ-கிராம உத்தியோகத்தர் மென்பொருள் தொடர்பான பயிற்சிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- இ-கிராம அலுவலர் மென்பொருளில் தேவையான சில மாற்றங்கள் / திருத்தங்களை மாத்திரம் மேற்கொள்வதற்கான கொள்முதல் வழங்கப்பட்டு பின்னூட்டம் செய்யப்படுகிறது. அதே நேரத்தில் மென்பொருளை அணுகுவதற்கும் கிராம சேவையாளர் மென்பொருளுக்கு சேவைகளை வழங்குவதற்கும் தேவையான கணினி சாதனங்களை வழங்குவதற்கான மாற்று முறைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.
- அரசாங்க கட்டமைப்பின் அடிமட்டத்தில் பொதுமக்களுக்கு மிகவும் நெருக்கமான அரசாங்க அலுவலர் என்ற கிராம அலுவலரின் நிலையை மேலும் அதிகரிக்கும் வகையில் அவர்களுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மூலம் அதிகாரமளிக்க முடியும்.
- கிராம அலுவலர்கள் மற்றும் பிற அதிகாரிகள் நவீன தொழில்நுட்பம் குறித்த அவர்களது தவறான எண்ணப்பாடுகளை மாற்றியமைத்து அவர்களை நேர்மறையாகச் சிந்திக்கும் நிலைக்குஇட்டுச் செல்வதற்கு முடிந்துள்ளமை. இத்திட்டத்தின் கீழ், தனித்தனியான பயிற்சி அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலான ICT கல்வியறிவு உள்ளதாகக் கண்டறியப்பட்ட 3,500க்கும் மேற்பட்ட கிராம அலுவலர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, கிராம அலுவலர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக பயிற்சி அளிப்பதற்கு தொழில் நிறுவனங்களில் இருந்து தன்னார்வ பங்களிப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
- குடும்பம் மற்றும் குடிமக்கள் தரவுகளை சேகரித்து இற்றைப்படுத்துவதற்கு பல்வேறு அரசாங்க நிறுவனங்களால் எடுக்கப்படும் முயற்சிகள் மற்றும் தொடர்புடைய செலவுகளைக் குறைக்கும் வகையில் பகிரக்கூடிய பரந்த சமூக அடிப்படையிலான இலத்திரனியல் தரவுத் தளத்தை (Community-based electronic database) உருவாக்குவதற்கு நிலையான அடித்தளத்தை அமைக்க முடியும். இந்த வீட்டு / குடிமக்கள் தரவு சேகரிப்பு படிவம், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் நிபுணர்கள் அடங்கிய குழுவால் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

- கருத்திட்டத்தின் தரவுத் தளத்தைப் பயன்படுத்தி கிராம அலுவலர்களால் வழங்கப்படும் 22 வகையான சான்றிதழ்களை வழங்குவதற்கான அடிப்படை உருவாக்கப்பட்டுள்ளது.
- மாவட்ட அளவில் கருத்திட்ட முகாமை மற்றும் தலைமை வகிப்பதற்கு பி.செயலக பிரிவு மட்டத்தில் செயற்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு கிராம அலுவலர் தொழிற்சங்கங்களின் முனைப்பான பங்களிப்பும் கிடைக்கப்பெற்றுள்ளது.
- குடிமக்கள் பயனர்களின் தரவை கணினியில் இணைக்க சிறப்பு இ-சேவை போர்டல் உருவாக்கப்பட்டுள்ளது.
- வினைத்திறன் மற்றும் நட்புறவான பொதுமக்கள் சேவையை வழங்குவது தொடர்பில் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியினால் இ-கிராம உத்தியோகத்தர் திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைத்தல். அதன் வழிகாட்டல் மூலம் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பரிந்துரைகள் / முடிவுகளின் பிரகாரம் இந்தத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட தரவு சேகரிப்பு முறையை விரைவுபடுத்துவதற்கும் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் தரவுகளைச் சேகரிப்பதற்கும் திட்டமிடுதல்.
- அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் இ-கிராம அலுவலர் அமைப்பில் அனைத்து அரசாங்க அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் தரவுகளை சேர்ப்பதற்கான வழிமுறைகளை வழங்குவதற்காக ஒரு பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.
- தற்போது பயன்படுத்தப்படாத வீட்டுப் பட்டியல் அமைப்பின் தேவையைப் பூர்த்தி செய்யும் மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய தரவு அமைப்பாக இ-கிராம அலுவலர் திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட தரவு அமைப்பை அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளல் மற்றும் அதற்கான புதிய பொதுவான குடும்பப் பதிவேட்டை அறிமுகப்படுத்துதல்.

**யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இன்கியுபேட்டர் / எக்சலேட்டருக்கான வணிக மையத்தை நிறுவும் கருத்திட்டம்**

- யாழ்ப்பாணப் பகுதியில் இன்கியுபேட்டர் / எக்சலேட்டர் வணிக மையத்தை நிறுவுதல் மற்றும் இயக்குதல் எனப்படும் திட்டத்திற்கு இந்திய அரசின் உதவியாக முதலில் ஒப்புக்கொள்ளப்பட்ட நிதியைச் செயல்படுத்த, திட்ட வழிநடத்தல் குழு மற்றும் இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்குத் தேவையான அடிப்படை அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக உள்நாட்டு நிதி மூலத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஆதரவுடன் ஆலோசனை நிறுவனம் ஒன்றின் சேவைகள் பெறப்பட்டன. இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட ஆலோசனை சேவைகள் தொடர்பான நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உத்தேச வணிக நிலையத்தை அமைப்பதற்கு மிகவும் பொருத்தமான இடமாக யாழப்பாண கலாசார நிலையம் பரிந்துரைக்கப்பட்டு கலாசார அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இடப் பயன்பாடு, வாடகைக் கட்டணம் போன்றவை தொடர்பாக கூட்டு நிர்வாகக் குழுவின் முடிவு பெறப்பட்ட பின்னர் கருத்திட்ட வழிகாட்டல் குழு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 2.2. சவால்கள்

### 2.2.1. நிர்வாகப் பிரிவு

- திட்டமிட்டபடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை.
- நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக அதிகாரிகளிடம் காணப்படும் குறைந்தபட்ச அறிவு.
- பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதில் உள்ள நிதிச் சிக்கல்கள்

### 2.2.2. அபிவிருத்திப் பிரிவு

- நாட்டில் தற்போது நிலவும் நிதி நெருக்கடி காரணமாக, சந்தையில் கட்டுமானப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன், அவற்றின் அதிக விலை காரணமாக, எதிர்பார்த்தபடி பணிகளை முடிக்க முடியாமல் உள்ளது.

- தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை 05/2019 இன் படி புதிய கருத்திட்டங்களை ஆரம்பிக்க இயலாமை.
- ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டைப் பொறுத்தமட்டில் நிதி பெறுவதில் தாமதம் ஏற்படுவதால், வேலைத் திட்டத்தின்படி (work plan) வேலைகளை முடிப்பதில் தாமதம்.
- செய்த வேலைக்கான பட்டியல்களை செலுத்த நிதியைப் பெற்றுக்கொள்வதில் தாமதம்.

### 2.2.3. நிதிப் பிரிவு

- ஏற்புடைய பிரிவுகள் மற்றும் மாவட்ட செயலகங்களில் இருந்து சரியான நேரத்தில் முன்னறிவிக்கப்பட்ட தகவல்களை சேகரிப்பதில் சிரமம் காணப்படுதல்.
- நிதி அறிக்கையிடலுக்கு சில முன்கணிப்பு நடவடிக்கைகள் பொருத்தமானவை அல்ல.
- நிதிச் செயலாற்றுகை தகவல்கள் இல்லாமை.
- முறையான கட்டண முறைக்கு போதுமான ஏற்பாடுகள் இல்லாமை.
- பணம் செலுத்தும் செயல்முறைக்கு தேவையான ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட வவுச்சர்களை சமர்ப்பிக்காமை.
- ஆண்டிற்கான அனைத்து செலவுகளையும் ஈடுசெய்ய திறைசேரி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லை.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் கொள்முதல் குழுக்களுக்கு பொருத்தமான திகதிகள் மற்றும் நேரத்தைக் கண்டறிவதில் சிரமம் காணப்படல்.
- பிரிவுகளின் அவசர கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் சிரமம் காணப்படல்.

### 2.2.4. புலனாய்வுப் பிரிவு

- மாவட்ட செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்ட புலனாய்வு பிரிவுகளின் செயலிழப்பு காரணமாக அமைச்சுக்கு நேரடியாகப் பெறப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு.

- பிரிவைச் சேர்ந்த 6 உத்தியோகத்தர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறையை எடுத்துச் செல்வதன் காரணமாக இப்பிரிவின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உத்தியோகத்தர்கள் இல்லாமை.
- சிங்களம் மற்றும் தமிழ் இருமொழி அதிகாரிகளின் பற்றாக்குறை.
- விசாரணையின் போது அதிகாரிகளின் தனிப்பட்ட பாதுகாப்பிற்கு சவால் விடுதல்.
- ஏனைய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெறுவதில் உள்ள தடைகள்.
- உதாரணம் : இலங்கை பொலிஸ், இலஞ்சம் அல்லது ஊழல், பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு
- தமிழ் மொழியிலான முறைப்பாடுகளைக் கையாளும் போதும் ஆங்கில மொழியிலான முறைப்பாடுகளை கையாளும் போதும் மொழிபெயர்ப்பில் சிக்கல்கள் எழுகின்றன.
- போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாததால், எதிர்பார்க்கப்படும் மாவட்ட செயலமர்வுகள் மற்றும் அலுவலக பரிசோதனைகளை நடத்துவது சவாலாக உள்ளது. (தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக)
- புலனாய்வு உத்தியோகத்தர்கள் தொலைதூர மாவட்டங்களுக்கு கடமைகளுக்காக செல்லும் போது போக்குவரத்து சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

### 2.2.5. உள்நாட்டலுவல்கள் பிரிவு

#### 2.2.5.1. மாவட்ட நிர்வாகப் பிரிவு

- நாட்டில் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் நிலவிய தபோதிலும் வரையறுக்கப்பட்ட ஊழியர்களின் கீழ் கடமைகளை திறம்படச் செய்தல்.

#### 2.2.5.2. கிராம அலுவலர் நிர்வாகப் பிரிவு

- கொரோனா நிலைமை மற்றும் பிற சவால்கள் காரணமாக நடத்த திட்டமிடப்பட்டிருந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தாமதம் அடைந்தன. அவற்றை உடனடியாக நடத்துதல்.
- 2500க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருக்கும் போது, தற்போதுள்ள கிராம அலுவலர்களால் வினைத்திறன்மிக்க பொதுச் சேவை வழங்கப்படுவதை உறுதி செய்தல்.

### 2.2.6. பொறியியல் பிரிவு

- பணியாளர் பற்றாக்குறை.
- உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் கிடைக்காமை.
- கட்டுமானத் தொழிலில் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக, கட்டுமானத் தொழிலின் முன்னேற்றம் பின்தங்கியுள்ளமை.
- பொருளாதார நெருக்கடியால் கட்டுமானப் பொருட்களின் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கம் காரணமாக, கட்டுமானத் தொழில் கடுமையாகச் சவாலுக்கு உள்ளாகியுள்ளது.
- கட்டுமானக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் உரிய முறையில் கிடைக்காமை.
- உத்தியோகபூர்வ தலைமையக கட்டிடத்தின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புக்கான பொருட்கள் மற்றும் நிதி பற்றாக்குறை மற்றும் பணம் செலுத்துவதில் தாமதம். தாமதமாகப் பணம் செலுத்தியதால் மற்ற தரப்பினருடன் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனம்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி திட்டங்கள் வழங்கப்படாமை.

### 2.2.7. பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு இ - கிராம அலுவலர் (eGN) கருத்திட்டம்.

- தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் மற்றும் பிற நடைமுறைகளின் குறைபாடு காரணமாக அமைச்சரவை கொள்முதல் குழுவினால் (CAPC) அது இரத்துச் செய்யப்பட்ட பின்னர் கிராம அலுவலர்களுக்கு மடிக் கணினிகள் மற்றும் கணினி பிரிண்டர்களை வழங்குவதற்கான கொள்முதல் எதிர்பாராத விதமாக நிறுத்தப்பட்டது. செலவு குறைந்த மாற்று முறைகளைப் பயன்படுத்தி அனைத்து திட்டக் கூறுகளையும் சந்திப்பதற்கான உத்திகளைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவின் பரிந்துரைகள் மற்றும் மாற்று முன்மொழிவுகளை அமைச்சரவையின் அனுமதிக்காக அனுப்புவது அவசியம்.
- இந்தக் கருத்திட்டத்தைப் பற்றி மக்களுக்குத் தெரிவிக்கும் நிகழ்ச்சிகளை உருவாக்கும் பணி தொலைக்காட்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது, ஆனால் அதில் ஒரு பகுதியை மாத்திரமே நிறைவுசெய்ய முடிந்தது. மேலும், எதிர்பாராத சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் காரணமாக, தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் மிகவும் பயனுள்ள தகவல் தொடர்பு அமைப்பைத் ஆரம்பிக்க முடியவில்லை.
- வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் திட்டத்துடன் தொடர்புடைய பெரும்பாலான கொள்முதல் உரிய காலத்திற்குள் வழங்கப்படாத காரணத்தினால் பல திட்டப்பணிகளில் தேவையற்ற தாமதம் ஏற்படல்.
- கருத்திட்டக் காலம் 2023.12.31 ஆம் திகதி முடிவடையவுள்ளது. மேலும் பல்வேறு காரணங்களால், திட்டத்தின் கீழ் வீட்டு/குடிமக்கள் தரவு சேகரிப்பு தாமதமாகின்றது. கிராம அலுவலர்களுக்கு உத்தியோகபூர்வ பயன்பாட்டிற்கு தேவையான சாதனங்கள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கு போதுமான அவகாசம் தேவைப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் மென்பொருள் மற்றும் திட்டத்தின் பிற செயல்பாடுகளை நிறைவுசெய்ய 2024.12.31 ஆம் திகதி வரையிலான கருத்ததிட்டக் கால நீட்டிப்பு மற்றும் பிற முக்கிய திட்டங்களுடன் அமைச்சரவைப் பத்திரம் தொகுக்கப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இன்கியுபேட்டர் / எக்சலேட்டருக்கான வணிக மையத்தை நிறுவி நடைமுறைப்படுத்தும் கருத்திட்டம்

- உத்தேச வணிக மையத்தை ஆதரிக்க போதுமான இடவசதியுடன் யாழ்ப்பாண நகரில் அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்களை அடையாளம் காண்பதில் சிரமம் காணப்படுகின்றது.

- இந்திய உதவியின் கீழ் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார நிலையத்தின் இடம் இத்திட்டத்திற்காக கோரப்பட்டது. வழிநடத்தல் குழுவினால் எடுக்கப்பட்ட முன்மொழிவுக்கு முதற்கட்ட இணக்கம் காணப்பட்ட போதிலும், அதற்கான மாதாந்த கட்டணங்கள் போன்ற தகவல்கள் தீர்மானிக்கப்படவில்லை.
- இரு நாடுகளுக்கும் இடையே தற்போது கையெழுத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம், 2022 பெப்ரவரி மாதத்தல் காலாவதியானது. இந்திய அரசாங்கத்திடம் இருந்து நிதி உதவி பெறுவதற்காக அது முறையாக புதுப்பிக்கப்பட்டு நீட்டிக்கப்படல் வேண்டும்.

## 2.3. எதிர்கால இலக்குகள்

### 2.3.1. நிர்வாகப் பிரிவு

- மனிதவளம் மற்றும் பௌதீக வளங்களை திறமையான மற்றும் திறம்பட பயன்படுத்துவதன் மூலம் உத்தேச நோக்கங்களை அடைதல்.
- தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல் கோருபவர்களின் தகவல் தேவையை மிகக் குறுகிய காலத்திற்குள் பூர்த்தி செய்தல்.
- அமைச்சில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து, திட்டமிடப்பட்ட அனைத்துப் பயிற்சித் திட்டங்களையும் உரிய காலத்தில் நிறைவு செய்தல்.
- உள்நாட்டலுவல்கள் அமைச்சில் பணிபுரியும் அனைத்து உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோப்புகள் தொடர்பான தகவல்களைக் கொண்ட தரவு அமைப்பைத் தயாரித்தல்.
- மாவட்ட மற்றும் பிரதேச செயலக இணையத்தளங்களை இற்றைப்படுத்திய நிலையில் வைத்திருப்பதன் மூலம் இணையவெளியில் இணையத்தளங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.

### 2.3.2. அபிவிருத்திப் பிரிவு

- ரூ.மில். 433.40 செலவில் தற்போது உப அலுவலகமாக கொண்டு நடாத்தப்படும் மாதம்பகம பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாக ஸ்தாபித்தல்.
- குளியாப்பிட்டி மேற்கு பிரதேச செயலகத்தின் புதிய மூன்று மாடிக் கட்டிடத்தை ரூ.மில்242.00 செலவில் நிர்மாணித்தல்.
- குளியாப்பிட்டி கிழக்கு பிரதேச செயலகத்தின் புதிய மூன்று மாடிக் கட்டிடத்தை ரூ.மில். 248.00 செலவில் நிர்மாணித்தல்.
- ஆராச்சிக்கட்டு பிரதேச செயலகத்தின் புதிய மூன்று மாடிக் கட்டிடத்தை ரூ.மில். 307.00 செலவில் நிர்மாணித்தல்.
- ரூ.மில். 1991.00 செலவில் அனுராதபுரம் மாவட்ட செயலக நிர்வாக வளாகத்தை நிர்மாணித்தல்.
- தெஹிவளை பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தை ரூ.மில். 1150.00 செலவில் நிர்மாணித்தல்.
- முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் இரண்டாம் கட்டத்தை ரூ.மில். 328.00 செலவில் நிர்மாணித்தல்.
- கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் இரண்டாம் கட்டத்தை ரூ.மில். 565.00 செலவில் நிர்மாணித்தல்.
- ரூ.மில். 343.17 செலவில் புதிய கல்தோட்டை பிரதேச செயலகத்தை நிர்மாணித்தல்.

### 2.3.3. நிதிப் பிரிவு

- உரிய அனைத்து நிறுவனங்களின் அனைத்து நிலைகளுக்கும் பயனுள்ள, பொறுப்புணர்வுள்ள மற்றும் வெளிப்படையான வெளியீட்டை வழங்குதல்.
- வினைத்திறனுள்ள மற்றும் பயனுள்ள கட்டண முறையை மேம்படுத்துதல்.
- நிறுவனத்தின் திறமையான சேவையை உறுதி செய்வதற்காக சரியான தரத்திலும் அளவிலும் உரிய நேரத்திலும் சரியான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்.
- உள்நாட்டலுவல்கள் பிரிவு, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் நிதி

முகாமைத்துவத்தை மிகவும் வினைத்திறனாக்குதல்.

### 2.3.4. புலனாய்வுப் பிரிவு

- மனித மற்றும் பௌதீக வளங்களின் விரிவாக்கம்.
- முறையான பதவி உயர்வு நடைமுறையை உருவாக்கி ஒவ்வொரு தரத்திலும் உத்தியோகத்தர்களை உள்வாங்குவதன் மூலம் உத்தியோகத்தர்களின் சேவை திருப்தியை மேம்படுத்துதல்.
- அலுவலக பரிசோதனைகளை விரிவாக்கம் செய்தல்.
- மாவட்ட விசாரணை பிரிவுகளை வலுப்படுத்துதல்.
- அனைத்து ஊழியர்களுக்கும் தொடர்ச்சியான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு பொருத்தமான உயர் கல்வி வாய்ப்புகளை வழங்குதல்.
- முறைப்பாடுகள் முகாமைத்துவம் மற்றும் சாட்சி நடவடிக்கைகளின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தைை அமைத்தல்.
- மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகக் கட்டமைப்பிற்குரிய பொது நிறுவனங்களில் மோசடி மற்றும் ஊழலைத் தடுப்பதற்கான பொறிமுறையை அறிமுகப்படுத்துதல்.
- தொலைபேசி பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் பிற முறைப்பாடுகளுக்கு பின்னூட்டல் செயல்முறையொன்றை அறிமுகம் செய்தல்.

### 2.3.5. உள்நாட்டலுவல்கள் பிரிவு
### 2.3.5.1. மாவட்ட நிர்வாகப் பிரிவு

- எதிர்வரும் 76 ஆவது சுதந்திர தின விழாவை பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.
- நவீன தகவல் தொழில்நுட்ப நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாவட்ட நிர்வாகத்தின் வினைத்திறன் மற்றும் உற்பத்திறனை அதிகரித்தல்.

### 2.3.5.2. பிரதேச நிர்வாகப் பிரிவு

- உள்ளூராட்சி நிர்வாகம் தொடர்பான அரசாங்க பொறிமுறையை டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பான திட்டங்களை ஆரம்பித்தல். (SYSCGAA இணையவழி முகாமைத்துவ அமைப்பு)
- காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் விலக்கப்பட்டுள்ள காணியின் முழு உரிமையுடன் இலவச மானியங்களை வழங்குதல் மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்பு.
- முகாமைத்துவப் போட்டியின் மூலம் அனைத்து பிரதேச செயலகங்களையும் முன்னுரிமைப் பட்டியல் படுத்தல்.
- அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைத்தல்.

### 2.3.5.3. கிராம உத்தியோகத்தர் நிர்வாகப் பிரிவு

- பதவி உயர்வு பெற்ற நிருவாக கிராம உத்தியோகத்தர்களை வெற்றிடங்கள் உள்ள பிரதேச செயலகங்களுக்கு உடனடியாக நியமிப்பதும் வெற்றிடமாக உள்ள கிராம உத்தியோகத்தர்களை உடனடியாக நிரப்புவதும் பிரதான இலக்காகும்.

### 2.3.6. பொறியியல் பிரிவு

- திருப்திகரமான பொதுச் சேவை வழங்குதல் மற்றும் வாடிக்கையாளர் / பயனர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பதிலளிக்கக்கூடிய வகையில் அலுவலகக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்.
- அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலக நிர்மாண வேலைத்திட்டங்களையும் மேற்பார்வை செய்தல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.
- இந்த அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவினால் ஒதுக்கப்படும் கட்டுமானத் திட்டங்கள் மற்றும் அரச நிகழ்வுகள் தொடர்பான பொறியியல் பணிகளுக்காக

மற்ற அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

- மாவட்டப் பொறியியலாளர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்களின் பதவி உயர்வுக்கு வசதி செய்தல், தொழில்முறை தகுதிகளைப் பெறுவதற்கும் பட்டய அந்தஸ்தைப் பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், தொழில்நுட்ப ஊழியர்களின் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அவர்களுக்குத் தேவையான பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து நடத்துதல்.
- அரச உத்தியோகத்தர்கள் தங்களது ஓய்வு நேரத்தை திருப்திகரமாக செலவிட சுற்றுலா பங்களாக்களின் வசதிகளை மேம்படுத்துதல்.
- இந்த அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவிற்குச் சொந்தமான அனைத்து சுற்றுலா பங்களாக்களின் கட்டுமானத் திட்டங்களை செயல்படுத்தல் மற்றும் பராமரிப்பு தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

## 2.3.7. திட்டமிடல் பிரிவு

- வெளிநாட்டு வேலைவாய்புக்களில் ஈடுபட்ட ஆட்களை கிராமிய மட்டத்தில் இனங்கண்டு வெளிநாட்டு கரங்கொடுப்போர் எனும் குழுமத்தை உருவாக்கி அவர்கள் ஊடாக கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான உதவியைப் பெற்றுக்கொள்ளல்.

**பிரதீப் யசரத்ன**
**செயலாளர் / பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்**
**அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

## 04. செயலாற்றுகை சுட்டிகள்

| # | விசேட குறிகாட்டிகள் | உத்தேச வெளியீடு சதவீதமாக (%) உண்மை வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | | 100% - 90% | 89%-75% | 74%- 50% |
| 1 | பழுதுபார்க்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | √ | | |
| 2 | புதுப்பிக்கப்பட்ட சுற்றுலா பங்களாக்களின் எண்ணிக்கை | | | √ |
| 3 | அமைச்சின் மனித வளங்களின் செயல்திறனை அதிகரிப்பதற்காக உள்நாட்டில் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளின் எண்ணிக்கை. | | | √ |
| 4 | தகவல் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட கோரிக்கைகளுக்கான பதில்களின் எண்ணிக்கை | √ | | |
| 5 | பொதுமக்கள் முறைப்பாடுகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை | √ | | |
| 6 | பிரதேச செயலகங்களுக்கு இணையவழி சுற்றுலா பங்களா முன்பதிவு வசதியை வழங்குதல், முன்பதிவுத் தகவலை வாடிக்கையாளர்களுக்கு தொலைபேசி குறுஞ்செய்தி மூலம் தெரிவித்தல் மற்றும் வாடிக்கையாளர் கருத்துக்களைப் பெறுதல் ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்படும் சுற்றுலா பங்களா முன்பதிவுகளின் எண்ணிக்கை. | √ | | |
| 7 | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறைகளை அனுமதித்தல் | √ | | |
| 8 | 2023.01.01 – 2023.12.31 கட்டிட நிர்மாணம் - 2104 | √ | | |
| 9 | 2023.01.01 – 2023.12.31 பிபிதெமு பொலனறுவை - 2509 | √ | | |
| 10 | 2023.01.01 – 2023.12.31 கட்டிட பழுதுபார்ப்பு - 2001 | √ | | |
| 11 | பயனுள்ள மற்றும் பொறுப்பான அமைப்பு மூலம் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை செயல்படுத்துவதன் மூலம் பொது நலனை மேம்படுத்துவதற்கு வரவுசெலவுத்திட்ட நிதிகளின் பயன்பாடு | | √ | |
| 12 | இறுதித்திகதிக்கு அல்லது அதற்கு முன் ஆண்டு கணக்குகளை சமர்ப்பித்தல் | √ | | |
| 13 | சொத்து முகாமைத்துவத் திட்டம் மற்றும் பொருள் கணக்கெடுப்பு மூலம் சொத்து முகாமைத்துவ அமைப்பை வினைத்திறனாகவும் பயனுள்ள வகையிலும் மேம்படுத்தல். | √ | | |
| 14 | வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் கொள்முதல் செய்ய ஒதுக்கப்பட்ட நிதியின் சிறந்த பயன்பாடு | | √ | |
| 15 | உரிய அதிகாரிகளுக்கு திறமையான அறிக்கையிடல் முறையைப் பராமரித்தல் | √ | | |
| 16 | முறைப்பாடுகள் பெறப்பட்டதாக முறைப்பாட்டாளர்களுக்கு அறிவித்தல் | √ | | |
| 17 | ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மாவட்ட செயலாளர் அல்லது பிரதேச செயலாளர் அறிக்கைகளை வரவழைத்தல். தேவைப்படுபவர்களுக்கு கள ஆய்வுகளை நடத்துதல் | | √ | |
| 18 | முறைப்பாட்டாளர்களுக்கு பதிலளித்தல் மற்றும் /அல்லது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகளின்படி தேவைக்கேற்ப உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்தல். | √ | | |
| 19 | முறைப்பாடுகள் தொடர்பில் ஆரம்ப விசாரணை நடத்துவதற்கு தீர்மானித்து விசாரணை அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கும் கடிதங்களை தயார் செய்தல். | √ | | |
| 20 | ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் உரிய புலனாய்வு அதிகாரிகளால் விசாரணைகளை நடத்துதல் | √ | | |
| 21 | ஆரம்ப விசாரணை அறிக்கை / ஆரம்ப விசாரணை அறிக்கையை வரைவு குற்றப்பத்திரிகைகளுடன் தயாரித்து, பதவிநிலை உத்தியோகத்தர்களின் அனுமதிக்காக சமர்ப்பித்தல். | | √ | |
| 22 | புதவிநிலை உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்ட முடிவை சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தெரிவித்தல் அல்லது வரைவு குற்றப்பத்திரிகைகளை ஒழுக்காற்றுற அதிகாரிகளுக்கு அனுப்புதல். | | | √ |
| 23 | முறையான ஒழுக்காற்று விசாரணையில் முறைபாடுகளை கையாளும் அதிகாரியாகச் செயல்படுதல். | √ | | |

| # | விசேட குறிகாட்டிகள் | உத்தேச வெளியீடு சதவீதமாக (%) உண்மை வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | | 100% - 90% | 89%-75% | 74%-50% |
| 24 | முறையான ஒழுக்காற்று விசாரணைகளுக்கான ஆதாரங்களை வழங்குதல் | √ | | |
| 25 | அலுவலக பரிசோதனைகளை நடத்துதல். | √ | | |
| 26 | மாவட்ட மட்டத்தில் செயலமர்வுகளை நடத்துதல் | √ | | |
| 27 | பிரதேச செயலாளர்களின் நியமனம் / பதவி உயர்வு / இடமாற்றத்திற்கான பரிந்துரைகளை செய்தல். | √ | | |
| 28 | உதவிப் பிரதேச செயலாளர்களின் நியமனங்கள் / பதவி உயர்வுகள் / இடமாற்றங்களுக்கான பரிந்துரைகளை செய்து அவர்களை நியமித்தல். | √ | | |
| 29 | திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களின் நியமனம் / பதவி உயர்வு / இடமாற்றம் ஆகியவற்றிற்கு பரிந்துரை செய்தல் மற்றும் நியமித்தல். | √ | | |
| 30 | கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களின் நியமனம் / பதவி உயர்வு / இடமாற்றம் ஆகியவற்றிற்கு பரிந்துரை செய்தல் மற்றும் நியமித்தல். | √ | | |
| 31 | நிர்வாக உத்தியோகத்தர்களின் நியமனம் / பதவி உயர்வு / இடமாற்றம் ஆகியவற்றிற்கு பரிந்துரை செய்தல் மற்றும் நியமித்தல். | √ | | |
| 32 | மொழிபெயர்ப்பாளர் சேவை உத்தியோகத்தர்களின் நியமனம் / பதவி உயர்வு / இடமாற்றம் ஆகியவற்றிற்கு பரிந்துரை செய்தல் மற்றும் நியமித்தல். | √ | | |
| 33 | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் நியமனம் / பதவி உயர்வு / இடமாற்றம் ஆகியவற்றிற்கு பரிந்துரை செய்தல் மற்றும் நியமித்தல். | √ | | |
| 34 | சாரதி / அலுவலக உதவியாளர் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களின் நியமனம் / பதவி உயர்வு / இடமாற்றம் ஆகியவற்றிற்கு பரிந்துரை செய்தல் மற்றும் நியமித்தல். | √ | | |
| 35 | பதவிநிலை உத்தியோகத்தர்களின் உள்நாட்டு முதுகலை படிப்புகளுக்கான ஒதுக்கீடுகளை அனுமதித்தல். | √ | | |
| 36 | வெளிநாட்டு விடுமுறை கோரிக்கைகளை பரிந்துரை செய்தல் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு பரிந்துரை செய்தல். | √ | | |
| 37 | ஓய்வு பெற்ற பிரதேச செயலர்களுக்கு ஓய்வு பெற பரிந்துரை செய்தல் மற்றும் வாகன உரிமம் வழங்குதல். | √ | | |
| 38 | பிரதேச செயலகங்களுக்கு தேவையான பணியாளர் அனுமதியை வழங்கல். | √ | | |
| 39 | அமைச்சுக்குப் பரிந்துரைக்கப்படும் பொதுப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவது தொடர்பான அறிக்கைகளை வரவழைத்து தீர்வுகளை வழங்க ஏற்பாடு செய்தல். | √ | | |
| 40 | பிரதேச நிர்வாகம் தொடர்பான ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடையே ஒருங்கிணைப்புச் செய்தல். | √ | | |
| 41 | கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் | | √ | |
| 42 | நிர்வாக கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் | √ | | |
| 43 | கிராம உத்தியோகத்தர்களின் சேவையை உறுதிப்படுத்தல். | √ | | |
| 44 | கிராம உத்தியோகத்தர்களை ஓய்வுபெறுவித்தல். | √ | | |
| 45 | கிராம உத்தியோகத்தர்களை பதவி உயர்த்தல் | √ | | |
| 46 | கிராம உத்தியோகத்தர்களின் நாட்குறிப்பு | √ | | |
| 47 | கிராம உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடத்துதல். | | | √ |
| 48 | கிராம உத்தியோகத்தர்களின் அலுவலக மற்றும் கடமைகளைப் பரிசீலிக்கும் போட்டியை நடத்துதல். | √ | | |
| 49 | அமைச்சுக்கு ஏற்புடையதாக வருடத்திற்கான கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்கள் 04 ஐ நடத்துதல். | √ | | |

| # | விசேட குறிகாட்டிகள் | உத்தேச வெளியீடு சதவீதமாக (%) உண்மை வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | | 100% - 90% | 89%-75% | 74%-50% |
| 50 | பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகங்களில் கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்கள் 103 இல் உறுப்பினராக கலந்துகொள்ளல். | √ | | |
| 51 | கணக்காய்வுத் திட்டத்தில் குறிப்பிப்படும் கணக்காய்வுகளுக்கு அடிப்படையாக அமைந்த கணக்காய்வுகளின் எண்ணிக்கை | √ | | |
| 52 | மாவட்ட செயலக கணக்காய்வு அறிக்கைகளின் பின்னூட்டத்தின் மூலம் வெளியிடப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை | √ | | |
| 53 | பிரதான உள்ளக கணக்காய்வாளர்களின் காலாண்டு அறிக்கைகள் மூலம் ஒன்றிணைந்த காலாண்டு அறிக்கையை முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல். | √ | | |
| 54 | கொள்வனவுகளுக்கு (கொள்முதல்) ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | | √ | |
| 55 | உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட நிர்மாணக் கருத்திட்டங்கள் | | √ | |
| 56 | மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக கட்டிடங்களை நிர்மாணித்தல் | | √ | |
| 57 | மாவட்டப் பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களின் தொழில் வகிபாகத்தை மேற்பார்வை செய்தல். | √ | | |
| 58 | "நில மெதுர" கட்டிடத்தின் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புக்களை மேற்கொள்ளல். | √ | | |
| 59 | சுற்றுலா விடுதிகள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புக்களை மேற்பார்வை செய்தல். | | √ | |
| 60 | வருடாந்த செயல்திட்டத்தை தயாரித்தல் | √ | | |
| 61 | முன்னேற்ற மீளாய்வு – தேசிய மட்டம் / மாவட்ட மட்டம் | √ | | |
| 62 | வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல் | √ | | |
| 63 | வருடாந்த வரவுசெலவுத்திட்டத்திற்கு அமைச்சின் முன்னேற்றத்தை சமர்ப்பித்தல் | √ | | |
| 64 | 75 ஆவது சுதந்திர தின விழாவை நடத்துதல் | √ | | |
| 65 | 76 ஆவது சுதந்திர தின விழாவின் முன்னேற்பாடுகள் | | | √ |
| 66 | அரசாங்க அதிபர் மாநாட்டை நடத்துதல் | | | √ |
| 67 | மாவட்ட செயலகங்களின் தாபன நடவடிக்கைகள் - நியமனம் / இடமாற்றம் / பதவி உயர்வு கடிதங்களை வழங்குதல் / தனிப்பட்ட வெளிநாட்டு லீவுகளுக்கு சிபாரிசு செய்தல் | √ | | |
| 68 | பதவிநிலை உத்தியோகத்தர்களின் பட்டப் பின் படிப்பு பாடநெறிகளுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல். | √ | | |
| 69 | ஆளணி வெற்றிடங்களுக்கு நேர்முகப் பரீட்சைகளை நடத்துதல் (மா.செ, மே.மா.செ, கணக்காளர், பணிப்பாளர் (திட்டமிடல்) | √ | | |
| 70 | சுற்றுலாப் பயண கட்டளைச் சட்டத்தின் நடவடிக்கைகள் (பெரஹரா வர்த்தமானியில் வெளியிடல்) | √ | | |
| 71 | போயா தினம், அரசாங்க மற்றும் வங்கி விடுமுறை நாட்களை வெளியிடல் | √ | | |
| 72 | அரசாங்க அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்படும் இறுதிச்சடங்கு வைபவங்களை ஏற்பாடு செய்தல் | √ | | |
| 73 | அரசாங்க அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்படும் அரச வைபவங்களை ஏற்பாடு செய்தல் | √ | | |
| 74 | தேசிய மட்ட வள விபரங்களைத் தயாரித்தல் | √ | | √ |
| 75 | இ - கிராம அலுவலர் கருத்திட்டம் - திருத்திய கருத்திட்டத்தின் பரப்புக்குள் கருத்திட்டத்தை மேற்கொள்ளும் 07 மாவட்டங்களில் ஒப்பீட்டளவில் அறிக்கையிடப்படும் முன்னேற்றம் | | | **24.90** |
| 76 | யாழ்ப்பாண பிரதேசத்தில் இன்கியுபேட்டர் / எக்சலரேட்டர் வியாபார நிலையமொன்றை நிறுவி நடைமுறைப்படுத்தும் கருத்திட்டம் - கருத்திட்டத்தின் முன்னேற்ற மைல்கற்களின் போது ஒப்பீட்டளவில் கருத்திட்டத்தின் பிரிவுகளினது முன்னேற்றம் | | | **3.5** |

## 5. நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்ளும் செயலாற்றுகை

### 5.1 அடையாளம் காணப்பட்ட ஏற்புடைய நிலையான அபிவிருத்தி நோக்கங்களை குறிப்பிடுக.

| # | நோக்கங்கள் | இலக்குகள் | வெற்றிக் குறிகாட்டிகள் | அடைந்துள்ள முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| 1 | 8. அனைவருக்கும் வளமான, பூரணமான மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி, பூரண பயனுள்ள மற்றும் சிறந்த தொழில்களை மேம்படுத்தல். | 8.2 நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயனுள்ள அரசாங்க சேவையை உருவாக்குதல். | • சர்வதேச அறிவு நிரம்பிய அதிகாரிகள் குழுவை உருவாக்க அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள மாவட்ட செயலகங்கள் மற்றும் பிராந்திய செயலகங்களின் அதிகாரிகளுக்கு திட்டமிடப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கையில் வழங்கப்படும் பயிற்சிகளின் எண்ணிக்கை. | | √ | |
| 2 | 9. உறுதியான உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புதல், பூரண மற்றும் நிலையான கைத்மொழிலாக்கத்தை ஊக்குவித்து புத்தாக்கத்தை தூண்டுதல். | 9.1 அமைச்சுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை உயர் தரத்தில் நம்பிக்கைமிக்க நிலையான மற்றும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் அபிவிருத்தி செய்தல். | • சர்க்யூட் பங்களாக்களின் எண்ணிக்கையில் புதுப்பிக்கப்பட்ட சர்க்யூட் பங்களாக்களின் எண்ணிக்கைஇ ஆண்டுக்குள் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளுடன் புதுப்பிக்கப்பட வேண்டும். | | | √ |
| | | | • புதிய சர்க்யூட் பங்களாக்களாகப் பழுதுபார்க்க உத்தேசிக்கப்பட்ட எண்ணிக்கையில் பழுதுபார்க்கப்பட்ட சர்க்யூட் பங்களாக்களின் எண்ணிக்கை.. | | | √ |
| | | 9. a மேம்படுத்தப்பட்ட நிதி, தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் நிலையான மற்றும் சிறந்த முறையில் தாக்குப் பிடிக்கும் ஆற்றலைக் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கு வசதியளித்தல். | • திருத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள மாவட்டச் செயலகங்களின் எண்ணிக்கையில் திருத்தப்பட்ட மாவட்டச் செயலகங்களின் எண்ணிக்கை<br>➢ மொணராகலை மாவட்ட செயலகத்திற்குரயி இலக்கம் 50 இல்லத்தின் கூரை, சிவிலின், குளியலறை மற்றும் பாதுகாப்பு வேலியை பழுதுபார்த்தல், நிறம் பூசுதல் மற்றும் யன்னல் கதவு அமைத்தல்.<br>➢ தொலுவை பிரதேச செயலாளரின் இல்லத்தின் கூரை மற்றும் மலசலகூட பழுதுபார்ப்புக்கள்.<br>➢ களுத்துறை மாவட்ட செயலகத்திற்கு டைல் பதித்தல் (ஒரு பகுதி), பாதுகாப்பு வேலி மற்றும் மலசலகூட பழுதுபார்ப்பு<br>➢ அநுராதபுரம் பிரதேச செயலகத்தின் கூரை மற்றும் பிரதான கதவு உள்ளிட்ட வேறு | | | √ |

| # | நோக்கங்கள் | இலக்குகள் | வெற்றிக் குறிகாட்டிகள் | அடைந்துள்ள முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| | | | அத்தியவசிய பழுதுபார்ப்புக்களை மேற்கொள்ளல்.<br>➢ திருகோணமலை மாவட்ட செயலகத்திற்குரிய சங்கமித்தா ஓய்வறையின் கூரைக்கு எஸ்பஸ்டோஸ் சீட் பொருத்துதல | | | |
| | | | • திருத்தப்பட உத்தேசிக்கப்பட்ட பிரதேச செயலகங்களின் எண்ணிக்கையில் திருத்தப்பட்ட பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை<br>➢ மஹவிலச்சிய பிரதேச செயலகத்தின் எஞ்சிய வேலைகளை நிறைவுசெய்தல்.<br>➢ பியகம பிரதேச செயலகத்திற்குப் பிரவேசிக்கும் ஜுபிலி மாவத்தைக்கு எல்லைப்புறமாக உள்ள மதிலை பழுதுபார்த்தல்.<br>➢ ஆனமடுவைப் பிரதேச செயலகத்தின் பொது மலசலகூடம் மற்றும் நீர் வழங்கல் தொகுதியை பழுதுபார்த்தல்.<br>➢ வனாத்தவில்லு பிரதேச செயலகத்தின் மலசலகூடத் தொகுதியை பழுதுபார்த்தல். | | | √ |
| | | | • பழுதுபார்க்க உத்தேசிக்கப்பட்ட பிரதேச செயலாளர் குடியிருப்புகளின் எண்ணிக்கையில் பழுதுபார்க்கப்பட்ட பிரதேச செயலாளர் குடியிருப்புகளின் எண்ணிக்கை<br>➢ புத்தளை பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தின் கூரை, சிவிலின், குளியலறை மற்றும் பாதுகாப்பு வேலியை பழுதுபார்த்தல், நிறம் பூசுதல் மற்றும் மின்சார தொகுதியை அமைத்தல்.<br>➢ கதிர்காமம் பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தின் கூரை, சிவிலின், குளியலறை மற்றும் பாதுகாப்பு வேலியை பழுதுபார்த்தல், நிறம் பூசுதல் மற்றும் மின்சார தொகுதியை அமைத்தல்.<br>➢ கங்க இஹல பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ மலசலகூட தொகுதி மற்றும் அத்தியவசிய பழுதுபார்ப்புக்கள<br>➢ மெததும்பரை பிரதேச செயலாளரின் இல்லத்தின் | | | √ |

| # | நோக்கங்கள் | இலக்குகள் | வெற்றிக் குறிகாட்டிகள் | அடைந்துள்ள முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| | | | மின்சாரத் தொகுதி, மலசலகூட தொகுதி மற்றும் அத்தியவசிய பழுதுபார்ப்புக்கள்<br>➢ உடுதும்பரை பிரதேச செயலாளரின் இல்லத்தின் மலசலகூட தொகுதி மற்றும் அத்தியவசிய பழுதுபார்ப்புக்கள்<br>➢ உடபலாத்த பிரதேச செயலாளரின் இல்லத்தின் மின்சாரத் தொகுதி மற்றும் மலசலகூட தொகுதி பழுதுபார்ப்புக்கள்<br>➢ கண்டி மாவட்ட செயலகத்தின் கழிவுநீர் தொகுதியை பழுதுபார்த்தல்.<br>➢ ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளரின் இல்லத்தின் மின்சாரத் தொகுதி மற்றும் மலசலகூட தொகுதி பழுதுபார்ப்புக்கள்.<br>➢ தெல்தோட்டை பிரதேச செயலாளரின் இல்லத்தின் கூரை மற்றும் மலசலகூட தொகுதி பழுதுபார்ப்புக்கள<br>➢ பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலாளரின் இல்லத்தின் பாதுகாப்பு மதிலை நிர்மாணித்தல் மற்றும் வேறு அத்தியசிய பழுதுபார்ப்புக்கள்.<br>➢ மஹவ பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தின் அத்தியசிய பழுதுபார்ப்புக்கள். | | | |
| | | | • பழுதுபார்க்க முன்மொழியப்பட்ட காலாண்டுகளில் பழுதுபார்க்கப்பட்ட காலாண்டுகளின் எண்ணிக்கை<br>➢ இலக்கம் 4/2, 5, 5/1, 5/1/1, 5/2, 5/3, 5/4 வடுகொடபிட்டிய வீதியின் சாரதிகள் வீட்டுத் தொகுதியின் கூரை மற்றும் மலசல கூடத் தொகுதியை பழுதுபார்த்தல்.<br>➢ தர்மாசோக்க மாவத்தை உத்தியோகபூர்வ இல்லத்தின் கூரை மற்றும் மலசல கூடத் தொகுதியை பழுதுபார்த்தல். | | | √ |
| | | | • கையில் உள்ள பில்களின் மதிப்பின் மூலம் செட்டில் செய்யப்பட்ட பில்களின் அளவு பிபேடும் பொலன்னறுவை அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் 31.12.2021 அன்று கையிருப்பில் உள்ள உண்டியல்களுக்கான தீர்வு | | | √ |

| # | நோக்கங்கள் | இலக்குகள் | வெற்றிக் குறிகாட்டிகள் | அடைந்துள்ள முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| 3 | 10. நாடுகளில் மற்றும் அவற்றுக்கு இடையில் பாரபட்சத்தன்மையை குறைத்தல். | 10.4 விசேடமாக நிதி, சம்பளம் மற்றும் சமூகப் பாதுகாப்பு கொள்கைகளைப் பயன்படுத்தல் மற்றும் முற்போக்கான முறையில் சமத்துவத்தை அடைந்துகொள்ளல். | • சம்பளம் மற்றும் சமூகப் பாதுகாப்பு பரிமாற்றத்தின் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உழைப்பின் பங்கு. | √ | | |
| 4 | 11. நகரம் மற்றும் குடியிருப்புக்களை பூரணமான, பாதுகாப்பான, உறுதியான மற்றும் நிலைபேர்தன்மையில் அமைத்தல். | 11. a தேசிய மற்றும் பிராந்திய அபிவிருத்தித் திட்டங்களை வலுப்படுத்துதன் மூலம் நகர், உப நகர் மற்றும் கிராமியப் பிரதேசங்களில் நேர்மறையான பொருளாதார, சமூக மற்றும் சூழல்சார் தொடர்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல். | • மாவட்ட அளவில் செய்யப்பட்ட ஒதுக்கீடு கோரிக்கைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் சதவீதம் | | | √ |
| 5 | 12. நிலையான மற்றும் நுகர்வு மற்றும் உற்பத்திப் போக்குகளை உறுதிசெய்தல் | 12.7 தேசிய முன்னுரிமைகளுக்கு அமைய நிலையான பொதுமக்கள் பாவனை முறைகளை ஊக்குவிப்பதற்காக அமைச்சிடம் உள்ள வளங்களை முழுமையாகப் பயன்படுத்தல். | • அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களின் திருத்தப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன | | | √ |
| | | | • கொள்முதல் நடவடிக்கைகளுக்கு வரவுசெலவுத்திட்ட நிதியத்தைப் பயன்படுத்திக்கொள்ளல். | | | √ |
| 6 | 16. நிலையான அபிவிருத்திக்கு அமைதியான மற்றும் உள்ளீர்க்கப்பட்ட சமூக ஊக்குவிப்பு மற்றும் அனைவருக்கும் சமத்துவத்தை வழங்கும் மற்றும் பொறுப்புக்கூறும் உள்ளீர்க்கப்பட்ட நிறுவனங்களை உருவாக்குதல். | 16.5 இலஞ்சம் மற்றும் மோசடியை குறிப்பிட்டளவு குறைத்தல். | • லஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளை குறைக்கும் நோக்கில் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் படி அந்த மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகளின் சதவீதம். | | | √ |
| | | 16.6. ஒவ்வொரு மட்டத்திலும் பயனுள்ள, பொறுப்புக்கூறும் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் நிறுவனத்தை அபிவிருத்தி செய்தல். | • குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க எதிர்பார்க்கப்படும் பணிகளில் முடிக்கப்பட்ட பணிகளின் சதவீதம்<br>➢ உரிய காலத்தில் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை திறைசேரிக்கு சமர்ப்பித்தல்.<br>➢ பெப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிதி அறிக்கைகளை கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பித்தல்.<br>➢ பெப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முற்பணக் கணக் பீ ஐ | | | √ |

| # | நோக்கங்கள் | இலக்குகள் | வெற்றிக் குறிகாட்டிகள் | அடைந்துள்ள முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| | | | கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பித்தல். | | | |
| | | | • பிரதான அரச செலவினங்களின் பிரிவுக்கு அமைய அல்லது வரவுசெலவுத்திட்ட குறியீடுகள் மற்றும் சமமான (அடிப்படை அனுமதிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் பங்காக) | √ | | |
| | | | • 01/2020 அரச நிதிச் சுற்றறிக்கையின் காலச் சட்டகத்திற்கு அமைய பொருட் சுற்றாய்வு நடவடிக்கைகளை நிறைவுசெய்தல். | | | √ |
| | | 16.9 பிறப்பு பதிவு உள்ளிட்ட 2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் சட்ட ரீதியான அடையாளம் ஒன்றை ஏற்படுத்திக்கொடுத்தல் | • வயதுக்கு அமைய அரசாங்க அதிகாரம் பெற்ற நிறுவனமொன்றில் தனது பிறப்பை பதிவுசெய்துள்ள 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் அளவு | √ | | |
| | | 16.10 தேசிய சட்ட தொகுதிக்கு அமைவாக பொதுமக்களுக்கு தகல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தல் மற்றும் வினைத்திறன்மிக்க மற்றும் வெளிப்படைத்தன்மையுள்ள அரசாங்க சேவையை பேணிரல். | • தகவல் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கையில் வழங்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் சதவீதம். | | | √ |
| | | | • பெறப்பட்ட பொது புகார்களின் எண்ணிக்கையில் தீர்வுக்காக எடுக்கப்பட்ட புகார்களின் சதவீதம் | | | √ |

## 5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் வெற்றிகள் மற்றும் சவால்கள்

### 5.2.1. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் வெற்றிகள்

#### 5.2.1.1. அபிவிருத்திப் பிரிவு

- மதுராவளை பிரதேச செயலகத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்து அங்கு கடமைகளை ஆரம்பித்தல்.
- வல்லாவிட பிரதேச செயலகத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்து அங்கு கடமைகளை ஆரம்பித்தல்.
- கம்பஹா மாவட்ட செயலக நிர்வாக வளாகத்தை திறந்து வைத்து அதன் பணிகளை ஆரம்பித்தல்.
- பொலன்னறுவை மாவட்ட செயலக நிர்வாக வளாகத்தில் உத்தியோகபூர்வமாக பிரிவுகளை நிறுவி கடமைகளுக்கு பயன்படுத்தல்.
- மத்திய நுவரகம் பலாத பிரதேச செயலகத்தின் இரண்டு மாடிக் கட்டிடத்தை திறந்து வைத்து அதன் பணிகளை ஆரம்பித்தல்.
- வத்தளை பிரதேச செயலகத்தின் ஐந்து மாடி கட்டிடத்தை திறந்து வைத்து அதன் பணிகளை ஆரம்பித்தல்.
- பின்வரும் புதிய அலுவலக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு நிறைவடைந்து திறக்கப்பட உள்ளன.

I. மட்டக்களப்பு மாவட்ட செயலகக் கட்டிடம்
II. இரத்தினபுரி மாவட்ட செயலகக் கட்டிடம்
III. ஹோமாகம பிரதேச செயலகத்தின் நான்கு மாடிக் கட்டிடம்
IV. முந்தல் பிரதேச செயலகத்தின் மூன்று மாடிக் கட்டிடம்
V. மகாவிலச்சி பிரதேச செயலகக் கட்டிடம்
VI. மஹியங்கனை பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடம்
VII. ஹாலிஎலல பிரதேச செயலகக் கட்டிடம்
VIII. லுனுகம்வெஹெர பிரதேச செயலகக் கட்டிடம்
IX. அங்குனகொலபலஸ்ஸ பிரதேச செயலகக் கட்டிடம்

#### 5.2.1.2. நிதிப் பிரிவு

- தேவைக்கேற்ப கிராமப்புற மற்றும் பிராந்திய நிர்வாக நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை வழங்குதல்.
- ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சரியான நேரத்தில் தயாரித்தல்.
- உரிய தேதிக்கு முன்னதாக உள்நாட்டலுவல்கள் பிரிவின் நிதிநிலை அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் மாவட்ட செயலகங்களின் நிதிநிலை அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.
- அரச அதிகாரிகளின் முற்பணம் பி கணக்கை உரிய திகதிக்கு முன்னர் தயாரித்தல்.
- சரியான முடிவுகளை எடுப்பதன் மூலம் உள்நாட்டலுவல்கள் பிரிவின் கொள்முதல் நடவடிக்கைகளை செயல்படுத்துதல்.
- முறையான சொத்து முகாமையை மேற்கொள்ளல் மற்றும் வருடாந்த பொருள் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளல்.

#### 5.2.1.3. புலனாய்வுப் பிரிவு

- பெறப்பட்ட பொதுமக்கள் முறைப்பாடுகளை வகைப்படுத்துவதன் மூலம் ஆரம்ப விசாரணைகளை விரைவாக நிறைவு செய்ய முடியும்.
- சில பொதுமக்கள் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு உரிய தரப்பினரை நிறுவனத்திற்கு அழைத்து தீர்வுகளை வழங்க ஏற்பாடு செய்தல்.

#### 5.2.1.4. பொறியியல் பிரிவு

- கட்டுமானத் திட்டங்களின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையை வழங்க ஆலோசனை நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.
- கட்டுமானத் திட்டங்கள் தொடர்பான வடிவமைப்பு மதிப்பீடுகள், விவரக்குறிப்புகள் மற்றும் மாறுபாடு அறிக்கைகள் போன்ற ஆவணங்களை

பரிந்துரைத்தல் மற்றும் அனுமதி வழங்குதல்.

- தரமான மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக கட்டிடங்களை வடிவமைத்தல்.
- மாவட்டச் செயலகங்களில் பணிபுரியும் பொறியியலாளர்களின் அறிவைப் புதுப்பிப்பதற்கு வெளித் தரப்பினரின் ஆதரவுடன் செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.
- உள்நாட்டலுவல்கள் பிரிவின் பராமரிப்புத் துறையின் செயல்பாட்டைச் சீரமைப்பதன் மூலம், அனைத்துப் பிரிவுகளினதும் பராமரிப்புப் பணிகளையும் முறையாகச் செய்ய முடியும்.
- தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு தொடர்பாக தற்போதுள்ள பிரச்சினையை தீர்ப்பதில் செயலூக்கமுள்ள பங்களிப்பை வழங்க முடியும்.
- வாடிக்கையாளரின் அனைத்துத் தேவைகளையும் உள்ளடக்கிய கட்டிட வடிவமைப்புத் திட்டங்களைத் தயாரித்தல்.
- அரசாங்க ஊழியர்களுக்கான சுற்றுலா பங்களாக்களை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.

### 5.2.1.5. பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம் (SLILG) மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி உத்தியோகதர்களுக்கு 170 உள்நாட்டு பயிற்சிகள் / பட்டறைகளை நடத்தியதுடன், 6,833 உத்தியோகத்தர்கள் அந்தப் பயிற்சிகள் / பட்டறைகளில் பங்கேற்றுள்ளனர். மேலும், அமைச்சின் பல்வேறு மட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளுக்காக 24 உள்நாட்டு செயலமர்வுகளில் பங்கேற்றுள்ளனர். 7 வெளிநாட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டு, 16 அதிகாரிகள் அந்தப் பயிற்சிகளில் பங்கேற்றுள்ளனர்.

***2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவிக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்***

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | வருடத்தில் நிதி இலக்கு 2023 (ரூ.மில்.) | வருடத்தில் நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | கருத்திட்டத்தின் திரண்ட பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் (GCWWMP) | 1,000.00 | 448.40 | 96% |
| 2 | பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (GCWWMIIP) பகுதி 2 | 597.00 | 120.00 | 57% |
| 3 | பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (GCWWMIIP) பகுதி 3 | 3,720.00 | 470.00 | 19% |
| 4 | உள்ளூராட்சி மன்றங்களைக் கட்டியெழுப்பும் துறைசார் கருத்திட்டம் (புறநெகும) – மேலதிக நிதியீட்டம் | 2,000.00 | 2,291.02 | 99.6% |
| 5 | கிராமியப் பாலங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டம் - கட்டம் 5 | 5,000.00 | 4,960.57 | 49.50% |
| 6 | ஆரம்ப சுகாதார வலுவூட்டல் கருத்திட்டம் (PSSP) | 13,000.00 | 12,356.00 | 95% |
| 7 | பொதுக் கல்வி புத்தாக்க கருத்திட்டம் (GEM) | 4,000.00 | 3,619.69 | Goods- 84%<br>Works- 95% |
| 8 | வளர்ந்துவரும் பிரதேசங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம் (RIDEP) | 2,619.00 | 367.50 | 50.8% |
| 9 | போக்குவரத்து தொடர்புகள் மற்றும் சொத்து முகாமைத்துவக் கருத்திட்டம் - மாகாண வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் (TCAMP- PRDP) | 6,000.00 | 5,216.00 | 97% |
| 10 | பிரதேச அபிவிருத்தி உதவிக் கருத்திட்டம் (LDSP) | 6,000.00 | 3,460.00 | 66% |

### 2.4 சவால்கள்

I. 2020-2021 காலப் பகுதியில் கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக கட்டுமானத் துறையில் தனியார் துறையின் நம்பகத்தன்மை குறைந்தமை.

II. அந்நியச் செலாவணி நெருக்கடியால் கட்டுமானத் துறை தொடர்பான மூலப்பொருட்களின் தட்டுப்பாடு. குறிப்பாக சீமெந்து, இரும்பு போன்றவற்றின் விலை உயர்வடைதல்.

III. கோவிட் தொற்றுநோயின் போது நிர்வாகச் சேவைகளைச் செய்ய முடியாமல் வீணடிக்கப்பட்ட காலம்.

IV. கட்டுமானத் துறையில் பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் மீள்மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

V. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை உயர்வு மற்றும் பற்றாக்குறை.

VI. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக போதிய வரவுசெலவு ஒதுக்கீடுகள் இல்லாமை மற்றும் அரச நிறுவனங்களின் செலவீனங்களை மட்டுப்படுத்துவதற்கான அரசின் கொள்கைகளுக்கு இணங்க செயற்பட வேண்டி ஏற்பட்டுள்ளமையும்.

## 2.5 எதிர்கால இலக்குகள்

1. உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உள்ளூராட்சி சேவை வழங்கலின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.
2. உள்ளூராட்சி மன்றங்களின் நூலக அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் நவீன அறிவுக்கான அணுகலை மேம்படுத்துதல்.
3. உள்ளூராட்சி மன்றங்களின் திண்மக்கழிவு முகாமைத்துவத் திறனை வலுப்படுத்துதல்.
4. வவுனியா மற்றும் பதுளை மாவட்டங்களை மையமாகக் கொண்டு KOICA நிறுவனத்தின் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் செயற்பாடுகளை ஆரம்பித்தல்.
5. நாட்டிலிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் கழிவு முகாமைத்துவ தரப்படுத்தல் முறையை தயாரித்தல்.
6. அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் கழிவு முகாமைத்துவ முறைப்படுத்தல் வழிகாட்டு நெறிகளை தயாரித்தல்.
7. மாகாணங்கள் மிகவும் திறம்பட மற்றும் திறமையான முறையில் செயல்படுவதற்கு தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் தேவைப்படும்போது ஆலோசனைகளை வழங்குதல்.
8. ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒருமுறை மாகாண ஆளுநர்கள் மாநாட்டை நடத்துதல்.
9. மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளுக்கு இடையே முறையான ஒருங்கிணைப்பு பொறிமுறையை உருவாக்கும் பொருட்டு மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்களை தொடர்பு கொண்டு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மாகாணங்களுக்கு இடையேயான விடயப் பரப்பு ஒருங்கிணைப்பு மாநாட்டை நடத்தி அனைவருக்கும் பொருத்தமான முறைகளை அறிமுகப்படுத்துதல். மாநாட்டில் எழும் பிரச்சனைகளுக்கு ஒன்பது மாகாணங்களுக்கும் ஒரே முறையை அறிமுகம் செய்தல்.
10. உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டம் தொடர்பான விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் துணை விதிகளைப் புதுப்பித்தல்.
11. அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளின்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்தல்.
12. அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளின்படி மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் செய்தல்.
13. அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளின் அடிப்படையில் புதிய உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுவதற்கான முன்மொழிவுகளை பரிசீலித்தல் மற்றும் வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிடுதல்.
14. புதிய உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுவதற்கு ஏற்ப பிரிவுகளை எல்லை நிர்ணயம் செய்து வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுதல்.
15. அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முன்னுரிமை நடவடிக்கைகளின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்ற யாப்பு விதிகளில் அடையாளம் காணப்பட்ட திருத்தங்களைச் செய்தல்.
16. கண்டலம சுற்றுலா விடுதி சுற்றுலாப் பயணிகளை கவரும் பிரதேசத்தில் அமைந்துள்ளதால் அதனை மேம்படுத்தி இப்பிரிவின் வருமான ஆதாரமாக மாற்றுதல்.
17. Empowering Local Government - A Comprehensive Digitalization Project for Local Government கருத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிர்வாகத்தை மேம்படுத்துதல் - எதிர்கால மென்பொருள் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான விரிவான டிஜிட்டல் மயமாக்கல் திட்டம். அனைத்து மாகாண சபைகளுக்கும் இந்த மென்பொருள் முறையை அறிமுகம் செய்தல் மற்றும் 150 உள்ளூாராட்சி மன்றங்களில் இந்த மென்பொருள் அமைப்பை நிறுவுதல். அந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளித்தல்.
18. ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் தொடர்புடைய 06 தேசிய வழிநடத்தல் குழு (NSC) கூட்டங்களை நடத்துதல் மற்றும் அதில் எழும் சிக்கல்களைத் தீர்த்தல்.
19. கருத்திட்ட முன்னேற்றத்தைப் பின்னூட்டம் செய்து மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
20. கிருலப்பனை நீர்ப்பிடிப்புப் பகுதிக்கு புதிய புவியீர்ப்பு வடிகால்கள், மின் இணைப்புகள் மற்றும் நீரேற்று நிலையங்களை வழங்குதல்.
21. a) DLI 1 - 500 இலக்கு பாடசாலைகளில் குறைந்தது 80% மாணவர்களின் ஆங்கில மொழி கற்றல் பெறுபேறுகளை அதிகரித்தல்.

    b) DLI 2 – 500 இலக்கு பாடசாலைகளில் குறைந்தபட்சம் 80% மாணவர்களுக்கு கணிதம் மற்றும் மொழிக் கற்றல் பெறுபேறுகளை அதிகரித்தல்.

c) DLI 3 - 20,000 மேலதிக தொழில்முறை தகுதியுள்ள ஆசிரியர்களை உருவாக்குதல். (அவர்களில் குறைந்தது 50% பெண்கள்)

d) DLI 4 குறைந்தபட்சம் 1,250 பாடசாலைகளில் குறிப்பிட்ட அளவிற்கு பாடசாலை மட்டத்தில் சுகாதார நடைமுறைகளை மேம்படுத்துதல் உட்பட விருத்திசெய்யப்பட்ட பாடசாலைகளில் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

22. உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியின் கீழ் மற்றும் அதற்கு அப்பால் கடன்களை வழங்கக்கூடிய ஒரு நிறுவனமாக அதை உருவாக்குதல்.
23. உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் கடன்களை வழங்குவதற்கான செயல்முறையை நெறிப்படுத்தவும் வினைத்திறனாக்குவதற்கும் சிறந்த பொறிமுறையை அமைத்தல்.
24. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் கீழ் நல்லாட்சி மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி முறைமைக்கான பொதுப் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் திறன் மேம்பாடு.
25. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் துறையில் ஆய்வுகளை நடத்துதல் மற்றும் தகவல்களைப் பரப்புதல்.
26. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான ஆலோசனை வழிகாட்டல் கையேட்டைத் தயாரித்தல்.
27. ஊவா, ரஜரட்ட மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களுடன் இணைந்து சான்றிதழ் கற்கைநெறிகளை ஆரம்பித்தல்.
28. ஸ்ரீ ஜவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்து உள்ளூராட்சி பற்றிய வெளிவாரிப் பட்டப் படிப்பைத் ஆரம்பித்தல்.

## 2.6 உள்நாட்டு நிதியங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படம் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் செயலாற்றுகை

### 2.6.1 அபிவிருத்திப் பிரிவு

**1. நோக்கம்**

உள்ளூராட்சிப் பகுதிகளில் வாழும் சமூகங்கள் பயன்பெறும் வகையில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு உள்ளூர் நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் பொதுச் சேவை வழங்கலை வினைத்திறனுடனனும் பயனுள்ள வகையிலும் ஆக்குதல் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் குறைப்பதில் பங்களிப்புச் செய்தல்.

**2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டின் இறுதி வரையிலான முன்னேற்றம்**

<u>அபிவிருத்திப் பிரிவின் மொத்த முன்னேற்றம்</u>

| தொ. இல | நிகழ்ச்சித்திட்டம் | 2023 ஒதுக்கீடு (ரு.) | 2023 ஆம் ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை (ரு) | 2023.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரு) | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (மூலதனம்) | 200,000,000.00 | 185,626,853.46 | 86,866,361.75 | 47% | 65% |
| 2 | பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (மீண்டுவரும்) | 51,700,000.00 | 27,797,840.61 | 22,524,342.46 | 81% | 87% |
| 3 | (வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 01/2023 இன் பிரகாரம் 6% கழித்த பிறகு மீதமுள்ள ஒதுக்கீடு தொகை) | 15,000,000.00 | 3,304,642.97 | 2,334,023.08 | 70% | 75% |
| 4 | நூலக அபிவிருத்தித் திட்டம் | 202,104,000.00 | 135,882,289.20 | 129,345,913.29 | 95% | 98% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | உள்ளூராட்சி மன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் (2021 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு - 36) | 1,500,000,000.00 | 1,500,000,000.00 | 1,500,000,000.00 | 100% | 100% |
| | **மொத்தம்** | **1,968,804,000.00** | **1,852,611,626.24** | **1,741,070,640.58** | **78%** | **85%** |

2023 ஆம் ஆண்டுக்காக அபிவிருத்திப் பிரிவுக்கு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ரூ.1,968,804,000.00 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, 2023.12.31 ஆம் திகதியளவில் ரூ.1,741,070,640.58 தொகை வேலை நிறைவடைந்த கருத்திட்டங்களின் கையிலுள்ள பட்டியல்களை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.
ஒவ்வொரு பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2023.12.31 ஆம் திகதியளவில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதன் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

### 1. உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (மூலதனம்)

2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.200,000,000.00 மூலம் 2021 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட 08 கருத்திட்டங்கள் தொடர்பான நிலுவையிலுள்ள பட்டியல்களை தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ஓரளவு முடிக்கப்பட்ட கருத்திட்டங்களில் தகனம் மற்றும் பொது கழிப்பறைகள் தொடர்பான கருத்திட்டங்களின் மீதமுள்ள பகுதிகளை மாத்திரம் நிறைவு செய்ய திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் 2023.09.12 தேதியிட்ட கடிதத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2023 ஆம் ஆண்டுக்கான 10 கருத்திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதில் 3 கருத்திட்டங்களின் பணிகளை 2023.12.31 ஆம் திகதிக்கு நிறைவுசெய்ய இயலுமாகியது.

2023 ஆம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதிக்குள் சுடுகாடு நிர்மாணப் பணிகளை முடிக்க போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் வருட இறுதியில் நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான வானிலை காரணமாக (கனமழை) நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்ய முடியாமல் போனது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 2023 ஒதுக்கீடு (ரூ) | 200,000,000.00 |
| அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 18 |
| அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ) | 185,626,853.46 |
| 2023.12.31 ஆம் திகதிக்கு மொத்தச் செலவு (ரூ) | 86,866,361.75 |
| 2023.12.31 ஆம் திகதிக்கு வேலை நிறைவடைந்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 11 |
| நிதி முன்னேற்றம் | 47% |
| பௌதீக முன்னேற்றம் | 65% |



ரக்வானை பொது மலசலகூடத்தை நிர்மாணித்தல் - கொடகவல பிரதேச சபை – சப்பிரகமுவ மாகாணம் செலவிடப்பட்ட தொகை ரூ. 1,550,343.38



ஹபரணை நகர பொது மலசலகூடத்தை நிர்மாணித்தல் - கெக்கிராவ பிரதேச சபை – வடமத்திய மாகாணம் செலவிடப்பட்ட தொகை ரூ.. 6,553,978.54

## 2. பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (மீண்டுவரும்)

2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.51,700,000.00 ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட 24 கருத்திட்டங்கள் தொடர்பான நிலுவையிலுள்ள பட்டியல்களைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.
நிலுவையிலுள்ள பட்டியல்களைத் தீர்த்த பின்னர் எஞ்சியுள்ள ஏற்பாடு, வருடத்தின் எஞ்சிய காலப்பகுதியில் உள்ளூராட்சி மன்றங்களின் அன்றாட கடமைகளை வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் மேற்கொள்வதற்குத் தேவையான பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 2023.08.18 ஆம் திகதிய கடிதம் மூலம் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் இணக்கம் வழங்கப்பட்டது.

அதற்கிணங்க, 2023 ஆம் ஆண்டில் மீண்டுவரும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான மதிப்பீடுகள் கோரப்பட்டு பெறப்பட்ட முன்மொழிவுகளில் தற்போது செயல்படுத்துவதற்குத் தேவையான பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்பு முன்மொழிவுகள் தெரிவுசெய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

| | |
|---|---|
| 2023 ஒதுக்கீடு (ரூ) | 51,700,000.00 |
| அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 62 |
| அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ) | 27,797,840.61 |
| 2023.12.31 ஆம் திகதிக்கு மொத்தச் செலவு (ரூ) | 22,524,342.46 |
| 2023.12.31 ஆம் திகதிக்கு வேலை நிறைவடைந்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 54 |
| நிதி முன்னேற்றம் | 81% |
| பௌதீக முன்னேற்றம் | 87% |

மதிப்பீடுகளைத் தயாரித்து அனுப்புவதற்கு ஆண்டு இறுதியில் போதிய அவகாசம் இல்லாத காரணத்தினால் இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு எல்லைக்குள் கருத்திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

நாட்டில் நிலவிய மோசமான காலநிலை (கனமழை) காரணமாக அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வரவில்லை.



அயகம வாராந்த சந்தைக்கு அண்மையில் பலநோக்கு கட்டிடத்தின் கூரை பழுதுபார்ப்பு – அயகம பிரதேச சபை – சப்பிரகமுவ மாகாணம் - செலவுசெய்யப்பட்ட தொகை ரூ. 404,286.97



பிரகதி உயன சனசமூக நிலையம் அபிவிருத்தி – பத்தேகம பிரதேச சபை – தென் மாகாணம் - செலவு செய்யப்பட்ட தொகை ரூ.171,636.32

## 3. நூலக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 02/2023 மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து மூன்றாம் காலாண்டு வரை புதிய கருத்திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

பின்னர், 2023.08.18 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திறைசேரி செயற்படுத்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நூலகங்களின் அத்தியாவசிய பழுதுபார்ப்பு பணிகளுக்கான முன்மொழிவுகள் அழைக்கப்பட்டன.

மேலும் இந்தச் செலவினத் தலைப்புக்கு 2024 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடுகள் செய்யப்படாத காரணத்தினால் 2023 ஆம் ஆண்டின் கடைசி 2 மாதங்களில் நிறைவு செய்ய முடியுமான கருத்திட்டங்களை மாத்திரம் தெரிவு செய்து செயல்படுத்த வேண்டியிருந்தது.

| | |
|---|---|
| 2023 ஒதுக்கீடு (ரூ) | 15,000,000.00 |
| அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 08 |
| அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ) | 3,304,642.97 |
| 2023.12.31 ஆம் திகதிக்கு மொத்தச் செலவு (ரூ) | 2,334,023.08 |
| 2023.12.31 ஆம் திகதிக்கு வேலை நிறைவடைந்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 06 |
| நிதி முன்னேற்றம் | 70% |
| பௌதீக முன்னேற்றம் | 75% |



பத்தேகம பொது நூலகத்தின் முன் கூரையை அமைத்தல் - பத்தேகம பிரதேச சபை – தென் மாகாணம்
செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 250,000.00



கொட்டாரமுல்ல பொது நூலக பழுதுபார்ப்பு – நாத்தாண்டிய பிரதேச சபை – வடமேல் மாகாணம் - செலவு செய்யப்பட்ட தொகை ரூ.290,879.15

## 4. பிரதேச சபைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் (2021 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு – 36)

இந்த செலவினத் தலைப்பின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் நிலுவை பட்டியல்களைத் தீர்ப்பதற்கும் பகுதியளவில் முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பணிகளை நிறைவு செய்வதற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் இந்த திட்டத்தின் கீழ் ஓரளவு முடிக்கப்பட்ட கருத்திட்டங்களில் அத்தியாவசியமான தகனம் மற்றும் பொது கழிப்பறைகள் தொடர்பான திட்டங்களை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றை உள்ளுராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் (மூலதனம்) செலவினத் தலைப்பின் கீழ் செயல்படுத்த திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்தினால் 2023.09.18 ஆம் திகதிய கடிதத்தினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

எனவே, மேலே குறிப்பிட்டுள்ளபடி, இந்த செலவினத் தலைப்பின் கீழ் நிலுவையில் உள்ள பட்டியல்கள் மற்றும் நிறைவேற்றப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்கள் மட்டுமே தீர்க்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 2023 ஒதுக்கீடு (ரூ) | 202,104,000.00 |
| அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 140 |
| அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ) | 135,882,289.20 |
| 2023.12.31 ஆம் திகதிக்கு மொத்தச் செலவு (ரூ) | 129,345,913.29 |
| 2023.12.31 ஆம் திகதிக்கு வேலை நிறைவடைந்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 137 |
| நிதி முன்னேற்றம் | 95% |
| பௌதீக முன்னேற்றம் | 98% |



உக்குவலை பொதுச் சந்தைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - உக்குவலைப் பிரதேச சபை – மத்திய மாகாணம் - செலவிடப்பட்ட தொகை ரூ.10,656,763.54



மாவத்தகமை பிரதான வாராந்த சந்தையை அபிவிருத்தி செய்தல் - மாவத்தகம பிரதேச சபை – வடமேல் மாகாணம் - செலவிடப்பட்ட தொகை ரூ.6,457,187.67

### 2.6.2 தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையம்

1. **நோக்கம்**

உள்ளூராட்சி மன்றங்களில் கழிவு முகாமையை திறம்பட செயல்படுத்துவதில் தொழில்நுட்பப் பிரிவாக செயல்படுவதன் மூலம் வெற்றிகரமான நடைமுறைகள் தொடர்பான தகவல்களைப் பரப்புதல், தளம் சார்ந்த கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் வழிகாட்டல்.

2. **2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரையிலான முன்னேற்றம்.**

2023 ஆம் ஆண்டுக்கான திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையத்திற்கு திண்மக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பின்வரும் செலவினத் தலைப்புக்களின் கீழ் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

- திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டங்கள் (130-2-21-016-2504) - ரூ. 300,000,000
- கழிவு முகாமைத்துவம் மற்றும் பிரதேச சபைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி (130-2-21-024-2504) - ரூ. 125,000,000
- மேல் மாகாண கழிவு முகாமைத்துவ பிரதான திட்டத்தை தயாரித்தல் - முன்னோடிக் கருத்திட்டம் (130-2-21-027-2509) - ரூ. 50,000,000
- Waste to Value கருத்திட்டம் (130-2-21-027-2509) - ரூ. 275,000,000

மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டங்களின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்குடன் பின்வரும் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

01.சேதனப் பசளை தளங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

02. யானை வேலிகள் அமைத்தல்

03.கழிவு முகாமைத்துவக் கருவிகளை வழங்குதல்

04.மலக் கழிவு மாற்றீட்டு தொகுதியை அமைத்தல்

05.உயிர் வாயு அலகுகளை நிர்மாணித்தல்

அதற்கிணங்க, 2023.12.31 ஆம் திகதி வரையில் மேற்குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் பற்றிய முன்னேற்றம் பின்வருமாறு.

| நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கீடு (ரூ) | கருத்திட்டத்தின் தன்மை | பௌதீக முன்னேற்றம் (%) | நிதி முன்னேற்றம் (%) | 2023.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரூ) |
|---|---|---|---|---|---|
| திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் (மூலதனம்) | 300,000,000.00 | 2021 ஆண்டில் கருத்திட்டத்தின் பட்டியல்களைத் தீர்த்தல் | 100 % | 80 % | 10,348,055.60 |
| 2021 இல் நடைமுறைப்படுத்தப்படும் கழிவு முகாமைத்துவம் - உள்ளூராட்சி மன்றங்கள் (வரவு செலவுத் திட்ட முன்மொழிவு 36) | 125,000,000.00 | 2021 ஆண்டில் கருத்திட்டத்தின் பட்டியல்களைத் தீர்த்தல் | 90% | 85% | 106,332,262.56 |
| மேல் மாகாண கழிவு முகாமைத்துவ பாரிய திட்டத்தை தயாரித்தல் - முன்னோடித் திட்டம் | 50,000,000.00 | முன்னோடித் திட்டத்திற்கான உள்நாட்டு வரிகளைத் தீர்த்தல் | 100% | 0.98% | 18,565,150.60 |



கல்நேவ கலி மாற்றீட்டுத் தொகுதி



பொத்துவில் கொம்போஸ்ட் தளம்



களுத்துறை பொஹொரவத்த கழிவு சுழற்றி நிலையம்

### 2.6.3 உள்ளூராட்சிப் பிரிவு

**1. நோக்கம்**

இலங்கையின் உள்ளூராட்சி தொகுதியின் செயல்திறனை நிர்வகித்தல் மற்றும் அதன் செயற்பாடுகளை புதிய தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைத்து விரைவான அபிவிருத்தி திசையில் மிகவும் பொதுமக்கள் நேயமுள்ள வினைத்திறன்மிக்க உள்ளூராட்சி நிறுவனத்தை உருவாக்குதல்.

**2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலண்டின் இறுதி வரையிலான முன்னேற்றம்**

- **புதிய உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுதல்.**

உள்ளூராட்சி மன்றங்களை நிறுவும் பொருட்டு மதிப்பெண் வழங்கும் நடைமுறைக்கு (வரையறை உட்பட மாவட்டக் குழு அறிக்கை) இல. அப/17/1521/744/015 மற்றும் 2017.07.25 ஆம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, புதிய நிறுவனங்களை நிறுவுதல் அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்படுகின்றன.

**முன்னேற்றம் :-**

இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களைச் சேர்ந்த பிரதான தலைநகரங்களை மகாநகர சபைகளாக மாற்றுவது தொடர்பான கொள்கை தீர்மானத்திற்கு இணங்க, அது தொடர்பில் இலக்கம் அப/22/1094/605/002 மற்றும் 2022.08.16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மகாநகர சபைகள் ஸ்தாபிக்கப்படாத 07 மாவட்டங்களின் தலை நகரங்களில் தற்போதுள்ள நகர சபைகளை மாநகர சபைகளுக்குள் இணைக்கப்பட்டு, இதுவரை கேகாலை, புத்தளம், களுத்துறை, வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய 05 நகர சபைகள் மாநகர சபைகளுடன் இணைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டன. அம்பாறை மற்றும் மன்னார் நகர சபைகளை மாநகர சபைகளாக இணைத்தல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு இல. அப/22/2003/605/002-II மூலம் அமைச்சரவை தீர்மானம் கிடைத்துள்ளது. மாவட்ட குழு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் மேல் நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **சகோதர நகரங்கள் / நட்பு நகரங்கள் எண்ணக்கருவின் கீழ்**

**முன்னேற்றம் :-**

சகோதர நகரங்கள் / நட்பு நகரங்கள் என்ற கருத்தை செயல்படுத்த தேவையான வழிகாட்டுதல்களை தயாரிப்பதற்காக, அனைத்து குழு உறுப்பினர்களிடமிருந்தும் அவதானிப்புகள் மற்றும் கருத்துகளை வரவழைத்து அதில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து இறுதி வரைவு தயாரிக்கப்பட்டுள்ளத. அந்த வழிகாட்டல்களை தற்காலத்திற்கு ஏற்ற விதத்தில திருத்தியமைப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

- **அரச கணக்குகள் குழு நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி மன்றங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.**

**வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களை செய்தல்.**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு அல்லது வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் அல்லது வெளிவிவகார அமைச்சுக்கு தெரியாமல் வெளிநாடுகளில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுடன் சில உள்ளூராட்சி மன்றங்கள் உடன்படிக்கைகளை மேற்கொண்டு இந்த நாட்டுக்குப் பெறப்பட்ட நிதிகள் சரியாகப் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்ட காரணத்தினால், மேற்படி விடயம் குறித்து "சகோதர நட்பு நகரங்கள் / நட்பு நகரங்கள் என்ற கருத்தின் கீழ் இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் வெளிநாட்டு உள்ளூராட்சி மன்றங்களுனக்கு மத்தியில் ஒப்பந்தங்கள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடல்" எனும் அமைச்சரவைப் பத்திரத்திற்கு கிடைக்கப்பெற்ற இல. அப/18/2679/913/001 மற்றும் 2018.11.28 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டு, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட வியடப் பரப்புக்குள் சகோதர நகரம்/நட்பு நகரம் என்ற கருத்தை நடைமுறைப்படுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதற்கான வழிகாட்டுதல்களை தயாரித்தல் மற்றும் சுற்றறிக்கைகளை வெளியிடுதல் வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் கணக்காய்வு நடவடிக்கைகள் குறித்து உரிய வழிகாட்டல் வழங்கப்படுகின்றது.

**முன்னேற்றம் :-**

2021 ஆம் ஆண்டு குருநாகல் மாநகர சபை தொடர்பான கூட்டத்தில் வழங்கப்பட்ட உத்தரவுகளின்படி அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கொள்முதல் வழிகாட்டு நெறியைத் தயாரிப்பதற்காக 07 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டு நெறி மற்றும் கொள்முதல் கையேட்டை அடிப்படையாகக் கொண்டு இறுதி வரைவு தயாரிக்கப்பட்டு பெறுகை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### ❖ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் வினாக்கள்

**பாராளுமன்ற வினாக்கள்**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிக்கு பொறுப்பான கௌரவ அமைச்சர்களிடம் இருந்து பதில்களை எதிர்பார்த்து முன்வைக்கப்படும் வினாக்கள் அந்தந்த மாகாண பிரதம செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு மாகாணங்களில் இருந்து பெறப்படும் அவதானிப்புகளின் அடிப்படையில் அதற்கான பதில்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்ற கேள்விகளின் எண்ணிக்கை 06 ஆகும், மேலும் அந்த அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்பட்டுள்ளன.

| மாகாணம் | வினாக்களின் எண்ணிக்கை |
|---|---|
| வடமத்திய | 02 |
| கிழக்கு | 01 |
| தெற்கு | 02 |
| மேல் | 01 |

- **பொது மனுக்குழு / அமைச்சு ஆலோசனைக்குழு**

உள்ளூராட்சி நிறுவனங்களிடம் தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத குறிப்பிட்ட தனிநபர்கள் மற்றும் குழுக்கள் மூலம் சமர்ப்பிக்கப்படும் மனுக்களுக்கு அந்தந்த மாகாணங்களில் இருந்து தகவல்களைப் பெற்று நிவாரணம் வழங்குவதற்கு பொது மனுக் குழுவும் அமைச்சு ஆலோசனைக் குழுவும் இடைத்தரகர்களாகச் செயற்படுகின்றன.

**முன்னேற்றம்**

2023 ஆம் ஆண்டிற்காக பொது மனுக் குழுவிலிருந்து 04 மனுக்கள் இந்தப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அந்த 04 மனுக்களுக்கான பதில்கள் பொது மனுக்குழு பணியகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
ஆலோசனைக் குழுவால் 12 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன அதில் 11 க்கான பதில்கள் ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **பொதுமக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.**

24 மாநகர சபைகள், 41 மாநகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் என அமைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களினால் பொதுமக்களுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் அதிருப்தியடையுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களால் இந்த அமைச்சுக்கு முறைப்பாடுகள் அனுப்பப்படும். இவ்வாறு அனுப்பப்படும் முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட மாகாண பிரதம செயலாளர் / உள்ளூராட்சி ஆணையாளர் / உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பி விசாரணை செய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்படும்.

| **மாகாணம்** | **கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **எடுக்கப்பட்ட நடவடிக்கை** |
|---|---|---|
| மேல் | 2050 | உள்ளூராட்சி ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| மத்திய | 1502 | |
| தெற்கு | 105 | |
| வடக்கு | 72 | |
| கிழக்கு | 215 | |
| வடமேற்கு | 350 | |
| வட மத்திய | 203 | |
| ஊவா | 418 | |
| சப்ரகமுவ | 302 | |
| பொது | 115 | எற்புடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

- **உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் சேவைகளுக்கு தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குதல்.**

2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் திருத்தத்தின் கீழ் 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி அதன் பிரிவு 10.4 க்கு இணங்க, அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினாலும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மிகவும் முறையாக மற்றும் வினைத்திறன் மிக்கதாக வழங்குவதற்கும் வருமானங்களை சேகரிப்பதற்கும் இணையவழி முறையை அறிமுகப்படுத்த வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, வடமேல் மாகாண சபையின் கீழ் நிறுவப்பட்ட வடமேற்கு அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட CAT 2020 தகவல் தொழில்நுட்ப முறையானது, உள்ளூராட்சி நிறுவனங்களின் இணைய வழியில் பணம் செலுத்துவதற்கும் இறுதிக் கணக்கைத் தயாரிப்பதற்கும் நிறுவனத்திற்குள் பணியை சீரமைக்கத் தேவையான ஏற்பாடுகளுடன் கூடிய நவீன தொழில்நுட்ப தீர்வுகளைக் கொண்டுள்ளது.

**முன்னேற்றம்**

வடமேல் அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட CAT 2020 தகவல் தொழில்நுட்ப அமைப்பைப் பெறுவதற்கு 341 உள்ளூராட்சி மன்றங்களில் 254 மன்றங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன. மேலும் 148 நிறுவனங்கள் ஆரம்ப பயிற்சி மற்றும் வரிப்பண தரவு உள்ளீட்டை நிறைவு செய்துள்ளன.

- **உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செயலாற்றுகை கருவியை அறிமுகம் செய்து அதற்கமைய சுவர்ணபுரவர விருது விழாவை நடத்துதல்.**

உள்ளூராட்சி மன்றங்களின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வருடாந்தம் உள்ளூராட்சி மன்றங்களை சுவர்ணபுரவர விருது வழங்கும் விழாவின் ஊடாக மதிப்பீடு செய்து வருகின்றது.

2022 ஆம் ஆண்டில், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகைப் போட்டி மற்றும் சுவர்ணபுரவர விருது வழங்கும் விழாவை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. எனினும் அப்போது நாட்டில் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் மற்றும் அவ்வப்போது வெளியிடப்பட்ட செலவினக் கட்டுப்பாட்டு சுற்றறிக்கை காரணமாக, இந்த விருது வழங்கும் விழாவை நடத்த முடியவில்லை.

எனினும், 2023 ஆம் ஆண்டு செயலாற்றுகைப் போட்டி மற்றும் சுவர்ணபுரவர விருது வழங்கும் விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**முன்னேற்றம்**

ஆசிய அபிவிருத்தி மன்றத்தின் ஆதரவுடன் இந்த செயல்திறன் கருவி தற்போது பொருத்தமாக திருத்தப்பட்டுள்ளது. மேலும் மாகாண மட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் இதை அறிமுகப்படுத்துவதற்கான தொடர் பயிற்சித் திட்டங்கள் ஆசிய அபிவிருத்தி மன்றத்துடன் இணைந்து அமைச்சின் அதிகாரிகளால் 2023.09.27 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது. அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் தமது சுயமதிப்பீட்டை மேற்கொண்டு வருகின்றதுடன் அதன் பின்னர் மாகாண மட்டத்தில் முடிவுகள் வழங்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதுடன் தற்போது தேசிய மட்டத்தில் முடிவுகள் வழங்கும் நடவடிக்கைகள் இறுதி கட்டத்தில் உள்ளன.

### 2.6.4 மாகாண சபைகள் பிரிவு

**1. நோக்கம்**

மாகாண சபைகளின் செயற்பாட்டுக்கு வசதிகளை வழங்குதல், மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் மத்தியில் ஒருங்கிணைப்பு மற்றும் மாகாண சபைகளின் மனிதவள அபிவிருத்தியின் மூலம் பயனுள்ள மற்றும் வினைத்திறன்மிக்க மாகாண சபை முறைமையொன்றை ஏற்படுத்தல்.

**2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டின் இறுதி வரையிலான முன்னேற்றம்.**

a) மாண்புமிகு பிரதமர் அவர்களின் தலைமையில் 2023 ஆம் ஆண்டு மாகாண ஆளுநர்களுடன் 06 சுற்றுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

b) கௌரவ பிரதமர் அவர்களின் தலைமையில், நாட்டின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக மாகாண பிரதம செயலாளர்களுடன் 06 சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

c) காணி சுவீகரிப்பு தொடர்பான அனைத்து மாகாணங்களிலிருந்தும் 41 கோரிக்கைகள் மாகாண பிரதம செயலாளர்களின் பரிந்துரையுடன் இந்த அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் 31 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் (2022 இல் செய்யப்பட்ட முன்மொழிவு உட்பட) மேலதிக நடவடிக்கைகளுக்காக காணி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன. குறைபாடுகளுடன் அனுப்பப்பட்ட 11 விண்ணப்பங்கள் குறைபாடுகளை சரிசெய்து அவற்றை மீண்டும் அனுப்புமாறு மாகாண பிரதம செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவு 04 இன் பிரகாரம் ஆட்சேபனை விசாரணைகளை மேற்கொள்வதற்கு மாகாண பிரதம செயலாளரின் பரிந்துரைகளுடன் 07 அதிகாரிகளை நியமிப்பதற்கும் காணி அமைச்சுக்கு ஆட்சேபனைகள் அற்ற 05 பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 5 முன்மொழிவுகள் உட்பட ஆய்வு அறிக்கைகள் 12 இன் பரிந்துரைகளை காணி அமைச்சுக்கு அனுப்பவதற்கும் காணி கையகப்படுத்துதல் நோக்கங்களின் 04 திருத்தங்களுக்கான பரிந்துரைகள் காணி அமைச்சுக்கு அனுப்புவதற்கும் 38(அ) இடைக்கால உத்தரவின் கீழ் காணி சுவீகரிப்பு தொடர்பான 11 பரிந்துரைகள் காணி அமைச்சுக்கு அனுப்புவதற்கும் பிரிவு 50 (1) இன் கீழ் 06 கைவிடுதல்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

d) மாகாண சபைகளுக்குத் தேவையான 03 அமைச்சரவைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- உள்ளூராட்சி மன்றங்களில் வீதி வரைபட அமைப்பை தயாரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம்.

• உள்ளூராட்சி நிறுவனங்களில் பணிபுரியும் தற்காலிக, அமய, பதில், ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம்.

• சப்பிரகமுவ மாகாணத்தில் ஆங்கில ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் முன்னோடித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தத்திற்கான அமைச்சரவைப் பத்திரம்.

e) உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான சொத்துகளின் மதிப்பீட்டை முறைப்படுத்தி உள்ளூராட்சி மன்றங்களுக்கு வரவேண்டிய வருவாயை அதிகரிக்கும் வகையில் மதிப்பீட்டுத் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி ஆணையர்களை ஒருங்கிணைத்து, உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான சொத்துகளின் மதிப்பீட்டை விரைவுபடுத்துவதற்கான முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது.

CDLG கருத்திட்டம் தொடர்பில், வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் சொத்துக்கள் மற்றும் மதிப்பீடுகளை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னூட்டல்களை மேற்கொள்ளும் பொருட்டு உள்ளூராட்சி ஆணையாளர்களுடன் அவ்வப்போது சந்திப்புகள் நடத்தப்படுகின்றன.

f) மாகாண அரச சேவையில் 45 வயதுக்கு மேற்பட்ட நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய உரிமை வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட அமைச்சுப் பத்திரம் கௌரவ பிரதமர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஆகியோரின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

g) திருத்தப்பட்ட 22/99 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் மாகாண சபைகளின் ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக மாகாணங்களிலிருந்து பெறப்பட்ட 109 விண்ணப்பங்களில், 16 குறைபாடுள்ள விண்ணப்பங்கள் மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், 94 விண்ணப்பங்கள் சரியாக அனுப்பப்பட்டிருந்தன. (2022 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 01 விண்ணப்பம் உட்பட) அவை அனைத்தும் சிபாரிசு செய்யப்பட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டன.

h) உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்காய்வுப் பணிகளை வலுப்படுத்தும் வகையில் உள்ளக கணக்காய்வு பிரிவுகளை நிறுவுவது தொடர்பாக மாகாணங்களில் இருந்து ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் தேவையான பதவிகளை உருவாக்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதற்கமைய தற்போது இல்லாதொழிக்கப்பட வேண்டிய பதவிகள் கண்டறியப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

i) பாராளுமன்றத்தால் குறிப்பிடப்பட்ட 04 பாராளுமன்ற வினாக்களில் 03 பாராளுமன்ற வினாக்களுக்கு மாகாண பிரதம செயலாளர்களிடம் இருந்து தகவல்கள் பெறப்பட்டு பதில்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் பதிலளிக்க வேண்டிய ஒரு வினாவுக்கு மாகாண பிரதம செயலாளர்களிடமிருந்து தகவல் கோரப்பட்டுள்ளது.

j) 2023 ஆம் ஆண்டில் ஆலோசனைக் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 04 முன்மொழிவுகள் மற்றும் 2022 இல் ஆலோசனைக் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒரு முன்மொழிவு தொடர்பாக, மாகாண பிரதம செயலாளர்களிமிருந்து தகவல்கள் கோரப்பட்டு ஆலோசனைக் குழுவுக்கு பதில்கள் அனுப்பப்பட்டுள்ளன.

k) பொது மனுக் குழுவினால் அனுப்பப்பட்ட 10 பொது மனுக்களில், 05 மனுக்களுக்கான பரிந்துரைகள் இந்த அமைச்சினால் பொது மனுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் பிற பொது மனுக்களுக்கு பிரதம செயலாளர்களிடமிருந்து அவதானிப்புகளும் பரிந்துரைகளும் கோரப்பட்டுள்ளன.

l) மாகாண சபைகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், ஏனைய அமைச்சு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களால் அனுப்பப்பட்ட 185 முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

m) மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்ள முடியுமான தகவல் காலாண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுகின்றது.

### 2.6.5 சட்டப் பிரிவு

#### 1. நோக்கம்

அமைச்சின் சட்டப் பிரிவு நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் இலங்கையில் பயனுள்ள மற்றும் வினைத்திறன்மிக்க ஜனரஞ்சக உள்ளூராட்சி நிர்வாகத்தைப் பேணுவதற்கும் சமத்துவத்துடன் கூடிய நிலையான மனித அபிவிருத்தியை அடைவதற்கும் பொது மக்களுக்கு உதவுவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

#### 2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரையிலான முன்னேற்றம்.

**a) அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கை தீர்மானத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி தேர்தல் கட்டளைச் சட்டத்தை திருத்துதல்.**

உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்காக வேட்பு மனுக்களில் 25% இளைஞர் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் இரண்டு தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. தேர்தல் மற்றும் வாக்கெடுப்பு கட்டமைப்பில் மற்றும் சட்ட விதிகளில் மறுசீரமைப்புக்களை அடையாளம் காண்பதற்கும் அந்த வகையில் தேவையான திருத்தங்களுக்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கும் பாராளுமன்ற விசேட குழுவின் சிபாரிசின் அடிப்படையில் (பக்கம் 11) சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான சட்டமூலம் தற்போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**b) உள்ளூராட்சி மன்றங்களின் சுயமாக உருவாக்கப்படும் வருமானத்தில் அதிக சதவீதத்தை உள்ளடக்கியுள்ள நீதிமன்ற அபராதம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் நேரடியாக உள்ளூராட்சி மன்றக் கணக்கிற்கு மாற்றப்படும் வகையில் மாகாண சபைச் சட்டத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களை நிறைவு செய்தல்.**

இச்சட்டத்தில் திருத்தம் நிறைவேற்றப்பட்டு மாகாண சபைகள் இல்லாத காரணத்தினால் அதனை நேரடியாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு சட்டமா அதிபரின் அனுமதி கோரி அமைச்சரவைப் பத்திரமும் அமைச்சரவைக் குறிப்பும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில், மாகாணசபைகள் ஸ்தாபிக்கப்படும் வரையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இது தொடர்பில் ஏதேனும் நடவடிக்கை எடுக்க முடியுமா என சட்டமா அதிபருக்கு 2023.11.02 ஆம் திகதி கடிதம் அனுப்பியுள்ள நிலையில், அந்தக் கடிதம் தொடர்பில் பதில் கிடைக்காத காரணத்தினால் 2024.01.19 ஆம் திகதி மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**c) உள்ளூராட்சி மன்றங்கங அமைப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கணக்கியல் முறை தொடர்பான விதிகளை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம்.**

உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒரே மாதிரியான புதிய கணக்கியல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், மாகாண சபைகளுக்கு தொழில்நுட்ப அறிவு இல்லாததால், மேல் மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கு மாத்திரம் அந்த சபைகளின் தற்போதைய விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் உப சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டன. அந்த கணக்குகளுக்கு. ஆனால், அந்த விதிகளில் உள்ள சில பிழைகள் குறித்து, பார்லிமென்ட் ஆலோசனைக் குழுவில் கேட்கப்பட்ட கேள்விகளை கருத்தில் கொண்டு, அமைச்சகத்தின் சட்டத்துறை தலையிட்டு, அதற்கான விதிகள், விதிமுறைகள் மற்றும் துணை விதிகளை புதுப்பிக்கும் பணியை முடித்து, அதற்கான அறிக்கையை ஒப்படைத்தது. 20.12.2023 அன்று அமைச்சின் செயலாளர்.



ம

ன்றங்களுக்கு ஒரே மாதிரியான புதிய கணக்கியல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், அந்த சபைகளின் தற்போதைய விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் துணை விதிகள் மற்றும் கணக்கியல் நடவடிக்கைகளுக்கு மாகாண சபைகளில் காணப்பட்ட தொழில்நுட்ப அறிவு குறைபாட்டின் காரணமாக, மேல் மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கு மாத்திரம் இற்றைப்படுத்தப்பட்டது. எனினும், அந்த விதிகளில் சில பிழைகள் குறித்து பாராளுமன்ற ஆலோசனைக் குழுவில் எழுப்பப்பட்ட வினாக்களைக் கருத்தில் கொண்டு, அமைச்சின் சட்டப் பிரிவு தலையிட்டு, அதற்கான விதிகள், விதிமுறைகள் மற்றும் துணைச் சட்டங்களைப் புதுப்பிக்கும் பணிகளை நிறைவுசெய்து அதற்கான அறிக்கையை 2023.12.20 ஆம் திகதி அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

**d) உள்ளூராட்சி நிறுவனங்களின் துணை விதிகளை இற்றைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**

UNDP இன் ஒத்துழைப்புடன், CDLG கருத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட பல பகுதிகளுக்கான துணை விதிகளைத் தயாரிக்கும் பணி அமைச்சின் சட்டப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் நிறைவடைந்து, அது தொடர்பான அறிக்கை 20.12.2023.12.20 ஆம் திகதி அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



**e) அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக்கு அமைய உத்தேச புதிய உள்ளூராட்சி மன்றங்களை நிறுவும் வர்த்தமானி அறிவித்தல்களை தயாரித்தல்.**

வவுனியா, களுத்துறை, கேகாலை, புத்தளம், திருகோணமலை ஆகிய பிரதான நகரங்களுக்கு 5 புதிய மாநகர சபைகளும் களுத்துறை, திருகோணமலை மற்றும் பட்டினமும் சூழலும் ஆகிய பிரதேசங்களுக்கு 2 பிரதேச சபைகளும் 2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுக்களை சமர்ப்பிக்கும் வகையில் பொருத்தமான வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

**f) புதிய உள்ளூராட்சி மன்றங்கள் நிறுவப்பட்ட பின்னர் வட்டாரங்களின் எல்லை நிர்ணயப் பணிகளுக்கு ஏற்புடைய நடவடிக்கைகள்.**

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட 7 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான

பிரதேச எல்லை நிர்ணயம் அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

**g) நீர்வெறுப்பு கட்டளைச் சட்டத்தின் திருத்தப் பணிகளை நிறைவு செய்தல்.**

இறுதி சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 2023.09.08 ஆம் திகதி சட்ட வரைஞரிடம் அனுப்பி வைக்கப்பட்டு, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலம் 2024.01.24 ஆம் திகதி அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

❖ **சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் ஏனைய முக்கிய கடமைகள்**

1. அரசாங்கத்தின் கொள்கை தீர்மானங்களின் அடிப்படையில் உள்ளூராட்சிப் பிரிவுகளின் எல்லை நிர்ணயத்திற்காக நியமிக்கப்பட்ட தேசியக் குழுவின் பணிகளை ஒருங்கிணைத்தல்.
2. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தாமதமாவதால் சிரமத்திற்கு உள்ளாகும் அரச அதிகாரிகளுக்கு நிவாரணம் வழங்கி அவர்களை வேறு பணியிடங்களுக்கு முன்னளிப்புச் செய்து மீண்டும் பணியில் சேர வழிவகை செய்தல்.



## 2.6.6 நிர்வாக மற்றும் பயிற்சிப் பிரிவு

### 1. நோக்கம்

மனித வள முகாமைத்துவம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் திறன்களைக் கொண்ட அதிகாரிகள் குழுவை உருவாக்குதல் மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் உத்தேச இலக்குகளை அடைவதற்கு தற்போதுள்ள பௌதீக வளங்களை திறம்பட பயன்படுத்துதல்.

### 2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டின் இறுதி வரையிலான முன்னேற்றம்.

| தொ. இல | செயற்பாடு / செலவினம் | தேறிய ஒதுக்கீடு (ரூ) | செலவு செய்யப்பட்ட தொகை (ரூ) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 01 | இயந்திர பராமரிப்பு (இராஜாங்க அமைச்சு மற்றும் அமைச்சு) | 3,470,000.00 | 3,359,187.25 | 96% |
| 02 | வாகன பராமரிப்பு (இராஜாங்க அமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சு) | 29,640,445.00 | 19,101,752.91 | 80% |
| 03 | உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி (இராஜாங்க அமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சு) | 500,000.00 | 496,982.00 | 99% |
| 04 | எரிபொருள் வழங்கல் (இராஜாங்க அமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சு) | 29,280,000.00 | 27,865,251.57 | 98% |
| 05 | கட்டிட பராமரிப்பு (இராஜாங்க அமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சு) | 4,841,000.00 | 390,635.00 | 8% |

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் செலுத்துதல் (இராஜாங்க அமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சு) | 14,510,000.00 | 13,610,480.04 | 93% |
| 07 | அஞ்சல் மற்றும் தகவல் தொடர்பு கட்டணங்கள் (இராஜாங்க அமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சு) | 6,206,000.00 | 4,780,179.53 | 77% |
| 08 | வெளிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்<br>சுகாதார நலன் சேவைகள் ▼<br>பாதுகாப்புச் சேவைகள் ▼ | பொதுவான செலவினத் தலைப்பின் ஊடக கொடுப்பனவு செய்யப்படும் | 8,164,410.92<br>3,982,039.50 | பொதுவான செலவினத் தலைப்பின் ஊடக கொடுப்பனவு செய்யப்படும் |
| 09 | ஊழியர்களின் சம்பள உயர்வு, பதவி உயர்வு/ஓய்வு | - | - | 100% |
| 10 | பணியாளர்கள் தொடர்பான கடமைகள் | - | - | இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்கள் = 22<br>இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள் = 21 |
| 12 | அமைச்சரின் பணியாளர் நியமனங்கள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள | - | - | 100% |
| 12 | அதிகாரிகளின் தனிப்பட்ட நலன் மற்றும் குறைகளை நிர்வகித்தல் | - | - | காணப்படும் எல்லைகளுக்குள் உச்ச அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| 13 | பாராளுமன்ற கேள்விகளுக்கு பதில் அளித்தல் | - | - | 100% |
| 14 | அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல் | - | - | 100% |

❖ **தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவு**

**1. நோக்கம்**

உள்ளூராட்சி நிறுவனங்களால் வழங்கப்படும் பொதுச் சேவைகளை இணைய வழியில் வழங்குவதன் மூலம் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமைச்சின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி காகிதமற்ற சூழலைப் பேணுதல்.

**2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரையிலான முன்னேற்றம்**

**a) உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் சேவைகளுக்கு தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட Empowering Local Government - A Comprehensive Digitalization Project for Local Government கருத்திட்டம்**

உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் சேவைகளுக்கான தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் உள்ள

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இணையவழி முறையின் மூலம் பணம் செலுத்தும் மென்பொருளை அறிமுகப்படுத்தும் நிகழ்வு 2023.12.23 ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் கௌரவ ஜானக வக்கும்புர தலைமையில் அக்குறணையில் பிரதேச சபை வளாகத்தில் நடைபெற்றது.

சப்பிரகமுவ மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் சேவைகளுக்கான தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் இணையவழி முறையின் மூலம் பணம் செலுத்தும் அறிமுக நிகழ்ச்சி 2023.12.29 ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தலைமையில் இரத்தினபுரி நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

**b) வன்பொருள் மற்றும் மென்பொருள் பிரச்சினைகள் உள்ளிட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு உதவுதல்.**

வன்பொருள் மற்றும் மென்பொருள் பிரச்சினைகளுடன் பராமரிக்கப்படும் கணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்களின் printers எண்ணிக்கை 100 ஆகும். அதன் மூலம் அரசாங்கத்திற்கு மீதமாகிய தொகை ரூ.1,081,800.00 ஆகும்.

**c) அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்**

தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் திகதிகளின் அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.




**d) அமைச்சின் முகநூல் பக்கத்தை இற்றைப்படுத்தல்**

தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் திகதிகளின் அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.




**e) அமைச்சின் ICTA இல் LGN 2.0 கருத்திட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் மேற்பார்வை.**

LGN 2.0 இன் தரவேற்றம் மற்றும் தரவிறக்க வேகத்தை 10 mbps இலிருந்து 20 mbps வரை அதிகரித்தல்.

**f) அமைச்சின் ஆளணி உத்தியோகத்தர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.**

2023.08.11 ஆம் திகதி மற்றும் 2023.09.22 ஆம் திகதி ஆளணி உத்தியோகத்தர்களுக்கு அலுவலக வேலைகளை இலகுபடுத்துவதற்கு தகவல் தொழில்நுட்ப பாவனை மற்றும் இணையத்தளப் பாவனைப் பற்றிய செயலமர்வு SLIDA நிறுவனத்தில் நடைப்பெற்றது.

**g) அமைச்சில் காகிதப் பாவனை அற்ற சூழலொன்றை உருவாக்குதல்.**

பதிவேட்டறைக்கு மென்பொருள் தொகுதியொன்றை தயாரித்து மேல் நடவடிக்கைக்காக நிர்வாகப் பிரிவுக்கு ஒப்படைத்தல்.

**h) Zoom கூட்டங்களுக்கு தொடர்புகளை தயாரித்தல் மற்றும் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ளல்.**

தயாரிக்கப்பட்ட zoom தொடர்புகள் = 196

கலந்துகொண்ட zoom / பௌதீக கூட்டங்களின் எண்ணிக்கை = 201

## 2.6.7. நிதிப் பிரிவு

### 1. நோக்கம்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியை அடைவதற்குத் தேவையான நிதி வசதிகளை வழங்குதல் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதிகளை திறம்படவும் திறமையாகவும் பயன்படுத்தி பொதுப் பணம் தொடர்பில் வெளிப்படைத்தன்மையை கையாளுதல்.

## 2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரையிலான முன்னேற்றம்

**நிதிச் செயலாற்றுகை -2023**

ரூ.மில்.

| நிகழ்ச்சித்திட்டம் | 2023 திருத்திய வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு | நிதி முன்னேற்றம் |
|---|---|---|
| **மீண்டுவரும் செலவினங்கள்** | **385.0** | **285.3** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 171.0 | 140.9 |
| வேறு மீண்டுவரும் செலவினங்கள் | | |
| தொழிற்பாட்டு | 159.0 | 121.9 |
| அபிவிருத்தி | 55.0 | 22.5 |
| **மூலதனச் செலவினம்** | **31,190.0** | **23,177.7** |
| **தொழிற்பாட்டு** | 65.0 | 24.6 |
| **அபிவிருத்தி** | | |
| வேறு மூலதனச் செலவினங்கள் | 1,555.0 | 1,500.0 |
| ஊள்நாட்டு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 842.1 | 335.1 |
| வெளிநாட்டு உதவி பெறும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் | 28,727.9 | 21,318.1 |
| **முழு மொத்தம்** | **31,575.0** | **23,463.0** |

**மாகாண சபைகளுக்கான பங்களிப்பு**

ரூ.மில்

| நிகழ்ச்சித்திட்டம் | 2023 திருத்திய வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு | நிதி முன்னேற்றம் |
|---|---|---|
| **மீண்டுவரும் செலவினங்கள்** | **379,250** | **346,870** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 379,250 | 346,870 |
| **மூலதனச் செலவினம்** | **17,000** | **15,958** |
| வெளிநாட்டு உதவி பெறும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் | 17,000.00 | 15,957.77 |
| **முழு மொத்தம்** | **396,250** | **362,828** |

## 2.6.8. செலவின மீளாய்வுப் பிரிவு

### 1. நோக்கம்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நிதி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.

### 2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரையிலான முன்னேற்றம்

a) அதற்கிணங்க, 2023 ஆம் ஆண்டில், மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏற்பாடுகள் மற்றும் மாகாண சபை வருமானங்கள் மதிப்பீட்டு செலவின வரம்புகளுக்கு உட்பட்டு அந்த நிறுவனங்களால் செலவு செய்யப்படும் முறை தொடர்ந்தும் மதிப்பீடு செய்யப்படும். அதற்கமைய, 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையில் மாதாந்த மாகாண சபையின் செயலாற்றுகை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரையிலான மாகாண சபையின் நிதி செயலாற்றுகை காலாண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

b) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பில் பராமரிக்கப்படும் தரவுத் தளம் 2023 ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

c) உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட தரவுத் தளம் 2023 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டது. மேலும் அந்தத் தகவலைப் பகுப்பாய்வு செய்த பின்னர், 2022 ஆண்டு அறிக்கை மற்றும் 2023 ஆம் ஆண்டின் அரையாண்டு அறிக்கை உள்நாட்டு நிதிச் செயல்பாடு தொடர்பானது. அந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அனைத்து உள்ளூராட்சி ஆணையர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பொது வசதிகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.




**உள்ளூராட்சி மன்றங்களில் 2023 (அரையாண்டு) உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - மாகாண அடிப்படையில்**

**ரூ.மில்.**

| மாகாணம் | உண்மை வருமானம் | உண்மைச் செலவினம் | சதவீதம் |
|---|---|---|---|
| மேல் | 20,474 | 12,914 | 63% |
| மத்திய | 4,137 | 3,408 | 82% |
| தென் | 3,526 | 2,763 | 78% |
| வடக்க | 2,751 | 1,623 | 59% |
| வடமேல் | 3,437 | 2,566 | 75% |
| வடமத்திய | 1,180 | 1,075 | 91% |
| ஊவா | 1,451 | 1,294 | 89% |
| சப்பிரகமுவ | 1,670 | 1,371 | 82% |
| கிழக்கு | 2,352 | 1,964 | 83% |
| **மொத்தம்** | **40,978** | **28,978** | **71%** |




d) இந்த அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் செயற்படும் வெளிநாட்டு உதவித் திட்டங்களின் நிதிச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் மாதாந்தம் பெறப்பட்டு, மாகாண சபையின் நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

e) மாகாண சபைகளின் நிதி விடயங்களை ஆராயும் நோக்கத்துடன் கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல், வங்கி கணக்கிணக்கங்களைத் தயாரித்தல், முற்பணக் கணக்குகளை ஒப்பீடு செய்தல், கட்டுநிதிக் கணக்குகளை ஒப்பிடுதல் போன்றவை. பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட படிவங்கள் மூலம் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரையில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

f) அனைத்து மாகாண சபைகளிலும் அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக மாகாண சபை மட்டத்தில் மாதாந்த மதிப்பீடுகள் பெறப்பட்டு தேவையான பரிந்துரைகள் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டு 2023 டிசம்பர் வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

g) மாகாண சபைகள் மற்றும் பொது திறைசேரியை ஒருங்கிணைத்து, மாகாண சபை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை போசணை உணவுத் திட்டத்திற்கான கொடுப்பனவு ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

h) தரவுப் பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் அலகுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களின் நிதி மற்றும் பௌதீக தகவலகள் தொடர்பான முகாமைத்துவ தகவல் அமைப்பை ஆய்வு செய்தல்.

### 2.6.9. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

**1. நோக்கம்**

அமைச்சினால் உத்தேசிக்கப்படும் நோக்கங்களை அடைவதில் பௌதீக மற்றும் மனித வளங்களை சிறப்பாக நிர்வகிப்பதற்கு பயனுள்ள உள்ளக கட்டுப்பாடுகள் உள்ளதா என்பதை மதிப்பீடு செய்வதற்கும் அந்த கட்டுப்பாடுகளின் மதிப்பு கூட்டலை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

**2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரையிலான முன்னேற்றம்**

- ஆரம்ப அறிக்கையை சமர்ப்பித்தல்.
- திருத்தப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தை சமர்ப்பித்தல்.
- வருடாந்த செயல் திட்டத்தின்படி 2023.12.31 ஆம் திகதி வரை மாதாந்த முன்னேற்ற அறிக்கை.
- 03முகாமைத்துவ கணக்காய்வுக் குழு கூட்டங்களை நடத்துதல்.

- 03 கருத்திட்ட உள்ளக கணக்காய்வு மீளாய்வுக் குழு கூட்டங்களை நடத்துதல்.
- அமைச்சின் மற்றும் வெளிநாட்டு திட்டங்கள் தொடர்பான காலாண்டு அறிக்கைகளை (I, II மற்றும் III) சமர்ப்பித்தல்.
- அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட 01 விசேட கணக்காய்வுகளை மேற்கொள்வது. (இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம் தொடர்பாக)
- உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின்படி கணக்காய்வுகளை நடத்துதல்

| கணக்காய்வுத் துறை | முன்னேற்றம் % |
|---|---|
| 1. அமைச்சின் வாகன நிர்வாகம் தொடர்பான கணக்காய்வு | 100 |
| 2. உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான கிராமப்புற நூலகங்களை மேம்படுத்துவது மற்றும் நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தற்போதுள்ள நூலகங்களை மின்னணு நூலகங்களாக மாற்றுவது குறித்த கணக்காய்வு. | 100 |
| 3. பொதுக் கணக்குக் குழு நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவம் மற்றும் ஒருங்கிணைப்பை உள்ளடக்கிய கணக்காய்வு | 100 |
| 4. சம்பள நடவடிக்கைகளின் உள்ளக கணக்காய்வு | 100 |
| 5. கொடுப்பனவு வவுச்சர் பற்றிய கணக்காய்வு (ஜனவரி - ஏப்ரல்) | 100 |
| 6. உள்ளூராட்சி மன்றங்களுக்கு திண்மக் கழிவு முகாமைத்துவம் குறித்த நவீன தொழில்நுட்ப உதவி மற்றும் 3R வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் பயன்படுத்துதல், பயிற்சிப் பட்டறைகளை அமைப்பதற்கான கணக்காய்வு ஆகியவற்றுக்கான ஒத்துழைப்பு | 100 |
| 7. மாகாண வீதி அபிவிருத்தி திட்டம் பற்றிய உள்ளக கணக்காய்வு | 100 |
| 8. புரநெகும கருத்திட்டத்தின் உள்ளக கணக்காய்வு | 100 |
| 9. காப்பகங்களின் பராமரிப்பு தொடர்பான கணக்காய்வு | 100 |
| 10. குறைந்த வருமானம் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்துவது தொடர்பாக வருவாயை அதிகரிப்பதற்கான திட்டங்களை அடையாளம் கண்டு செயல்படுத்துவது குறித்த கணக்காய்வு. | 100 |
| 11. குறைந்த வருமானம் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பழைய வாகனங்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புக்கான தொடர்ச்சியான செலவினங்களின் கணக்காய்வு, இது பொது சேவைகளின் தினசரி வழங்கலைப் பாதிக்கின்றது. | 100 |
| 12. உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிய கணக்கு முறைமை அறிமுகம் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட வாகனங்களின் பரிமாற்றம் / விபத்துக்கள் தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய கணக்காய்வு. | 100 |
| 13. நிதி முகாமைத்துவம் தொடர்பான கணக்காய்வு | 100 |
| 14. பிராந்திய அபிவிருத்தி உதவி கருத்திட்டத்தின் கணக்காய்வு | 100 |
| 15. பொதுக் கல்வி புத்தாக்க கருத்திட்டத்தின் கணக்காய்வு | 100 |
| 16. கிராமப்புற பாலங்கள் கருத்திட்டத்தின் கணக்காய்வு | 100 |
| 16. கணக்காய்வுப் பிரிவு | 100 |
| 17. கட்டிட பராமரிப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளின் கணக்காய்வு | 100 |
| 18. அலுவலக உபகரணங்கள் மற்றும் நுகர்வுப்பொருட்கள் கொள்முதல் தொடர்பான கணக்காய்வு | 100 |
| 19. கொடுப்பனவு வவுச்சர்கள் பற்றிய கணக்காய்வு (மே - ஆகஸ்ட்) | 100 |

| கணக்காய்வுத் துறை | முன்னேற்றம் % |
|---|---|
| 20. அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பி கணக்கு தொடர்பான கணக்காய்வு | 100 |
| 21. உள்நாட்டுக் கடன் மற்றும் மேம்பாட்டு நிதியின் கணக்காய்வு | 100 |
| 22. பாதுகாப்பு சேவைகள் மற்றும் துப்புரவு சேவைகள் தொடர்பான கணக்காய்வு | 100 |
| 23. மாகாணங்களுக்கிடையிலான விடய நிரல் ஒருங்கிணைப்பு மாநாட்டை நடாத்துதல், மாகாண சபைகளின் ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் பொதுமக்கள் செய்யும் முறைப்பாடுகள் தொடர்பில் கணக்காய்வு செய்தல். | 100 |
| 24. புரநெகும கருத்திட்டத்தின் கணக்காய்வு | 100 |
| 25. மாகாண வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கணக்காய்வு | 100 |
| 26. கிராமப்புற பாலங்கள் கருத்திட்டத்தின் கணக்காய்வு | * |
| 26. ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான கணக்காய்வு | 100 |
| 27. *2020-2023 ஆண்டுகளில், முறையான ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | 100 |
| 28. பணியாளர் நிர்வாகத்தின் கீழ் உள்ள அரச உத்தியோகத்தர்களின் நியமனம் / பதவி உயர்வு மற்றும் உத்தியோகத்தர்களுக்கான கடமைப் பட்டியல்களை வழங்குதல் தொடர்பான உள்ளக கணக்காய்வு. | 100 |
| 29. விபத்துக்கள் மற்றும் வாகன துஷ்பிரயோகம் பற்றிய கணக்காய்வு | 100 |
| 30. பிராந்திய அபிவிருத்தி உதவித் திட்டம் பற்றிய கணக்காய்வு | 100 |
| 31. பொதுக் கல்வி புத்தாக்க கருத்திட்டம் பற்றிய கணக்காய்வு | 99 |

## 2.6.10. திட்டமிடல் பிரிவு

**1. நோக்கம்**

அமைச்சின் நோக்கங்களை அடைவது தொடர்பான திட்டங்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் மூலோபாயங்களைத் தயாரித்தல், அவற்றைச் செயல்படுத்தல், அத்துடன் சமூக - பொருளாதார மேம்பாட்டிற்கு உதவியாக இருக்கும் கொள்கைகள் / மூலோபாயங்கள் / திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல், நேரடியாக மதிப்பீடு செய்தல் மற்றும் அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

**2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரையிலான முன்னேற்றம்**

| செயற்பாடு | முன்னேற்றம் |
|---|---|
| 1. வருடாந்த செயல்திட்டத்தை தயாரித்தல் | 2023 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு தேவைக்கேற்ப புதுப்பிக்கப்பட்டுள்ளது. |
| | • செயல் திட்டத்தின் பிரகாரம் அந்தந்த பிரிவுகள் மற்றும் நிறுவனங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் மாதந்தோறும் பெறப்பட்டு, உரிய நிறுவனங்களுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

| செயற்பாடு | முன்னேற்றம் |
|---|---|
| 2. செயல்திறன் அறிக்கை தயாரித்தல் | 2022 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 3. 2024 வரவுசெலவுத்திட்ட குழு நிலை விவாதத்திற்கான முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல். | 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்காக அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 4. நிறுவனத்தின் பெறுபேற்று கட்டமைப்பின் அபிவிருத்தி. | அமைச்சின் நிறுவன பெறுபேற்று கட்டமைப்பு தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது. |
| 5. நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல். | அமைச்சின் வருடாந்த செயற்திட்டத்தின் பிரகாரம், நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. |
| 6. UNDP மற்றும் ஆசிய அபிவிருத்தி மன்றத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியுடன் CDLG திட்டத்தின் கீழ் அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்தல். | • திட்டமிடல் அலகு மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளின் கீழ் ஆதார அடிப்படையிலான கொள்கைகளை உருவாக்குவதற்கான தரவு பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் அலகு நிறுவும் பணி நடைப்பெருகின்றது.<br>• அமைச்சினால் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களின் பிந்தைய மதிப்பீட்டை நடத்துதல்.<br>• ஜப்பானிய மொழிப் பயிற்சித் திட்டங்களைத் தொடராக நடத்துதல் |
| **7.** புதிய வெளிநாட்டு திட்டங்களை ஆரம்பித்தல். | • Urban Project Preparatory Facility Project (UPPF)<br>• Capacity Building for Sustainable Management of Rural Water Supply Schemes under PS Managing Model (CapWass)<br>SEMAUL Project |

## 2.6.11. கருத்திட்ட மேற்பார்வைப் பிரிவு

### 1. நோக்கம்

பல்வேறு சர்வதேச நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் கடன்கள் மற்றும் மானியங்களின் கீழ் செயற்படுத்தப்படும் வெளிநாட்டு உதவித் திட்டங்களைத் திட்ட நோக்கங்களை அடைவதற்கு முறையான மேற்பார்வையுடன் வழிநடாத்தல்.

### 2. 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரையிலான முன்னேற்றம்

1. 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உதவித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட 44,526.00 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, அந்தந்த கருத்திட்டத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு வழிநடாத்தப்பட்டுள்ளதோடு, டிசம்பர் மாத இறுதிக்குள் 33,309.62 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளது.

2. பின்வரும் அனைத்து கருத்திட்டங்கள் தொடர்பாக கருத்திட்ட செயலாக்கம் மற்றும் கருத்திட்ட கண்காணிப்பு செயற்பாடுகள் தொடர்பிலான ஒருங்கிணைப்பு.

a) உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் துறைசார் திட்டம் (புரநெகும)

b) கிராமப்புற பாலம் திட்டம் - கட்டம் 5

c) * பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவத் திட்டம்
* பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்டம் (பகுதி 2)

* பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்டம் (பகுதி 3)

d) மாகாண வீதிகள் அபிவிருத்தி திட்டம்

e) அபிவிருத்தி அடைந்து வரும் பிராந்தியங்களில் கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

f) ஆரம்ப சுகாதார அமைப்பு வலுவூட்டல் திட்டம்

g) பொதுக் கல்வி புத்தாக்க திட்டம்

h) பிராந்திய அபிவிருத்தி உதவித் திட்டம்

3. ஆரம்ப சுகாதார அமைப்பு வலுவூட்டல் கருத்திட்டம் மற்றும் பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தின் மாகாண கூறுகள் தொடர்பான அனைத்து கருத்திட்டப் பணிகளின் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4. வெளிநாட்டு உதவித் திட்டங்களில் ஆட்சேர்ப்பு, சேவை நீட்டிப்பு உள்ளிட்ட பிற திட்ட நிர்வாக செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அதற்கமைய 2023 ஆம் ஆண்டுக்கான ஆட்சேர்ப்புக்காக சுமார் 3 நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

5. அவற்றில் வெற்றிமாக உள்ள 46 பதவிகளுக்கு புதிய ஆட்சேர்ப்பு நடத்தப்பட்டுள்ளது. மேலும், பணிக்காலம் முடிந்த பதவிகளுக்கு 375 சேவை நீட்டிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 51 பதவிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

6. இந்த அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படும் வெளிநாட்டு உதவித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்களை ஆராய்ந்து, எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்த வருடத்தில் 23 தேசிய வழிநடத்தல் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. எனவே, கருத்திட்டங்களின் சிக்கல்களைத் தீர்க்க உரிய தலையீடுகள் செய்யப்பட்டுள்ளன.

7. “புரநெகும திட்டம், கிராமியப் பாலங்கள் திட்டம், பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத் திட்டம், அபிவிருத்தியடைந்து வரும் பிராந்தியங்களில் கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மாகாண வீதி அபிவிருத்தித் திட்டம் மற்றும் செமாவுல் உண்டன் திட்டம்” ஆகிய திட்டங்களுக்கு 09 அமைச்சரவைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

8. 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை தூதரக கூட்டங்கள் 23 க்கு அனுமதியை (Mission Clearance) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

9. மேலும், இந்த ஆண்டில், வெளிநாட்டு உதவித் திட்டங்களின் கீழ் பணிபுரியும் ஊழியர்களில் 46 உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கான விசாவைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

### 2.6.12. வெளிநாட்டு நிதியங்கள் மீது நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

### 2.6.12.1. புரநெகும (மேலதிக ஒதுக்கீடு) / உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் துறைசார் கருத்திட்டம்

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | 13,790 (USD 67.84 Mn) |
| 2 | கடனுதவி வழங்கும் நிறுவனம் மற்றும் கடன் தொகை (ரூ.மில்) | ஆசிய அபிவிருத்தி வங்கி - 12,190 – (USD 60 Mn) |
| 3 | 3.1 கருத்திட்டக் காலப் பிரிவு (வருடங்கள்) | 6 வருடங்கள் |
| | 3.2 ஆரம்பிக்கப்படும் வருடம் / நிறைவடையும் வருடம் | 2017 / 2023 |
| 4 | கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் (மாகாண / மாவட்ட / உள்ளூராட்சி நிறுவனம் / பிரதேச செயலகப் பிரிவு / கிராம அலுவலர் பிரிவு / கிராமங்கள்) | மேல், வடமேல், தென், ஊவா, மத்திய, வடமத்திய மாகாணங்கள் |

**5. கருத்திட்டத்தின் நோக்கம்**

கருத்திடப் பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்துதல்.

**6. 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (ரூ.மில்.)**

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/ A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீடு | 2022.12.31 திகதிக்கு மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2023 ஒதுக்கீடு | 2023.12.31 திகதிக்கு முன்னேற்றம | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 13,790 | 10,816.32 | 64.57% | 2,575.10 | 2,496.01 | 97% | 13,312,33 | 97% |

**7. 2023.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

| 2022.12.31 திகதிக்கு பௌதீக முன்னேற்றம் (A) | வருடத்தில் முன்னேற்றம் (2023.01.01 முதல் 2023.12.31 வரை) (B) | 2023.12.31 திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) |
|---|---|---|
| 90% | 10% | 100% |

### 2.6.12.2. கிராமியப் பாலங்கள் கருத்திட்டம்

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | ரூ.மில் 14,534 (கட்டம் V) |
| 2 | கடனுதவி வழங்கும் நிறுவனம் மற்றும் கடன் தொகை (ரூ.மில்) | நெதர்லாந்து ரூ.மில்.14,534 (கட்டம் V) |
| 3 | 3.1 கருத்திட்டக் காலப் பிரிவு (வருடங்கள்) | 3 வருடங்கள் (கட்டம்V) |
| | 3.2 ஆரம்பிக்கப்படும் வருடம் / நிறைவடையும் வருடம் | ஜுலை 2021 முதல் ஜுலை 2024 |
| 4 | கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் (மாகாண / மாவட்ட / உள்ளூராட்சி நிறுவனம் / பிரதேச செயலகப் பிரிவு / கிராம அலுவலர் பிரிவு / கிராமங்கள்) | நாடு முழுவதும் |

## 5. கருத்திட்டத்தின் நோக்கங்கள்

1. தேசியப் பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு கிராமப்புற மக்களின் போக்குவரத்து வசதி மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
2. கிராமப்புற மக்களின் பொதுவா பாதுகாப்பை மேம்படுத்துதல்.
3. கிராமப்புறங்களில் இதுவரை பயன்படுத்தப்படாத வளங்களை அதிகபட்சமாக பயன்படுத்துதல்.
4. எளிதான அணுகலை வழங்குவதன் மூலம் தொலைதூர பகுதிகளின் வளர்ச்சியை மேம்படுத்துதல்.

## 6. 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (ரூ.மில்.)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீடு | 2022.12.31 திகதிக்கு மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2023 ஒதுக்கீடு | 2023.12.31 திகதிக்கு முன்னேற்றம | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 14,534 | 2,753.57 | 19% | 4,500 | 6,772.96 | 150% | 9,526.54 | 65% |

## 7. 2023.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

| 2022.12.31 திகதிக்கு பௌதீக முன்னேற்றம் (A) | வருடத்தில் முன்னேற்றம் (2023.01.01 முதல் 2023.12.31 வரை) (B) | 2023.12.31 திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) |
|---|---|---|
| 40 ஒற்றை வழிப்பாதை பாலங்கள் மற்றும் 2 இரட்டை வழி பாலங்கள் ஆகியவற்றில் முதற்கட்ட வடிவமைப்பு பணிகள் செய்யப்பட்டுள்ளன. | 75 ஒற்றை வழிப் பாலங்கள் மற்றும் 43 இரட்டை வழிப் பாலங்களில் பூர்வாங்க திட்டமிடல் பணிகள் செய்யப்பட்டுள்ளன, மேலும் 53 ஒற்றை வழிப் பாலங்கள் மற்றும் 4 இரட்டை வழிப் பாலங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. | 115 ஒற்றை வழிப் பாலங்கள் மற்றும் 45 இரட்டை வழிப் பாலங்களில் பூர்வாங்க திட்டமிடல் பணிகள் செய்யப்பட்டுள்ளன, அதே நேரத்தில் 53 ஒற்றை வழிப் பாலங்கள் மற்றும் 4 இரட்டை வழிப் பாலங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |



பாலம் இலக்கம் 5028, ஹம்பாந்தோட்டை அகுனகொலபெலெஸ்ஸ ஜதுர பாலத்தை நிர்மாணித்தல்



பாலம் இலக்கம் 5013+5014, மாத்தளை இரத்தோட்டை நாரங்கொல் பாலத்தை நிர்மாணித்தல்



பாலம் இலக்கம் 5081, பொலனறுவை திம்புலாகலை எல்வேவெவ பாலத்தை நிர்மாணித்தல்

## 2.6.12.3. பாரி கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டம் ( GCWMP)

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | 14,331 |
| 2 | கடனுதவி வழங்கும் நிறுவனம் மற்றும் கடன் தொகை (ரூ.மில்) | ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) – ரூ.மில். 12,268 |
| 3 | 3.1 கருத்திட்டக் காலப் பிரிவு (வருடங்கள்) | 12 வருடங்கள் |
| | 3.2 ஆரம்பிக்கப்படும் வருடம் / நிறைவடையும் வருடம் | ஏப்ரல் 2010 – ஆகஸ்ட் 2023 |
| 4 | கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் (மாகாண / மாவட்ட / உள்ளூராட்சி நிறுவனம் / பிரதேச செயலகப் பிரிவு / கிராம அலுவலர் பிரிவு / கிராமங்கள்) | • மேல் மாகாணம்<br>• கொழும்பு மாவட்டம்<br>• கொழும்பு மாநகர சபை பிரதேசம் |

**3. கருத்திட்டத்தின் நோக்கம்**

1. கழிவுநீர் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
2. கொழும்பு மாநகர சபையின் நிறுவன மற்றும் செயற்பாட்டுத் திறனை வலுப்படுத்தல்.
3. கொழும்பு மாநகர சபையின் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் செயற்படுத்தும் ஆற்றலை விருத்தி செய்தல்.

**6. 6. 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (ரூ.மில்.)**

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/ A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீடு | 2022.12.31 திகதிக்கு மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2023 ஒதுக்கீடு | 2023.12.31 திகதிக்கு முன்னேற்றம | சதவீதம் (%) | திரண்ட முன்னேற் றம் | சதவீதம் (%) |
| 14,331 | 14,480 | 94% | 1000 | 846.9 | 84.69% | 15,326.9 | * |

* அன்னியச் செலாவணி ரூ.:130/= என குறிப்பிடப்பட்ட காரணத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுடன் ஒப்பிடும் போது திரண்ட செலவினம் அதிகரித்துள்ளது.

**7. 2023.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

| 2022.12.31 திகதிக்கு பௌதீக முன்னேற்றம் (A) | வருடத்தில் முன்னேற்றம் (2023.01.01 முதல் 2023.12.31 வரை) (B) | 2023.12.31 திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) |
|---|---|---|
| 94% | 2% | 96% |

## 2.6.12.4. பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமையை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (GCWWMIIP) (பகுதி 2 மற்றும் 3 )

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | 28180 |
| 2 | கடனுதவி வழங்கும் நிறுவனம் மற்றும் கடன் தொகை (ரூ.மில்) | ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) - 14,225<br>ஐரோப்பிய முதலீட்டு வங்கி (EIB) - 8750 |
| 3 | 3.1 கருத்திட்டக் காலப் பிரிவு (வருடங்கள்) | 06 வருடங்கள் |
| | 3.2 ஆரம்பிக்கப்படும் வருடம் / நிறைவடையும் வருடம் | செப்டம்பர் 2016 – ஒக்டோபர் 2022 |
| 4 | கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் (மாகாண / மாவட்ட / உள்ளூராட்சி நிறுவனம் / பிரதேச செயலகப் பிரிவு / கிராம அலுவலர் பிரிவு / கிராமங்கள்) | • மேல் மாகாணம்<br>• கொழும்பு மாவட்டம்<br>• கொழும்பு மாநகர சபை பிரதேசம் |

**5. கருத்திட்டத்தின் நோக்கங்கள்**

1. கொழும்பு நகரின் தெற்கு நீரேந்துப் பகுதியில் கழிவு நீர் தொகுதியை புனரமைத்து விரிவாக்கம் செய்தல்.
2. கொழும்பு நகரின் தெற்கு நீரேந்துப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டாம் நிலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்.
3. சேவை வழங்குநரின் நிறுவன கட்டமைப்பு மற்றும் திறனை வலுப்படுத்துதல்.

### 6. 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (ரூ.மில்.)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீடு | 2022.12.31 திகதிக்கு மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2023 ஒதுக்கீடு | 2023.12.31 திகதிக்கு முன்னேற்றம | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| GCWWMIIP (கட்டம் 02) 1,227 | 1,626.55 | * | 125 | 124.9 | 0.99% | 1,751.45 | * |
| GCWWMIIP (கட்டம் 03) 26,953 | 5,859.04 | 21.0% | 640.7 | 618 | 96.56% | 6,477 | 24.03% |

- அன்னியச் செலாவணி ரூ.:130/= என குறிப்பிடப்பட்ட காரணத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுடன் ஒப்பிடும் போது திரண்ட செலவினம் அதிகரித்துள்ளது.

### 4. 2023.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

| 2022.12.31 ஆம் திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம் | 2023.12.31 ஆம் திகதிக்கு திரண்ட முன்னேற்றம் |
|---|---|
| GCWWMIIP (Tranche 02) – 57.27%<br>GCWWMIIP (Tranche 03) – 19.25% | GCWWMIIP (Tranche 02) – 57.27%<br>GCWWMIIP (Tranche 03) – 19.25% |

### 2.6.12.5. வளர்ந்துவரும் வலயங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கருத்திட்டம் (RIDEP)

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | உள்நாட்டு = ரூ.மில். 3,474<br>வெளிநாட்டு = யென்.மில். 12,957<br>**மொத்தம் = ரூ.மில். 20,622**<br>(கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் ரூ.1= 0.706 யென் பிரகாரம்) |
| 2 | கடனுதவி வழங்கும் நிறுவனம் மற்றும் கடன் தொகை (ரூ.மில்) | 12,957 JPY |
| 3 | 3.1 கருத்திட்டக் காலப் பிரிவு (வருடங்கள்) | 07 வருடங்கள் |
| | 3.2 ஆரம்பிக்கப்படும் வருடம் / நிறைவடையும் வருடம் | 2017-2024 |
| 4 | கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் (மாகாண / மாவட்ட / உள்ளூராட்சி நிறுவனம் / பிரதேச செயலகப் பிரிவு / கிராம அலுவலர் பிரிவு / கிராமங்கள்) | வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம் |

### 5. கருத்திட்டத்தின் நோக்கங்கள்

1. நேரடியாக வறுமையை ஒழிக்கும் நோக்கில் அதற்கு அடிப்படையான நியதியான அப்பிரதேசங்களில் வாழும் மக்களின் ஆரம்ப வாழ்கைத்தரத்தை மேம்படுத்தல்.
2. பிரதானமாக நெல் அறுவடையை அதிகரிக்கும் பொருட்டு தற்போது செயலற்று இருக்கும் சிறு மற்றும் மத்திய அளவிலான நீர்ப்பாசனங்களை அபிவிருத்தி செய்தல்.

3. நெல் அறுவடை மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகளை கொண்டு செல்வதற்குத் தேவையான கிராமியப் பாதைகளை அபிவிருத்தி செய்தல்.

4. சிறுநீரகம் சார்ந்த நோய்களை கட்டுப்படுத்துவதற்கு உயர் தரத்திலான குடிநீரை வழங்குதல்.

### 6 . 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (ரூ.மில்.)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/ A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீடு | 2022.12. 31 திகதிக்கு மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2023 ஒதுக்கீடு | 2023.12.31 திகதிக்கு முன்னேற்றம | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 20,622.00 | 5,646.35 | 27.38% | 1,971.77 (திருத்திய) | 367.50 (இந்த வருடத்தில் வெளிநாட்டு உதவி FA கிடைக்கப்பெறவில்லை ல உந்நாட்டு நிதி மில். 217.96 சிவில் வேலைகளுக்கு JICA நிதி கிடைத்த பின்னர் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் பயன்படுத்தப்பட்டது.) | 18.63% | 6,013.85 | 29.16% |

வருடாந்த நிதி முன்னேற்றம் காசு அடிப்படையிலாகும்..

### 7. 2023.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

| 2022.12.31 திகதிக்கு பௌதீக முன்னேற்றம் (A) | வருடத்தில் முன்னேற்றம் (2023.01.01 முதல் 2023.12.31 வரை) (B) | 2023.12.31 திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) |
|---|---|---|
| 47.4% | 47.4% முதல் 50.8% வரை (ஒதுக்கீடு 2022 ஏப்ரல் முதல் நிறுத்தப்பட்டுள்ளது.) | 47.4% + (50.8 – 47.4) = 50.8% |

## 2.6.12.6. போக்குவரத்து தொடர்புகள் மற்றும் சொத்து முகாமைத்துவ கருத்திட்டம் - மாகாண வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் (TCAMP- PRDP)

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | 16,424/- |
| 2 | கடனுதவி வழங்கும் நிறுவனம் மற்றும் கடன் தொகை (ரூ.மில்) | உலக வங்கி 16,424/- இலங்கை 200/- |
| 3 | 3.1 கருத்திட்டக் காலப் பிரிவு (வருடங்கள்) | 4 ½ வருடங்கள் |
| | 3.2 ஆரம்பிக்கப்படும் வருடம் / நிறைவடையும் வருடம் | 2019- 2024 |
| 4 | கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் (மாகாண / மாவட்ட / உள்ளூராட்சி நிறுவனம் / பிரதேச செயலகப் பிரிவு / கிராம அலுவலர் பிரிவு / கிராமங்கள்) | 09 மாகாணங்களையும் உள்ளடக்கி |

## 5. கருத்திட்டத்தின் நோக்கங்கள்

1. 09 மாகாணங்களினதும் வீதிகள் 400 கி.மீ. காபட் இட்டு (asphalt) அபிவிருத்தி செய்தல்.
2. மாகாண வீதி அதிகாரி / திணைக்கள ஆளணியின் திறன் விருத்தி.
3. அனைத்து மாகாணங்களினதும் ஆளணியினருக்கு பிரயோசனமான விதத்தில் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பயிற்சி நிலையமாக (Design Centre) மாற்றுதல் மற்றும் தேவையான தரவுகளை சேமித்தல்.

## 6. 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (ரூ.மில்.)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீடு | 2022.12.31 திகதிக்கு மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2023 ஒதுக்கீடு | 2023.12.31 திகதிக்கு முன்னேற்றம | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| FA 16,224 | 9170 | 56.2 % | 5950 | 5216 | 87.9% | 14,386 | 88.6% |
| DF 200 | 115.5 | 57.5 % | 59.89 | 53.2 | 88.8% | 168.2 | 84.1 % |

## 7. 2023.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

| 2022.12.31 திகதிக்கு பௌதீக முன்னேற்றம் (A) | வருடத்தில் முன்னேற்றம் (2023.01.01 முதல் 2023.12.31 வரை) (B) | 2023.12.31 திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) |
|---|---|---|
| 71% | 26% | 97% |


மொரஹெல அமுபிட்டிய வீதி



கரின்கன்பிட்டிய வீதி

## 2.6.12.7. ஆரம்ப சுகாதார சேவைத் தொகுதியை வலுப்படுத்தல் - மாகாண கூறு (PSSP)

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | ரூ.மில். 28,050.15<br>அ.டொ.மில். 134 |
| 2 | கடனுதவி வழங்கும் நிறுவனம் மற்றும் கடன் தொகை (ரூ.மில்) | உலக வங்கி<br>அ.டொ.மில். 200<br>(அ.டொ.மில் 09 தொகை CERC நிதியத்திற்காகப் பெறப்பட்டது) |
| 3 | 3.1 கருத்திட்டக் காலப் பிரிவு (வருடங்கள்) | 05 |
| | 3.2 ஆரம்பிக்கப்படும் வருடம் / நிறைவடையும் வருடம் | 2018-2024 |
| 4 | கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் (மாகாண / மாவட்ட / உள்ளுராட்சி நிறுவனம் / பிரதேச செயலகப் பிரிவு / கிராம அலுவலர் பிரிவு / கிராமங்கள்) | இலங்கையின் அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களை உள்ளடக்கி நடைமுறைப்படுத்தப்பட்டது. |

**5. கருத்திட்டத்தின் நோக்கம்**

இலங்கையின் ஆரம்ப சுகாதார சேவையின் தரத்தை விருத்தி செய்து தொற்றா நோய் அபாயமுள்ள பிரஜைகளை அடையாளம்கண்டு அந்த நோயைக் கட்டுப்படுத்தல் மற்றும் முகாமை செய்தல்.

## 6. 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (ரூ.மில்.)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/ A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீடு | 2022.12.31 திகதிக்கு மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2023 ஒதுக்கீடு | 2023.12.31 திகதிக்கு முன்னேற்றம | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்ற ம் | சதவீதம் (%) |
| 24,450.15 *1 | 10,997.40 | 45% | 13,000.00 | 12,356.00 | 95% | 23,353.40 | 96% *2 |

## 7. 2023.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

| 2022.12.31 திகதிக்கு பௌதீக முன்னேற்றம் (A) | வருடத்தில் முன்னேற்றம (2023.01.01 முதல் 2023.12.31 வரை) (B) | 2023.12.31 திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) |
|---|---|---|
| 69% | 26% | 95% |

*1. 2019 முதல் 2023 வரை ரூ.மில் 24,450.15 ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கு ரூ.மில் 3,600 பெறப்பட்டுள்ளது. அதன்படி, மொத்த முதலீடு ரூ.மில் 28,050.15 ஆகும்.

*2. 2019 முதல் 2023.12.31 வரை கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை (முதலீடு தொகை) ரூ.மில். 24,450.00 மற்றும் செலவிடப்பட்ட தொகை ரூ.மில்.23,353.40 ஆகும். அதற்கமைய, 2023.12.31 ஆம் திகதி அன்று நிதி முன்னேற்றம் 96% ஆகும்.

## 2.6.12.8. பிரதேச அபிவிருத்தி உதவிக் கருத்திட்டம் (LDSP)

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | 100.84 |
| 2 | கடனுதவி வழங்கும் நிறுவனம் மற்றும் கடன் தொகை (ரூ.மில்) | உலக வங்கி **- 69.42**<br>ஐரோப்பிய ஒன்றியம் **- 24.42**<br>இலங்கை அரசாங்கம் **- 7.00** Us |
| 3 | 3.1 கருத்திட்டக் காலப் பிரிவு (வருடங்கள்) | **3.5** வருடங்கள் |
| | 3.2 ஆரம்பிக்கப்படும் வருடம் / நிறைவடையும் வருடம் | **2019.06.30 – 2024.09.30** |
| 4 | கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் (மாகாண / மாவட்ட / உள்ளூராட்சி நிறுவனம் / பிரதேச செயலகப் பிரிவு / கிராம அலுவலர் பிரிவு / கிராமங்கள்) | வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்கள் |

**5. கருத்திட்டத்தின் நோக்கம்**

உள்ளூராட்சி மன்றங்களின் ஆற்றல்களை வலுப்படுத்தல் மற்றும் அந்தப் பிரதேசங்களில் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் பெறுப்புடனும் வகைகூறும் வகையிலும் உள்ளூராட்சி சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குதல்.

### 6. 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (ரூ.மில்.)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/ A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீடு | 2022.12.31 திகதிக்கு மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2023 ஒதுக்கீடு | 2023.12.31 திகதிக்கு முன்னேற்றம | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 17,749.85 | 3,482.39 | 30% | 6,000.00 | 3,460.00 | 57% | 6,943.15 | 61.56% |

### 7. 2023.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

| 2022.12.31 திகதிக்கு பௌதீக முன்னேற்றம் (A) | வருடத்தில் முன்னேற்றம் (2023.01.01 முதல் 2023.12.31 வரை) (B) | 2023.12.31 திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) |
|---|---|---|
| $BT_1$ -100%<br>$BT_2$, $BT_3$ -99%<br>PPT - 100%<br>$PT_1$ -100%<br>$PT_2$ கட்டம் 1 - 86%<br>$PT_2$ கட்டம் 2,3 – உலக வங்கியின் அனுமதி 2023.12.23 ஆம் திகதி பெறப்பட்டது.<br>$PT_3$ - இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.<br>$BT_4$- இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. | 14%<br>$PT_3$ மற்றும் $BT_4$ கீழ் புதிய கருத்திட்டங்களை அடையாளம் காணும் செயன்முறை மேற்கொள்ளப்படுகின்றது. | 79%<br>$PT_3$ மற்றும் $BT_4$ கீழ் புதிய கருத்திட்டங்களை அடையாளம் காணும் செயன்முறை மேற்கொள்ளப்படுகின்றது. |

### 2.6.12.9. பொதுக் கல்வி நவீனமயமாக்கல் (GEM) கருத்திட்டம்.

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | அ.டொ.மில். 100 |
| 2 | கடனுதவி வழங்கும் நிறுவனம் மற்றும் கடன் தொகை (ரூ.மில்) | உலக வங்கியினால் நிதி வழங்கப்படுகின்றது. |
| 3 | 3.1 கருத்திட்டக் காலப் பிரிவு (வருடங்கள்) | 05 |
| | 3.2 ஆரம்பிக்கப்படும் வருடம் / நிறைவடையும் வருடம் | 2018/2019 - 2024 |
| 4 | கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் (மாகாண / மாவட்ட / உள்ளூராட்சி நிறுவனம் / பிரதேச செயலகப் பிரிவு / கிராம அலுவலர் பிரிவு / கிராமங்கள்) | அனைத்து மாகாணங்களும் |

### 5. கருத்திட்டத்தின் நோக்கம்

ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் தரத்தை அதிகரித்தல் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பை வலுப்படுத்தல்

### 6. 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (ரூ.மில்.)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீடு | 2022.12.31 திகதிக்கு மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2023 ஒதுக்கீடு | 2023.12.31 திகதிக்கு முன்னேற்றம | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 8,699.11 | 5,085.42 | 58% | 4015 | 3,613.69 | 90% | 8,699.11 | 100% |

## 7. 2023.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

**DLI 1 - ஆங்கில மொழி கற்றல் பெறுபேறுகளை மேம்படுத்துதல்**
500 இலக்கு பாடசாலைகளில் குறைந்தது 80% மாணவர்களுக்கு ஆங்கில மொழி கற்றல் பெறுபேறுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கில மொழி கற்றல் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்காக ஆங்கில மொழி கற்றல் (ELLE) திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 500 பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு நேரடி தலையீட்டினால் பயன்களை வழங்குதல்.

**DLI 2 – கணிதம் கற்றல் பெறுபேறுகளை மேம்படுத்துதல்**
இலக்கிடப்பட்ட 500 பாடசாலைகளில் குறைந்தது 80% மாணவர்கள் தங்கள் கணிதம் மற்றும் மொழி கற்றல் பெறுபேறுகளை மேம்படுத்தியுள்ளனர். குறைந்தபட்சம் 500 பாடசாலைகளில் உள்ள மாணவர்கள், கணிதம் மற்றும் மொழிக் கற்றல் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கு கணிதம் கற்றல் மேம்பாடு (MLE) திட்டத்தின் கீழ் நேரடித் தலையீட்டினால் பயனடைகின்றனர்.

**DLI 5 – தொழில்ரீதியாகத் தகுதி பெற்ற புதிய ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்**
20,000 ஆசிரியர்களுக்கு (50% பெண்கள்) மேலதிக தொழில்முறைத் தகுதிகளை வழங்குதல்.

**DLI 9 - விரிவாக்கப்பட்ட பாடசாலை சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்தி செய்து செயல்படுத்தி பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளல்.**
பாடசாலை சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டத்தை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்து செயல்படுத்தி பெறுபேறுகள் அடையப்பட்டுள்ளன - பாடசாலை சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் கோவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது மற்றும் சுகாதார நடைமுறைகளை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

## 2.6.13. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம் (SLILG)

1999 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் உட்பட 8 உத்தியோகபூர்வ உறுப்பினர்கள் மற்றும் அமைச்சின் கௌரவ அமைச்சரால் நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர்கள் உள்ளடங்கிய பணிப்பாளர் சபை நிறுவப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நிர்வாகப் பணிகள் தலைமை நிர்வாக அதிகாரியான பணிப்பாளர் மூலம் மேற்கொள்ளப்படும்.

- **2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரையிலான முன்னேற்றம்**

| பிரிவு | உத்தேச செயலமர்வுகளின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பொறியியல் | 19 | 14 | 614 |
| பொது முகாமைத்துவம் மற்றும் மனித வள அபிவிருத்தி | 28 | 26 | 1,065 |
| பௌதீக வடிவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் | 28 | 28 | 1,094 |
| ஆராய்ச்சி | 21 | 20 | 730 |
| பயிற்சி | 07 | 05 | 200 |
| கணனித்துறை | 29 | 23 | 794 |
| நிதி முகாமைத்துவப் பிரிவு | 30 | 30 | 1,360 |
| சட்டப் பிரிவு | 28 | 14 | 632 |
| ஊடகப் பிரிவு | 11 | 10 | 344 |
| **மொத்தம்** | **201** | **170** | **6,833** |

- UNDP/ CDLG வடக்கு, வடமத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று என்ற வகையில் பின்வரும் இரண்டு தலைப்புகளின் கீழ் 28 செயற்திட்ட தொடர் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

| செயலமர்வின் பெயர் | நடத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கேவையிடல் மற்றும் கோப்பு முகாமைத்துவம் | 14 | 490 |
| சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகாமைத்துவம் | 14 | 448 |
| தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான ஆலோசனை வழிகாட்டல் கையேட்டைத் தயாரித்தல் | 53 | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |






### 2.6.14. உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் (LLDF)

#### 1. நோக்கம்

சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட பொதுப் பயன்பாட்டு சேவைகளை நடத்துவதற்கு சலுகை வட்டியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி வசதிகள் மற்றும் ஒத்துழைப்பை வழங்குதல்.

#### 2. பிரதான செயற்பாடுகள்

இலங்கையில் தற்போது நிறுவப்பட்டுள்ள 23 மகாநகர சபைகள், 42 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் உட்பட 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் நீண்டகால நிதி வசதிகளை வழங்குவதே இந்த நிதியத்தின் முதன்மையான பணியாகும்.

| விடயம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூ.மில்) 2023.12.31 | 2023.12.31 ஆம் திகதிக்கு உண்மைப் பெறுமதி (ரூ.மில்) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| கடன் தொகையை வழங்குதல் | 750 | 389 | 52% |
| கடனை அறவிடுதல் | 955 | 706 | 74% |
| திறைசேரிக்கு செலுத்துதல் (2023.12.31 ஆம் திகதிக்கு) | 367 | 367 | 100% |

## 3. 2023 நான்காவது காலாண்டு வரையிலான செயலாற்றுகை – கடன் வழங்குதல்

### கடன் அனுமதித்தல் - 2023.12.31 ஆம் திகதிக்கு

| தொ.இல | உள்ளூராட்சி நிறுவனம் | | கருத்திட்டம் | பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | வென்னப்புவ | பி.ச | சூரியக் கலன் பொருத்தல் | 28,800,000.00 |
| 02 | நிந்தவூர் | பி.ச | சூரியக் கலன் பொருத்தல் | 22,000,000.00 |
| 03 | ஹக்மன | பி.ச | சூரியக் கலன் பொருத்தல் | 8,000,000.00 |
| 04 | கல்கமுவ | பி.ச | சூரியக் கலன் பொருத்தல் | 30,000,000.00 |
| 05 | கொட்டபொல | பி.ச | வாராந்த சந்தை அபிவிருத்தி | 10,000,000.00 |
| 06 | அக்குரஸ்ஸ | பி.ச | சூரியக் கலன் பொருத்தல் | 5,600,000.00 |
| 07 | கங்க இஹல கோரளே | பி.ச | குருந்துவத்தை சந்தைத் தொகுதி | 30,000,000.00 |
| | **மொத்தம்** | | | **134,400,000.00** |

### கடன் வழங்குதல் - 2023.12.31 ஆம் திகதிக்கு

| தொ.இல | உள்ளூராட்சி நிறுவனம் | | கருத்திட்டம் | பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | புத்தளம் | ந.ச | பொது சந்தைத் தொகுதி நிர்மாணம் | 96,570,000 |
| 2 | பொலன்னறுவை | மா.ந.ச | சந்தைத் தொகுதி நிர்மாணம் | 5,300,000 |
| 3 | உடுபத்தாவ | பி.ச | சந்தைத் தொகுதி நிர்மாணம் | 1,500,000 |
| 4 | வெலிவிடிய திவித்துறை | பி.ச | தகன மேடையை நிர்மாணித்தல் | 14,315,000 |
| 5 | நீர்கொழும்பு | மா.ந.ச | நூலக கட்டிடம் நிர்மாணித்தல் | 52,801,194 |
| 6 | குளியாபிட்டிய | ந.ச | பொது சந்தைத் தொகுதி நிர்மாணம் | 13,471,000 |
| 7 | குருநாகல் | மா.ந.ச | பொது சந்தைத் தொகுதி நிர்மாணம் | 91,792,000 |
| 8 | நுவரெலியா | மா.ந.ச | பொது சந்தைத் தொகுதி நிர்மாணம் | 71,375,000 |
| 9 | அயகம | பி.ச | சந்தைத் தொகுதி நிர்மாணம் | 7,012,000 |
| 10 | கெக்கிராவ | பி.ச | நூலக கட்டிடம் நிர்மாணித்தல் | 18,722,000 |
| 11 | நீர்கொழும்பு | மா.ந.ச | சந்தைத் தொகுதி நிர்மாணம் | 16,100,000 |
| | **மொத்தம்** | | | **388,958,194** |



பிரதீப் யசரத்ன
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## 03 ஆம் அத்தியாயம் - வருடத்தின் மொத்த நிதிச் செயலாற்றுகை

**3.1.** நிதி செயலாற்றுகை கூற்று

**3.2.** கட்டுநிதி செம்மையாக்கல் கூற்று

**3.3.** நிதி நிலமைக் கூற்று

**3.4.** காசுப் பாய்ச்சல் கூற்று

**3.5.** நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**3.6.** வருமான சேகரிப்பு செயலாற்றுகை

| சொத்துக் குறியீடு | குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு | தோகை (ரு) | திருத்திய வருமான மதிப்பீடு % ஆக |
| _ | _ | _ | _ | _ | _ |

**3.7.** ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தும் செயலாற்றுகை

ரூ. ,000

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடு | | உண்மைச் செலவினம் | பயன்படுத்திய ஒதுக்கீட்டை நிறைவுசெய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டுவரும் | 385,000 | 385,000 | 285,271 | 74% |
| மூலதனம் | 29,385,000 | 31,190,000 | 23,177,673 | 74% |

**3.8.** நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் செயலாற்றுகை

ரூ. ,000

| சொத்து குறியீடு | குறியீட்டின் விபரம் | 2023.12.31 ஆம் திகதிக்கு பொருள் சுற்றாய்வுக்கு அமைய மீதி | 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலமை அறிக்கைக்கு அமைய மீதி | எதிர்காலத்தில் கணக்கீட்டுக்கு உட்படக்கூடிய | முன்னேற்றம் % ஆக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 10,000 | | | 100% |
| 9152 | இயந்திர உபகரணங்கள் | 492,299.7 | | | 100% |
| 9153 | காணி | 7,000 | | | 100% |
| 9154 | அறுவச் சொத்துக்கள் | | - | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | - | | |
| 9160 | நடைபெறும் வேலை | | - | | |
| 9180 | குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் | 95,000 | | | 100% |

**3.9.** கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

## 04 ஆம் அத்தியாயம் - செயலாற்றுகை சுட்டிகள்

| தொ. இல | விசேட குறிகாட்டிகள் | ஊத்தேச வெளியீடு சதவீதமாக (%) உண்மை வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | | 100%- 90% | 75%-89% | 50%- 74% |
| 1 | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மட்டத்தில் நடத்தப்படும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | | 85 | |
| 2 | உள்ளூராட்சி சேவைகளை மேம்படுத்த அமைச்சு வரவு செலவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை (உள்ளூராட்சிப் பிரதேசங்கள்) | | | 40 |
| 3 | அமைச்சினால் பெறப்பட்ட ஆண்டு ஒதுக்கீட்டின் பயன்பாட்டுச் சதவீதம் | | | 74.30 |
| 4 | “திண்மக்கழிவு முகாமைத்துவ ஆண்டுத் திட்டங்கள்” (கழிவு சேகரிப்பு/உரமாக்குதல்/மறுசுழற்சி...) தயாரித்து செயல்படுத்திய உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை | | | 60 |
| 5 | குறை தீர்க்கும் பொறிமுறை நிறுவப்பட்டு செயல்படும் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை | 100 | | |
| 6 | நடைபெற்ற மாகாண பிரதம செயலாளர் மாநாடுகளின் எண்ணிக்கை | 100 | - | - |
| 7 | வெளிநாட்டு உதவித் திட்டங்களுக்காக நடத்தப்பட்ட தேசிய வழிநடத்தல் குழு கூட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| 8 | நடத்தப்பட்ட ஆராய்ச்சி/ஆய்வுகளின் எண்ணிக்கை மற்றும் நடத்தப்பட்ட மதிப்பீடுகளின் எண்ணிக்கை | - | - | - |

## 05 ஆம் அத்தியாயம் - நிலையான அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்ளும் செயலாற்றுகை

### 5.1. அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட “இலங்கையின் நிலையான அபிவிருத்தி இலக்கு நியதிகள் - 2017” அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஏற்புடைய இலக்குகள் மற்றும் நியதிகளின் இலக்கங்களை பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| தொ.இல | நோக்கங்கள் | இலக்குகள் | வெற்றிக் குறிகாட்டிகள் | இது வரையில் வெற்றிபெற்ற சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| 1 | **இலக்கு இல . 1**<br>அனைத்து இடங்களையும் உள்ளடக்கிய வகையில் அனைத்து விதமான வறுமைகளையும் ஒழித்தல் | 1.5 | 1.1.1<br>1.2.1 | | | |
| 2 | **இலக்கு இல. 2**<br>பட்டினியை ஒழித்து உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்தை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்துக்கு ஆதவளித்தல் | 2.1<br>2.2<br>2.3<br>2.4<br>2.a | 8.3.1 | | | |
| 3 | **இலக்கு இல .3**<br>ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்தல் மற்றும் அனைத்து வயதினரின் நலன்களையும் மேம்படுத்துதல் | 3.4<br>3.8<br>3.9<br>3.b | 2.2.1<br>3.1.1 | | | |
| 4 | **இலக்கு இல .4**<br>அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் சமமான தரமான கல்வியை உறுதிசெய்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல் | 4.1<br>4.a<br>4.c | 4.1.1<br>4.a.1<br>4.c.1 | | | |
| 5 | **இலக்கு இல. 5**<br>பாலின சமத்துவத்தை உருவாக்குதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுவர்களை வலுவூட்டல் | 5.5<br>5.c | | | | |
| 6 | **இலக்கு இல. 6**<br>அனைவருக்கும் தண்ணீர் மற்றும் சுகாதார வசதியை உறுதி செய்தல் | 6.1<br>6.3<br>6.b | 6.1.1 | | | |

| தொ.இல | நோக்கங்கள் | இலக்குகள் | வெற்றிக் குறிகாட்டிகள் | இது வரையில் வெற்றிபெற்ற சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| 7 | **இலக்கு இல. 9** உறுதியான உட்கட்டமைப்பை உருவாக்குதல், அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவித்தல் | 9.1<br>9.c | | | | |
| 8 | **இலக்கு இல. 10** நாடுகளுக்குள் மற்றும் நாடுகளுக்கு இடையே உள்ள சமத்துவமின்மையை குறைத்தல். | 10.2 | 1.4.1 | | | |
| 9 | **இலக்கு இல. 11** நகரங்கள் மற்றும் மனித குடியேற்றங்களை உள்ளடக்கிய, பாதுகாப்பான, நெகிழ்ச்சியான மற்றும் நிலையானதாக மாற்றுதல். | 11.2<br>11.6<br>11.7<br>11.a | 10.7.2<br>12.4.2 | | | |
| 10 | **இலக்கு இல.12** நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல் | 12.4<br>12.5 | 1.5.3 | | | |

## 5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் அடைந்துள்ள வெற்றிகள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள்

இலங்கையின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் அளவுகோல் - 2017 அறிக்கையின்படி, முழு நாட்டையும் ஒரு அலகாகக் கருதி நிலையான அபிவிருத்தி நோக்கங்களும் இலக்குகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, இலங்கையில் உள்ள அந்தந்த அமைச்சுக்கள், நிறுவனங்கள் அல்லது திணைக்களங்களுக்கு தனித்தனியாக நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் அல்லது இலக்குகள் எதுவும் தயாரிக்கப்படவில்லை. இருப்பினும், இந்த செயலாற்றுகை அறிக்கையின் படிவத்திற்கு அமைய நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் அடைந்துள்ள வெற்றிகள் மற்றும் சவால்களின் விபரங்களை வழங்குதல் வேண்டும்.

இந்த அமைச்சின் கீழ், பல்வேறு துறைகளில் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு, தேசிய அளவில் உள்ளூராட்சித் துறை தொடர்பான கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் நோக்கங்கள் மற்றும் விடயப் பரப்பிற்கு அமைய இந்த அமைச்சு தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த இலக்குகளை அடைவதற்கு, இந்த அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் சில பங்களிப்பைக் கொண்டுள்ளன. மேலும் அந்தந்த நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான பங்களிப்பை அளவிடுவது கடினமாக உள்ளது. குறிப்பாக, அடிப்படை தரவுகள் இல்லாமை, முழு நாட்டினதும் இலக்குகளில் இந்த அமைச்சின் பங்களிப்பை கணக்கிட முடியாமல் இருப்பது மேற்கூறப்பட்ட சிரமத்திற்கு முக்கிய காரணமாகும்.

கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், நெடுஞ்சாலைகள், சுகாதார சேவைகள், குடிநீர் விநியோகம், போக்குவரத்து இணைப்புகள் மற்றும் உள்ளூராட்சித் துறைகள் தொடர்பான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டு, நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 2023 ஆம் ஆண்டில் அடையப்பட்ட முடிவுகள் மற்றும் வெளியீடுகள் மூலம் அது தெளிவாகின்றது.

## 06 ஆம் அத்தியாயம் - மனிதவள விபரம்

| தொ. இல | பதவி | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 01. | சிரேஷ்ட மட்டம் | 34 | 20 | 15 |
| 02. | மூன்றாம் மட்டம் | 4 | 1 | 3 |
| 03. | இரண்டாம் மட்டம் | 135 | 118 | 17 |
| 04. | ஆரம்ப மட்டம் | 46 | 42 | 4 |
| | **மொத்தம்** | **219** | **181-1** | **39** |

**திணைக்கள நியமனங்கள்**

| | | |
|---|---|---|
| 01. | முகாமைத்துவ உதவியாளர் | 21 |
| 02. | சாரதி | 12 |
| 03. | அலுவலக உதவியாளர் | 12 |
| | **மொத்தம்** | **45** |

### 6.2 ** நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு மனிதவளத்தின் குறைபாடு அல்லது மிகை எவ்வாறு தாக்கத்தை செலுத்துகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக.

இந்த நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு அமைய தற்போது பதவிநிலை உத்தியோகத்தர் பதவிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், சாரதி மற்றும் அலுவலக ஊழியர் பதவிகளில் வெற்றிடங்கள் உள்ளன. இது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பணி மற்றும் நோக்கத்தை வினைத்திறனுடனும் விரைவாகவும் மேற்கொள்வதற்கு இடையூறாக உள்ளது. இந்த மனித வள குறைப்பாட்டை தீர்ப்பதன் மூலம் நிறுவனத்தின் செயல்திறனை அதிகரிப்பதற்கு அது பெரும் உதவியாக இருக்கும்.

### 6.3. மனிதவள அபிவிருத்தி

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப் பிரிவு | மொத்த முதலீடு | | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாட்டு / வெளிநாட்டு) | வெளியீடு / பெற்றுக்கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாட்டு (ரூபா) | வெளிநாடு (அ.அ.டொ. / பவுன்) | | |
| 01. | சாரதிகளை அறிவூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 12 | 2023.01.19 | 8320.00 | - | உள்நாடு | வாகன ஓட்டிகளுக்கு போக்குவரத்து விதிகள், வாகனம் ஓட்டும் போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் மற்றும் வீதி விபத்தை எதிர்கொள்ளும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. |

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப் பிரிவு | மொத்த முதலீடு | | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாட்டு / வெளிநாட்டு) | வெளியீடு / பெற்றுக்கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாட்டு (ரூபா) | வெளிநாடு (அ.அ.டொ. / பவுன்) | | |
| 02. | தனிநபர் கோவையைப் பேணுதல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 2023.03.23 /24 | 9500.00 | - | உள்நாடு | முறையான தனிப்பட்ட கோப்பைப் பராமரிப்பது குறித்த அடிப்படை அறிவு வழங்கப்பட்டது. |
| 03. | உள்ளக கணக்காய்வுப் பரீட்சயம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 2023.03.24 | 13,000.00 | - | உள்நாடு | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விதம் குறித்து அறிவூட்டப்பட்டது. |
